
# யாழ் சுண்டுக்குளி சாமுண்டாபிகா சமேத அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர்



## மகாகும்பாபிஷேக சிறப்பு மலர்




**MPS BROTHERS**
PRIVATE LIMITED

No 38, Elanthaikulam Road,
Colombagam, Jaffna,
SriLanka.
+94 (0) 776235884
+94 (0) 770552652

**MSR Solutions SDN BHD**
(862137-X)
132, Jalan Duyoung 5,
Taman Duyong,
Seramban 70200, Malaysis.
+60 67622243
+60 (0) 103697433

Mr.M.Sivanantharajan
*Chairman*

Kmsrajan@yahoo.com
Timber import, Whole sale & Retailers

# யாழ் சுன்டுக்குளி சாமுண்டாம்பிகா சமேத அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர்

## மகாகும்பாபிஷேகதின சிறப்பு மலர்

2017

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# யாழ் சுண்டுக்குளி சாமுண்டாபிகா சமேத அருள்மிகு ஸ்ரீ ஞானபைரவர்

# மகாகும்பாபிஷேகதின சிறப்பு மலர்

**2017**

8473 (P)
PL
Ar uk



## யாழ், சுண்டுக்குளி சாமுண்டாம்பிகா சமேத ஞானபைரவர்
## புனருத்தாரண மகா கும்பாபிஷேகம்

ஸ்ரீமத் தக்ஷிண கைலாசம் எனப்போற்றப்படும் இலங்கைத்தீவில் வடபால்
யாழ்ப்பாண நன்னகரில் சுண்டுக்குளி கிராமத்தில் எழுந்தருளியிருக்கும்
ஞான பைரவர் ஆலய புனருத்தாரண மகாகும்பாபிஷேகம், துர்முகி வருடம்
ஆவணித்திங்கள் 5ம் நாள் (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை
உத்தரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய, சுபயோக சுபதினத்தில்
காலை 9.05 மணி முதல் காலை 10.35 மணிவரையுள்ள
கன்னிலக்ன சுபமுகூர்த்தத்தில்

## கிரியா கால நிகழ்வுகள்

துர்முகி வருடம் ஆவணித்திங்கள் 3ம் நாள் (19.08.2016)
வெள்ளிக்கிழமை, காலை 6.05 மணிமுதல் 7.35 மணிவரையுள்ள
மேடலக்ன சுபமுகூர்த்தத்தில் அனுக்ஞை, வாஸ்துசாந்தி, கணபதி ஹோமம், நவக்
கிரக ஹோமம் என்பன நடைபெறும். அன்று இரவு 8.31 மணி
தொடக்கம் இரவு 9.11 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் பிம்பஸ்தாபனம் நடைபெறும்.
20.08.2016 சனிக்கிழமை காலை புண்யாவாசனம், பால்காப்பு
என்பன நடைபெறும். அன்று மாலை 6 மணியளவில்,
புண்யாவாசனம் பிம்பசுத்தி நடைபெறும்.
21.08.2016 ஞாயிற்றுக்கிழமை, திருதியை திதியும், உத்திரட்டாதி
நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய காலை 9.05 மணிமுதல்
காலை 10.35 மணிவரையுள்ள கன்னிலக்ன சுபமுகூர்த்தத்தில்
கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது

**பிரதமகுரு**
**மகாதேவ சோமசுந்தர சிவாச்சார்யார்**
**(தர்மசாஸ்தா குருகுலம்)**

அறிவுறுவோர் சங்கம்

திரு.ஆர்.சந்திரபோஸ் , திரு.ச.மனிதரன்,
திருமதி.ப.மாலினி, திருமதி.ப.பவித்ரா



## உள்ளடக்கம்

### ஆசிச்செய்திகள்


- வடமாகாண முதலமைச்சர் நீதியரசர் க. வி. விக்னேஸ்வரன் அவர்களின் ஆசிச்செய்தி
- தர்மசாஸ்தா குருகுல காயத்ரிபீட அதிபர் சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி
- நல்லை திருஞான சம்பந்த ஆதின குருமஹாக சந்நிதான சுவாமி ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய அவர்களின் ஆசிச்செய்தி
- சின்மையா மிஷன் வதிவிட ஆச்சாரியாரி பிரம்ச்சாரி ஜாக்ரத சைத்தன்யா அவர்களின் ஆசிச்செய்தி
- கும்பாபிசேக பிரதம குரு மா. சோமசுந்தரகுருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி
- நல்லூர் கந்தசுவாமி ஆலய சிவஸ்ரீ முத்து வைகுந்தவாசக் குருக்கள் வாழ்த்துரை
- ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ பா. பாலகிருஸ்ணகுருக்கள் அவர்களின் ஆசிச்செய்தி
- பாண்டியன் தாழ்வு அருள்மிகு நரசிம்ம வைரவர் ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ ச. இராஜசேரக்குருக்கள் ஆசியுரை
- கொய்யாந்தோட்டம் செல்வ விநாயகர் ஆலய குரு பிரம்மஸ்ரீ கணேசஐயர் கேசவசர்மா அவர்களின் ஆசிச்செய்தி
- முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச்செய்த


### கட்டுரைகள்


- யோகவாசிஷ்டம் வாசிஷ்டர் - ஸ்ரீராமர் கீதை - பேராசிரியர். கலாநிதி S. ஸ்ரீசற்குணராஜா
- பைவரவத் திருக்கோலங்கள் - திரு. ச. பத்மநாபன்
- வைரவர் வழிபாடு - திரு. எஸ். கே. என் தவராஜா
- வைரவரின் வாகனம் - திரு. க. நாகஜெயகுமாரன்


### பிரதேச ஆலய பரிபாலன சபையினரின் வாழ்த்துச்செய்தி


- சுண்டுக்குளி தெற்கு கிராம அலுவலரது வாழ்த்துச்செய்தி
- அருள்மிகு ஞான வைரவர் அர்ச்சனை மாலை (108) வைரவர் புராணம்
- கொய்யாத்தோட்டம் அருள்மிகு செல்வ விநாயகர் ஆலய நிர்வாக சபை தலைவரினது ஆசிச்செய்தி
- பாண்டியன் தாழ்வு நரசிம்ம ஞான வைரவர் தேவஸ்தான பரிபாலனசபை தலைவரது ஆசிச்செய்தி
- செல்லத்துரை சோமசுந்தரம் அவர்களின் ஆசிச்செய்தி
- கொய்யாத்தோட்டம் அருள்மிகு செல்வ விநாயகர் ஆலய செயலாளரின் ஆசிச்செய்தி
- நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோன்பு அபிவிருத்தி ஒன்றிய தலைவரின் ஆசிச்செய்தி
- ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஞான வைரவர் ஆலய செயலாளர் அவர்களின் ஆசிச்செய்தி
- கடல் கடந்த அன்பர் ஒருவரின் ஆசிச்செய்தி

**சிறப்புக்கட்டுரைகள்**


- ✠ பைரவர் 108 போற்றி
- ✠ ஸ்ரீபைரவர் வழிபாடும் மந்திரங்களும்
- ✠ பைரவரைப் போற்றும் தேவாரப் பதிகம்
- ✠ பைரவர் வழிபாடும் அதன் சிறப்புகளும்
- ✠ துன்பம் நீங்கி இன்பம் பெற பைரவர் வழிபாடு
- ✠ ஒவ்வொரு மாதமும் வழிபட வேண்டிய பைரவர்கள்
- ✠ ஸ்ரீ - சௌபாக்ய பைரவர்
- ✠ ஸ்ரீ பைரவர்
- ✠ விளக்கு ஏற்றுவதன் பலன்
- ✠ கிரக தோஷம் போக்கும் ஆதிபைரவர்!
- ✠ 64 பைவர்கள் மற்றும் அவர்களின் சக்திகள்
- ✠ கால பைரவர் தோன்றிய கதைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா?

**நன்றியுரை –** திரு. வ. குமரதீபன்

- ✠ ஆலய புனருத்தாரண நிதிப்பங்களிப்பும் வரவுசெலவுக் கணக்கும்

# நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

முதலமைச்சர் - வட மாகாணம்

# විනිසුරු සී.වී. විග්නේශ්වරන්

ප්‍රධාන අමාත්‍ය - උතුරු පළාත

# Justice C.V.Wigneswaran

**Chief Minister – Northern Province**

நிதியும் திட்டமிடலும், சட்டமும் ஒழுங்கும், காணி, மின்சக்தி, வீடமைப்பு நிர்மாணம், சமூக சேவைகள், புனர்வாழ்வளித்தல், மகளிர் விவகாரம், தொழிற்துறையும் தொழில்முனைவோர் மேம்பாடும், சுற்றுலா, உள்ளூராட்சி மற்றும் மாகாண நிர்வாக அமைச்சர்

මුදල් හා ක්‍රමසම්පාදන, නීතිය හා සාමය, ඉඩම්, විදුලිබල, නිවාස හා ඉදිකිරීම්, සමාජ සේවා හා පුනරුත්ථාපන, කාන්තා කටයුතු, කර්මාන්ත හා ව්‍යවසාය ප්‍රවර්ධන, සංචාරක, පළාත් පාලන සහ පළාත් පරිපාලන, අමාත්‍යවරයා

Minister of Finance and Planning, Law and Order, Lands, Electricity, Housing and Construction, Social Service, Rehabilitation, Women's Affairs, Industries and Enterprise Promotion, Tourism, Local Government and Provincial Administration




எனது இல / මගේ අංකය / My No: NP/CM/media/18/05/2017

திகதி / දිනය / Date: 18.05.2017

## வாழ்த்துச் செய்தி

சுண்டுக்குளி மூலாய் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலய மகா கும்பாபிஷேக பெருவிழாவை முன்னிட்டு வெளியிடப்படவிருக்கும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

இந்த வைரவர் ஆலயம் காலத்திற்குக் காலம் பொது மக்களின் பங்களிப்புடனும் பரம்பரையாக இவ் ஆலயத்தை விளக்கேற்றி பூசை வழிபாடுகளை மேற்கொண்டுவந்த வம்சத்தவர்களுடனும் இணைந்துகொண்டு மீளப் புனரமைத்து சிறிய அழகான ஒரு வைரவர் ஆலயமாக உருவாக்கப்பட்டுள்ளது.

காத்தல் தெய்வமாக விளங்கும் வைரவப் பெருமான் இரவு வேளைகளில் தமது ஆலயத்தை சூழவுள்ள பொது மக்களைக் காத்தருள்வதற்கும் அருள்பாலிப்பதற்குமாக வீதி வலம் வருவதென்பது மக்களின் நம்பிக்கை.

மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது என்ற கூற்றுக்கு அமைவாக இவ் ஆலயம் சிறிய ஒரு ஆலயமாக அமைந்துள்ள போதும் அதன் அருட்கடாட்சம் பரந்த அளவில் அப்பகுதி மக்களுக்கு கிட்டுவதாகவும் எக் காரியத்தை முன்னெடுக்கும் போதும் முதலில் வைரவப் பெருமானை வணங்கித் துதித்து ஆரம்பிக்கின்ற அனைத்துக் கைங்கரியங்களும் சிறப்புற நிறைவுறுவதாகவும் அங்கு வாழ் மக்கள் கூறுகின்றார்கள்.

இவ் ஆலயத்தின் சிறப்பு நிகழ்வுகளில் விசாகப் பொங்கல் விழா முதன்மை பெற்றது.

இவ் ஆலயத்தின் கும்பாபிஷேக நிகழ்வுகள் இனிதே நிறைவுற இறைவனைப் பிரார்த்தித்து கும்பாபிஷேக மலர் சிறப்புடன் வெளிவர எனது ஆசிகளையும் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
முதலமைச்சர்
வடமாகாணம்


A9 வீதி, கைதடி, யாழ்ப்பாணம் / A9 පාර, කයිතඩි, යාපනය / A9 Road, Kaithadi, Jaffna

தொலைபேசி / දුරකථන / Telephone: 021 221 7311, 021 221 7313

தொலைநகல் / ෆැක්ස් / Fax: 021 221 7227, 021 221 7310

மின்னஞ்சல் / විද්‍යුත් තැපෑල / email: cmofficenorthernpc@gmail.com


Sivasri 'Sivaakamagana Baaskaran'

**T.MAHADEVA KURUKKAL**

Dharmasasta Gurukulam

*GAYATRI PEEDAM*

*Inuvil, Chunnakam*

*TelePhone:* 021 224 1560

'சிவாகமஞான பாஸ்கரன்'

**சிவஸ்ரீ தா.மஹாதேவக் குருக்கள்**

அதிபர், தர்மசாஸ்தா குருகுலம், காயத்ரீ பீடம்

ஸ்ரீ கன்னகாபரமேஸ்வரி தேவ்யாலயம்

இணுவில், சுன்னாகம்.

திகதி.............................................


---

# தர்மசாஸ்தா குருகுல காயத்ரிபீட அதிபரின் ஆசிச்செய்தி



தமிழ் மக்களுடைய அதுவும் சைவ சமய மக்கள் தம்வீட்டைச் சுற்றிவர பல ஆலயங்கள் இருந்தாலும் தாங்கள் மட்டும் ஆராதித்து வணங்குவதற்கு சிறிய ஆலங்களை தம் வீட்டிற்கு பக்கத்தில் நிர்மாணித்து பூசைகைங்கர்யங்களை செய்து வருவார்கள் இந்த பாரம்பர்யத்தில் சுண்டுக்குளியைச் சேர்ந்த அன்பர் ஒருவர் அவர்களும் தன் வீட்டிற்கு பக்கத்தில் பைரவர் ஆலயம் அமைத்து மஹாகும்பாபிஷேகம் நடாத்தி ஒரு பைரவப் பெருமானின் பெருமைகளைக் கூறும் நூலை வெளியிட முன்னிற்கிறார். முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை அவர்களும் இதற்கு உறுதுணையாக நிற்பது வரவேற்க கூடியது. அவர்களும் அவர்தம் தடும்பத்தினரும் பைரவப் பெருமான் திருவருளுடன் சிறப்பாக வாழவும் நூல் வெளியீடு நன்றாக நடைபெறவும் ஆசி கூறுகிறேன்.

சிவஸ்ரீ தா. மகாதேவக்குருக்கள்



உ

சிவமயம்

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்



ஸ்தாபகர் :- ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

முதலாவது குருமஹா சந்நிதானம்

ஆதீன குரு முதல்வர் :- ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்

இரண்டாவது குருமஹா சந்நிதானம்

**ஸ்தாபிதம் : 1966**

021 222 2870

பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.

22/07/2016



## நல்லை திருஞான சம்பந்த ஆதின குருமஹாக சந்நிதான சுவாமிகளின் ஆசிச்செய்தி

அன்புசார் பெருதகையீர்!

சுண்டுக்குளி ஞான வைரவர் ஆலயத்தில் இன்று நடைபெறும் மகா கும்பாபிஷேகம் 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் அபிசேகம் நடைபெறுவது மகிழ்ச்சியை தருகின்றது. காவல் தெய்வமாக விளங்கும் வரைவப் பெருமான் இவ் ஆலயத்தில் நீண்டகாலமாக ஞானவைரவப் பெருமானது எழுந்தருளி இருந்துவேண்டுவோர் வேண்டுவனவாகின்றவனாக எழுந்தருளி உள்ளார். இவ் ஆலயம் பல சிறப்புக்களை தன்னகத்தே கொண்டு உள்ளது. இக் கும்பாபிஷேகம் ஆலயத்திற்கும் மக்களுக்கும் புனிதத்தை ஏற்படுத்துவதாக அபிஷேகத்தை அனைவரும் தரிசனம் பண்ணி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக. இவ் அறப்பணியை செய்து அனைத்து அன்பு உள்ளங்களையும் இறைவன் ஆசீர்வதிப்பாராக. வெளிவரும் மலர் அனைவரது பயனையும் தரக் கூடியதாக அமையட்டும்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

CHINMAYA MISSION OF SRI LANKA
(Incorporated by Act No: 28 of 1981, of Parliament of Democratic Socialist Republic of Sri Lanka)
32, - 10TH LANE, COLOMBO 03, SRI LANKA TEL : + 94 11 2591344
SHRI BHAKTA HANUMAN TEMPLE & ASHRAM, WAVENDON HILLS, RAMBODA, SRI LANKA. TEL : +94 52 2259645.
web: www.chinmayalanka.org email: info@chinmayalanka.org



# சின்மையா மிஷன் வதிவிட ஆச்சாரியாரின் ஆசிச் செய்தி

சின்மயா மிஷன்,
சின்மய ஞானவேல்,
09, செட்டித்தெரு ஒழுங்கை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தொன்று தொட்டு எம்மிடையே குல தெய்வ வழிபாட்டு வழக்கம் இருந்து வருகின்றது. எமது பிரதேசத்தில் ஏற்பட்ட நெருக்கடிகள் காரணமாக இவ்வாறான வழிபாட்டிடங்களை பல அழிவுற்று சிதைவடைந்துள்ளன. இவ்வாறு சேதங்களுக்குள்ளான சுண்டுக்குளி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் தற்பொழுது புனரமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறுவது சிறப்புக்குரியது.

இப்பணியில் ஒன்றுபட்டு உழைக்கும் புனருத்தாரண சபையின் பணி போற்றுதற்குரியது. கீதையில் பகவான் கிருஷ்ணர் "எந்த ஒரு செயலையும் நான் செய்கின்றேன் என்ற அகம்பாவம் இன்றி, பலனை எதிர்பாராது யக்ஞ பாவத்துடன் மக்கள் ஒன்றிணைந்து செயற்படும் போது அதன் சக்தி வலுவானது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு பணிகளைச் செய்து ஞானவைரவப் பெருமானின் அருளைப் பெற வேண்டும் என்றும், கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், அதன் போது வெளியிடப்படும் மலர் சிறப்புற வெளி வரவும் ஆசி வேண்டி ஞானவைரவப் பெருமானையும் பூஜ்ய குருதேவரையும் பிரார்த்திக்கின்றோம்.

இறைபணியில்,

பிரம்ச்சாரி ஜாக்ரத சைதன்யா
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்,
யாழ்ப்பாணம்.

# கும்பாபிசேக பிரதம குருவின் ஆசிச்செய்தி



சிவனின் அறுபத்துநான்கு திருமேனிகளில் ஒருவராக பைரவர் கருதப்படுகின்றார். அந்தகாசுரன் எனும் அசுரன் சிவபெருமானிடம் பெற்ற வரத்தால் ஆணவம் கொண்டு தேவர்களையும் முனிவர்களையும் அழித்தான். சிவனிடமிருந்து பெற்ற இருள் எனும் சக்தியால் உலகை இருள்மயமாக்கி ஆட்சி செய்தான். தாருகாபுரத்தை எரித்த களலாக்கினியை பெண் வடிமாக்கி அந்தகாசுரனை அழிக்க சிவபெருமான் ஏவினார். பெண்வடிவிலிருந்து வெளிப்பட்ட அக்னி அசுரனைச் சுட்டெரித்தது அதன்பின் அந்தப் பெண்வடிவு சிவனின் உடலில் புகுந்து எட்டுக் குழந்தைகளாக உருவாகியது. அதற்கு சிவன் பைரவர் எனப் பெயர் சூட்டினார். எனவே பைரவர் சிவ அம்சமாகவே கருதப்படுகின்றார்.

தட்சனின் யாகத்தீயில் விழுந்து இறந்த சதிதேவியின் உடல் திருமாலின் சக்ராயுதத்தால் பூமியில் சிதறுண்டு விழுந்தது. உடல் சிதறுண்டு விழுந்த இடங்களை சிவபெருமான் சக்தி பீடமாக மாற்றினார். இவை அறுபத்துநான்கு சக்தி பீடங்களாகும். இச் சக்தி பீடங்களை அசுரர்களிடமிருந்து காக்க ஒவ்வொரு பீடத்திற்கும் ஒவ்வொரு பைரவரை காவல் தெய்வமாக சிவன் நியமித்தார்.

படைப்புக் கடவுளாம் பிரமன் தனது படைப்பாற்றிலினால் அளவற்ற கர்வம் கொண்டு தானே சிவனைவிடப் பெரியவன் என்றிருந்த போது சிவனது ஆணையினால் பைரவர் பிரமனின் ஐந்து தலைகளுள் ஒன்றைக் கொய்தவர்.

பைரவரின் திருக்கோலங்களுள் அஷ்டபைரவர்கள் (எட்டுவகையான) தனிச் சிறப்புடையவர்கள்

1. அசிதாங்க பைரவர்
2. ருரு பைரவர்
3. சண்ட பைரவர்
4. குரோத பைரவர்
5. உன்மத்த பைரவர்
6. கபால பைரவர்
7. பீஷண பைரவர்
8. சம்ஹார பைரவர்

ஆலயங்களில் தினமும் முதற்பூஜையும் இறுதிப் பூஜையும் இவரிற்குரியதாகும். அவ்வாறே மகோற்சவ காலங்களில் மகோற்சவ ஆரம்ப முதல்நாளும் இறுதிநாளும் பைரவரிற்கு விசேட வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

பைரவரிற்கு பல ஆயுதங்கள் காணப்பட்டாலும் திரிசூலம் முக்கியமாக உள்ளது. சிரிசிலே சந்திரனைத் தரித்தவர், மூன்று கண்களை உடையவர். நாயை தமது வாகனமாகக் கொண்டவர். வேதங்களின் வடிவமாக நாய் கருதப்படுகின்றது.

நவக்கிரகங்களில் ஒருவராக சனீஸ்வரன் பைரவரை நோக்கித்தவமிருந்து அருள் பெற்றவர். இதனால் சனீஸ்வரனினால் ஏற்படும் தோஷங்கள் நீங்க பைரவர் வழிபாடு சிறந்தது. பில்லி, சூனியம், ஏவல், பேய், பிசாசு தொல்லைகளில் இருந்து விடுபட,

திருமணத்தடை நீங்க, நோய்கள் விலக, கடன் தொல்லை நீங்க இவரை வழிபட்டு பயன் பெறலாம்.

இலங்கையில் பல கிராமங்களில் காவற்கடவுளாகக் காணப்படும் பைரவர் பலரது வீட்டுவளவிற்குள்ளும், பாடசாலைகளிலும் வணங்கப்படுகின்றார்.

துன்பங்களை நீக்கி, கொடுமைகளை அழித்த, இன்பகளைத் தருபவர் பைரவர். சித்திரை, ஐப்பசி, மாதங்களில் வரும் பரணி நட்சத்திரம் பைரவரிற்கு சிறப்புடையதாகும்.

காவற் கடவுளான, சிவ அம்சமான பைரவரை நாமும் வழிபட்டு இன்புற்று வாழ்வோம்.

மா. சோமசுந்தரக்குருக்கள்
கும்பாபிசேக பிரதமகுரு



# நல்லூர் பிரதமகுருவின் வாழ்த்துரை



"அவனின்றி ஓரணுவும் அசையாது
எவ்வுயிரின் எச்செயலும் இறைவனே
செயல் எனதன்று, செயலின் பெறுபேறும்
எனக்கன்று"

இக்கூற்றின் மகத்துவத்தை வெளிப்படுத்தும் வகையில் யாழ்ப்பாணத்தின் சுண்டுக்குளியின் மத்தியின் தனிச்சிறப்போடும் பொலிவுடனும் அருள்மிகு ஞானவைரவர் ஆலயம் பாலிக்கப்பட்டிருக்கின்றது. இத்தலத்தின் கும்பாபிஷேக வைபவத்தினையும் அதனைத் தொடர்ந்த நிகழ்வுகளையும் முன்னிட்டு புத்துருவாகும் இம் மலருக்கு எனது ஆசீர்வாதமும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

பூவுலகில் நாம்பிறந்த நோக்கத்தையும் நாம் அடைய வேண்டிய இலக்கையும் நமக்கு உணர்த்தும் இறைவனின் உறைவிடமே திருக்கோவில். நம் எண்ணங்களை உயர்த்தி மனத்தூய்மை ஏற்படுத்தி நமக்கு பத்தி நெறியூட்டி முத்தி தந்தருளும் தெய்வீக சந்நிதியாக இவ் ஆலயம் சிறப்புகிறது. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்ற ஔவையாரின் வாக்கும், திருக்கோவிலில்லாத திருவலூரும் அடவிக்காடே என்ற அப்பர் பெருமானின் வாக்கும் கோவிலின் மகத்துவத்தை நன்கு விளக்குகின்றது.

இத் திருக்கோவிலை அமைக்க எண்ணுவதும், இந்துப் பண்பாடு பாரம்பரியங்களை வளர்க்க எண்ணுவதும், அவற்றை பொறுப்பேற்று நடப்பதுமவும் சைவசமயத்தவர்களுக்கு தீர்காயுளையும் நற்சந்ததியையும், சகல சௌபாக்கியங்களையும் தந்தருளும்.

மேலும்சமூகத்தின் உயிர்மையங்களாகத் திகழும் கோயில்கள் ஆன்மீக நிலையங்களாக மட்டுமன்றி கலைகளை வளர்க்கும் கலாமன்றங்களாகவும், பசிப்பிணி போக்கும் இடமாகவும், அறிவூட்டும் அறிவாலயங்களாகவும் பல்வேறு பரிமாணங்களில் இவ் ஆலயம் திகழ்கின்றது. தன்மை வழிபடும் அடியார்களுக்கு பிணி, பகை, குறை தீர்த்து பிறவிப் பிணிக்கு மருந்தாக இப்பெருமான் அருள்புரிந்து வருகின்றான்.

இத்தகைய சிறப்புடைய இவ்வாலயத்தின் திருப்பணிகள் கிராமமக்கள் முயற்சியுடன் இனிதே முடிவடைந்து மகாகும்பாபிஷேக நிகழ்வும் மிகச் சிறப்புடன் நடைபெற்றது.

சைவசமயத்தவர்களின் மேம்பாட்டிற்கும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணும் வகையில் இவ் ஆலயம் உருவாக்கப்பட்டு தெய்வ அருளும், வரலாற்று பெருமையும் நிறைந்த ஆலயமாக மென்மேலும் திகழவேண்டுமென என்றென்றும் ஆசீர்வதிக்கின்றேன்.

சிவஸ்ரீ முத்து வைகுந்தவாசக் குருக்கள்

# கலட்டிப்புலம் ஞான வைரவர் கோயில் பிரதமகுருவின் ஆசிச் செய்தி



இலங்கைத் திருநாட்டில் யாழ்ப்பாணத்தின் சுண்டுக்குழி நகரின் மூளாய் வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் என்னும் நாமம் கொண்டு வீற்றிருந்து திருவருள் பாலித்து வரும் வைரவர் கோவில் புனரமைக்கப்பட்டு கும்பாபிசேகம் 2016இல் நடைபெற்றது.

இவ் ஆலயம் மேன் மேலும் வளர ஞான வைரவரின் திருவருளோடு குரு அருளும் கிடைக்க ஆசி கூறுகின்றேன்.

"சர்வே ஜனகா சுகினோ பவந்து"

சிவாச்சரிய ஜோதி
சிவ ஸ்ரீ பா.பாலகிருஷ்ணக் குருக்கள்
ஈச்சமோட்டை
கலட்டிப்புலம் ஞான வைரவர்
கோயில் பிரதமகுரு

சிவாச்சரிய ஜோதி
சிவ ஸ்ரீ பா.பாலகிருஷ்ணக் குருக்கள்
ஈச்சமோட்டை
கலட்டிப்புலம் ஞான வைரவர் கோயில்
பிரதம குரு



# பாண்டியன் தாழ்வு அருள்மிகு நரசிம்ம வைரவர் ஆலய பிரதமகுருவின் ஆசியுரை



பூவுலகின் கண்ணே பிறந்த மக்கள் ஆன்மாக்கள் தாம் தாம் செய்த தீவினைகளை நீக்கி நல்வினைப் பயனை அடைந்து இஷ்ட சித்திகளைப் பெற்றுய்வதற்காகவே தொன்று தொட்டு எல்லா இடங்களிலும் ஆலயங்களை அமைத்து விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்து நித்தியம் நைமித்தியம் காமிகம் என்ற முறையில் கிரியை நெறிகளை வழுவாது செய்து வழிபாடுகளை இயற்றி சகல நலன்களையும் அதன் வாயிலாகப் பெறக் கூடியதாக அமைகிறது. அந்த வகையில் சுண்டுக்குழி மாநகரில் கோவிற்பற்று மாவிளங்கையடி அருள்மிகு ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் அமையப் பெற்றுள்ளது.

மேலும் ஓர் ஆலயத்தை முறைப்படி அமைத்து விக்கிரகங்களைப் பிரதிஷ்டை செய்து மஹாகும்பிஷேகம், நித்திய உற்சவங்கள் நடாத்தி திரிசிப்பது மானுடப் பிறவியின் பலனே எனக் கூறல் மிகையாகது. அண்டங்கள் எங்கும் வியாபித்து இருக்கும் இறை சக்தியை ஆன்மாக்கள் வழிபட்டு உய்யும் பொருட்டு குறிப்பிட்ட ஒரு சிலை வடிவில் அதை நிலை நிறுத்தும் கிரியையே கும்பிஷேகம் அல்லது பிரதிஷ்டை எனப்படுகிறது. "திஷ்ட" என்கின்ற சமஸ்கிருத வினையடிக்கு "நிறுத்தல்" என்பது கருத்து அத்தோடு "பிர" என்கின்ற உபசர்க்கம் இணைத்து "பிரதிஷ்டா" என்ற சொல் சிறப்பாக நிலைநிறுத்தல் எனும் பொருளுடையதாகின்றது. ஆன்மாக்கள் லயப்படும் இடம் ஆலயம் ஆகின்றது. இவ்வாறான ஆலயமானது ஆகம மரபிற்கு ஏற்ப அமைக்கப் பெற்று கட்புலனாகாத தெய்வங்களை கண்ணெதிரே வடிவமைத்து நிறுத்தி மந்திர, தந்திர கிரியா மார்க்கங்களால் வழிபடும் உபாயங்களை வகுத்துத் தந்துள்ளது.

இங்ஙனம் அனைவரினதும் ஒத்துழைப்பாலும் கொடை வள்ளல்களில் பெரும் பங்களிப்பினாலும், சிவாச்சாரியார்களுடன் இணைந்து நடாத்துகின்ற பிரதிஷ்டா மஹாகும்பாபிஷேகம் பெருவிழா இனிது நிறைவெய்தி அடியார்கள் யாவரும் ஞான வைரவப் பெருமானின் அருள்கடாஷ்த்திற்குப் பாத்திரமாகி திருவருள் பெறுவதற்கும் இக் கும்பாபிஷேக மலர் அருள் மணம் கமழும் தெய்வீக மலராக மணம் பரப்பவும் எல்லாம் வல்ல மாவிளந்கையடி ஸ்ரீ ஞான பைரவ பெருமானின் பாதகமலங்களை வணங்கி நல்லாசி கூறுகின்றேன்.

"லோகா ஸமஸ்தா ஸகிநோ பவந்து'


பிரம்மஸ்ரீ ச. இராஜசேரக்குருக்கள்

S.RAJASEKARAKURUKKAL
(Chief Priest)
Arulmigu Nara Simmagana Vairava Kovil
Colombothurai Road,
Pandiyanthalvu
Jaffna.

# கொய்யாத்தோட்டம் செல்வ விநாயகர் ஆலய குரு அவர்களின் ஆசிச்செய்தி



ஆங்கிலேயர், போர்த்துக்கீசர், டச்நாட்டவர்கள் இலங்கையை கைப்பற்றி ஆட்சி செய்த காலங்களில் அவர்களால் பல சைவ ஆலயங்கள் அழிக்கப்பட்டும் சைவ மக்களை கட்டாய மதமாற்றங்கள் செய்தும் சைவ ஆலயங்கள் அமைந்த இடங்களில் தமது மத ஆலயங்களை அமைத்த சைவதம வழிபாடுகளை வெளிப்படையாக அனுட்டிக்க அனுமதிக்காமையாலும் சைவ மக்கள் தங்கள் வீடுகளில் அமைந்துள்ள காணிகளில் கற்களை தமது குல தெய்வங்களாக நாட்டி வணங்கி வந்தார்கள் அதன் மறுமலர்ச்சியே காலப் போக்கில் சூல வழிபாடாகவும் குடும்பக் கோயிலாகவும் மாற்றம் பெற்றது.

இந்தியாவில் தமிழ் நாட்டில் இன்றும் வீரர்களையும் மற்றும் ஊர்மக்கள் சிலரையும் கிராமங்கில் எல்லைச்சாமி, கருபன்சாமி, மாடசாமி என்ற பெயரில் குலதெய்வங்களை வணங்கி வருகின்றமை இன்றும் உள்ளது.

ஈழத்தமிழ் நாட்டில் அன்னமார் கோவில் என்ற பெயரிலும் பல கிராமங்களில் வழிபாடுகளும் இன்றும் நடைபெறுகின்றது.

இவ்வகையில் சுண்டுக்குளியில் தொன்றுதொட்டு வைரவர் வழிபாடு இருந்து வந்துள்ளது. இது போர்க்கால சூழ்நிலைகளால் அழிவடைந்து இருந்தது. இதனை இவ்வூர் மக்கள் இவ்வளவு அழகாக புனருத்தாரனம் செய்து கும்பாபிசேகம் செய்வதை காண்பது மட்டற்ற மகிழ்ச்சியாக உள்ளது. அனைவருக்கும் வைரவ பெருமான் அருள் கிடைக்கப் பெறவேண்டும் என பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

பிரம்ம ஸ்ரீ கணேசஐயர் கேசவ சர்மா<br>
ஆலய குரு<br>
கொய்யத்தோட்ட செல்வ விநாயகர் ஆலயம்

# முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் வாழ்த்துச் செய்தி



சுண்டிக்குளி, ழீளாய் வீதியில் அமைந்திருக்கும் அருள்மிகு ஞான வைரவர் ஆலயச் சிறப்பு மலருக்குச் ஆசிச் செய்தி எழுதுவதில் மிகுந்த மகிழ்ச்சியடைகின்றேன். திரு.பி சந்திபோஸ் குடுத்தவர்கள் தங்கள் வீட்டு வளவில் அமைந்துள்ள இவ்வாலயத்தை சிறப்பாக பராமரித்த வந்ததுடன் தங்கள் குலதெய்வமாக வழிபட்டு வந்தனர். இவ் ஞானவைரவர் காலக்கிரமத்தில் அயலில் வாழ்ந்த இந்துக் குடும்பங்களின் காவல் தெய்வமாக மாறினார். இங்கு வழிபட்ட அடியார்கள் ஞான வைரவரின் அருளால் ஈர்க்கப்பட்டனர்.

இவ்வாலயத்தின் கீர்த்தியையும், அருளையும் உணர்ந்த அடியார்கள் இக் கோயிலை புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்ய தீர்மானித்தார்கள். இறையருளால் இவர்களது முயற்சிகள் நிறைவேறியது. இன்று இவ்வாலயம் சிறப்பாகக் கட்டப்பட்டு இருப்பதுடன் மிகவும் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்படுகின்றது. பூசைகளும், சிறப்புத் தினங்களில் சிறப்பு வழிபாடுகளும் இடம் பெறுகின்றன.

இவ்வாலயத்தைப் பாதுகாத்து வரும் திரு சந்திரபோஸ் குடும்பத்தவர்களும், உள்ளத்தில் பத்தியால் அன்பினால் இறை பணி செய்து வரும் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு குமரதீபனும் பாராட்டுக்குரியவர்கள்.

ஞான வைரவரின் அருள், அடியார்கள் யாவருக்கும் கிட்டுமாக.

பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை

வாழ்நாள் பேராசிரியர்/ முன்னாள் துணைவேந்தர்,

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.

# யோக வாசிஷ்டம்

# வாசிஷ்டர் - ஸ்ரீராமர் கீதை



வால்மிகி இராமாயணமென்றும், வாசிஷ்ட மகா இராமாயணமென்றும் இருபெரும் நூல்கள் வால்மிகி முனிவரால் எழுதப்பட்டவை. இவற்றில் முதலாவதான வால்மிகி இராமாயணம் 24 ஆயிரம் சுலோகங்களுடன் கூடியது. வாசிஷ்ட இராமாயணம் அல்லது யோகவாசிஷ்டம் 32 ஆயிரம் சுலோகங்களோடு கூடியது. யோக வாசிஷ்டம் ரகுவம்சத்தின் குலகுருவான வாசிஷ்டரால் ஸ்ரீராமருக்கு உபதேசிக்கப்பட்ட ஞானக்களஞ்சியம். முக்திக்கு முயல்வோருக்கு ஓர் அரிய வழிகாட்டி. இந்நூல் ஆண்மவித்தை பயில்வோருக்கு தத்துவ விடயமாகத் தோன்றும் ஐயங்களுக்கு, தெளிவான விளக்கங்களைத்தந்து உதவுகின்ற காரணத்தாலும், சாஸ்திர சம்பந்தமான விடயங்களுக்கு ஓர் அதிகாரபூர்வமான நூலாக உள்ள காரணத்தாலும், முத்திநெறியில் முயல்வோருக்கு தேவையான அனைத்து சாதனைகளையும் தெளிவுபடுத்துகின்ற காரணத்தாலும், இந்த நூலுக்கு முத்திக்கு வழிகாட்டும் நூல் என்ற பெயர் வந்தது.

கீதைக்கும் - வாசிஷ்டத்திற்கும் பல வகைகளில் ஒப்புமை உண்டு. கீதை, கிருஸ்ணர் - அர்ஜீனர் உரையாடல், வாசிஷட்டம், இராமர் - வாசிஷ்டர் உரையாடல், கீதை - சுவதர்மத்தைப் புறக்கணித்து துக்கத்தில் ஆழ்ந்த அர்ஜினனுக்கு தர்மத்தை உபதேசித்துக் கடமையில் ஈடுபடுத்தினார் ஸ்ரீகிருஸ்ணர், வாசிஷ்டம் - ஸ்ரீராமர் செய்யத்தக்கது தகாதது பற்றி அறியாது குழம்பிய காலத்தில் ஞானத்தொளிவூட்டி அவரைச் செயற்பட வைத்தார் வாசிஷ்டர்.

**பாரத்வாஜரும் வால்மிகியும்**

ஒரு நாள் தமது ஞானகுருவான வால்மிகி முனிவரை அணுகி பாரத்வாஜர், "சுவாமி, இராமர் சம்சார பந்தத்திலிருந்து விடுபட்டு எவ்வாறு ஜீவன் முத்திநிலையை அடைந்தார்" என வினவினார்.

பணிவோடும், ஆர்வத்தோடும் தமது சீடனைக்கண்டு மகிழ்ந்த முனிவர், சீடனின் வினாவிற்கு விடை சொல்லலானார்.

"காணப்படும் இவ்வுலகு மனிதனின் கல்பிதமே என்ற உண்மையை ஆத்மஞானத்தால் தான் உறுதிப்படுத்த முடியும். பார்க்கப்படும் இந்த உலகம் பார்ப்பவனான தன்னைக் காட்டிலும் வேறல்ல என்ற உணர்வும், உறுதியுமே முத்திக்கு அடிப்படை. பற்பல பிறவிகளில் நுகர்ந்த வினைப்பயன்களின் பதிவுகள் என்ற நுட்ப வாஸனைகள், உண்மை ஞானத்தால் அழிக்கப்படும் நிலையே மோட்சம் அல்லது பிறப்பற்ற பெருவாழ்வு" என உபதேசத்தைத் துவக்கிய முனிவர், அந்த வாஸனைகளின் தன்மைபற்றி

விளக்குகின்றார்.

"அன்புள்ள பாரத்வாஜர், நான் குறிப்பிட்ட வாஸனைகள், 'சுத்தம், மலினம்' என இருவகைப்படும். சுத்த வாஸனை பிறப்பு இறப்பென்ற சங்கிலித் தொடரை அறுத்து முக்திக்கு வித்தாகின்றது. மலின வாசனையோ தொடர்ந்து பிறவிகள் பலவற்றைத் தூண்டும் பகையாகின்றது. வறுபட்ட விதை முளை கிளம்பாதுபோல் சரீரம் இருந்தாலும் மீண்டும் பிறவிக்குக் காரணமான அஞ்ஞானம் மறைந்த நிலையில் உள்ள ஞானமே சுத்த வாஸனையாகும். பிறவிக்குக் காரணமான அஞ்ஞானவாயில் அடைக்கப்பட்ட நிலையில் முடிக்க வேண்டிய பிராப்த கர்மத்தை மட்டும் முடித்து மீண்டும் புதிய சங்கல்பங்கள் தோன்றாநிலை இது. இதுவே ஜீவன் முக்தி நிலை" என்பர் சான்றோர். இனி இராமர் எவ்வாறு இந்த ஜீவன் முக்தி நிலையை பெற்றார் என உனக்குச் சொல்வேன். இதை உணர்ந்தால் மரண பயத்திலிருந்து விடுபடலாம்.

ஓ.... பாரத்வாஜா, 16 வயதில் தனது குருகுல வாசத்தை முடித்து நாடு திரும்பிய ஸ்ரீராமன் மிக ஆனந்தமாக நாட்களை கழித்து வந்தார். சில நாட்களின் பின் தீர்த்த யாத்திரை செய்து, மூர்த்தி, தீர்த்தம், தலம் என அனைத்தையும் கண்டு சான்றோர் பலரைத் தரிசித்து வரவேண்டும் என விரும்பி தந்தை தசரதர் குலகுரு வசிஷ்டர் அனுமதி பெற்று தனது உடன்பிறந்தாரோடு யாத்திரை புறப்பட்டார்.

பற்பல தீர்த்தங்களில் நீராடி, தானதர்மங்களைச் செய்து, ஜபதங்களை முறையாக முடித்து, மிக்க ஒளியோடு நாடு திரும்பினார். 8473(P)

நாடு திரும்பிய சிலநாட்களிலேயே இராமன் கோடையில் வற்றிய ஓடைபோல் வாட்டமுற்றுக் காணப்பட்டார். சரியாக உண்பதில்லை, உறங்குவதில்லை, யாரிடமும் எளிதாக முன்னதாகவேபேசும் ஸ்ரீராமன் மௌனமுற்றுக் காணப்பட்டார், ஏன்?

சஞ்சலம் இருக்குமிடம் சாதுசங்கம் தேடிவரும், வந்தது விசுவாமித்திரர் வடிவில். புயலென சபையில் நுழைந்தார் முனிவர். மன்னன் முறையாக வரவேற்று ஆசி நாடினார்.

"மன்னா, இதற்காக நான் வரவில்லை. யாகம் ஒன்று செய்ய இச்சை, கச்சை கட்டிக்கொண்டு அட்டூளியம் செய்கின்றார்கள் அரக்கர்கள். யாகம் புரியவேண்டி இருப்பதால் நான் சபிக்க இயலாமல் முடங்கி இருக்கின்றேன்"

"அவ்வளவுதானே பிரம்மரிஷியே! நானே சதுரங்க சேனைகளுடன் வந்து அரக்கர்களை அழித்து யாகம் நடாத்த......." என்பதற்குள் விசுவாமித்திரர் "ராமனை அனுப்பு, போதும்" என்றார் கம்பீரமாக.

"ராமன் பாலன், அவனையா அனுப்புவது? முடியாது" என்று தசரதர் கை கூப்பினார். விசுவாமித்திரர் கண்களைச் சுருக்கினார். குலகுரு வசிஷ்டர் இடையில் வந்தார். தசரதர் தப்பினார்.

"மன்னா, ராமன் உனக்குப் பாலகன்:, உலகிற்கோ அவன் காவலன்:, அனுப்பு அவனை அடவிக்கு:, அரக்கர்களை அவர் அனுப்புவான் அடுத்த உலகிற்கு" என்றார்.

குருவாக்கிய பரிபாலகரான தசரதர், யாரங்கே, என் செல்வத்தை அழைத்துவாருங்கள் என்றார் கண்ணீரைத் துடைத்துக் கொண்டே.

பணியாளர்கள் ராமனின் விரக்தி மனநிலையைச் சொன்னார்கள் மன்னரிடம் மன்னன் மயங்கினான். ''ராமனைக் கூப்பிடு'' என்றார் மீண்டும்.

அவரது தவிப்பைக் கண்ட வசிஷ்டர், ''கவலை வேண்டாம் அரசே வைராக்கியஸ்ரீ ராமனிடம் வந்து உதித்துள்ளாள். ராஜ்யஸ்ரீ அவனிடம் வரும் முன்பு இவள் வைத்திருப்பது மிக நல்லது. அதனால் அவன் விரைவில் பிரம்பஸ்ரீ ஆவான்'' என்றார்.

தசரதன் தந்தையாக மட்டும் தவித்தார். ராமர் அரசவைக்கு வந்தார், உயிரற்ற உடல்போல.

''ராமா உன் எலும்பைத் துளைக்கும் துக்கத்தை என்னிடம் இயம்பு. வைராக்கியஸ்ரீ உனக்குத் தந்துள்ள அகச் செல்வத்தை, நிறைந்த இந்தசபை அறியச் செப்பு'' என்றார் விசுவாமித்திரர் மகிழ்வுடன்.

''முனிசிரேஷ்டரே, நான் எதைச் சொல்வேன்? இந்த உலகில் இம்மியும் சுகமில்லை. எல்லாமே வியர்த்தம், காணல்நீர், உள்ளீடற்றது, மாயை, பொய்யான உலகை மாறுபட்ட காட்சிகளாகக் காட்டி மயக்குவது என் எனமே என்பதைக் கண்டு கொண்டேன்'' ராமர் சொல்லச் சொல்ல விசுவாமித்திரர் கூர்ந்து கவனித்தார்.

வசிஷ்டரோ அகமுகமானார். சூழ்நிலையைப் பற்றி உணர்வில்லாதை ராமர் ''குருவே எனக்கு உள்ளும், புறமும் ஒரே வெப்பமாக உள்ளது. கண்முன் தோன்றுவதெல்லாம் கானல்நீராகவே உள்ளன''

இந்த வாழ்வு அநித்தியம்:, நீர்க்குமிழிபோல கவலைகள், சோகங்கள், தொல்லைகள், மிக்க இந்த உலகாயுத வாழ்வை அஞ்ஞான மூட மனிதன் விடாது பற்றிக் கொண்டிருக்கின்றான். நானும் அப்படி இருக்க வேண்டுமா, சொல்லுங்கள் குருவே....?

''செல்வம் சுகத்தைத் தருவதில்லை. அது கவலைக்கு மூல ஊற்று அது அநித்தியமானது.''

''அழிவுக்கேதுவான அகங்காரத்திற்கு நான் அதிகம் பயப்படுகின்றேன்'' இது மக்களை ஏமாற்றுகிறது. அகங்காரம் ஒன்றுமில்லாதது. எனினும் உலகாயுத மக்களுக்கு இது மிக அத்தியாயவசியமாய் அமைகிறது. இது ''எனது'' என்ற மமகாரத்தோடு தொடர்பு கொண்டது. அஞ்ஞானத்திலே இது பிறந்தது. இது பொய்யான அகந்தையிலிருந்து வெளிப்பகிறது. வீண்பெருமை இதனை வளர்க்கிறது. இது மனிதனுக்கு வலுவான சத்துரு...''

ராமரின் குரல் உடைந்து உணர்ச்சிகரமாகப் பேசப் பேசச் சபையிலிருநத லௌகீகர்கள் கலங்கினார்கள். முனிவர்களோ மகிழ்ந்தார்கள்!

ராமர் மேலும் வலுத்தார் ''கர்வம், காமம், கோபம், பிரமை, பேராசை,

பொறாமை, ஆசை, பகைமை ஆகியவை அகங்காரத்தின் ஏவலாட்கள், அகங்காரம் நமது நல்லியல்புகளை அழித்து நிம்மதியைப் போக்குகிறது.

''ஆபத்தான மனிதனின் மனமோ அகங்காரத்தின் மூலமே கிளம்புகிறது. குறும்பான மனம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தெருநாய்போல அலைகிறது: ஒரு போதும் அதற்கு ஓய்வே கிடையாது''

சபையில் வெப்பக்காற்று வீசியது. ராமர் கண்களைத் துடைத்தப்படி தொடர்ந்தார்.

இந்த உடல் பெரியசுமை. இது கொழுப்பு, மாமிசம், எலும்புகள், நரம்புகள், தசைகள், ரத்தம், ஆகியவற்றால் ஆக்கப்பட்டது. இது நோய்களுக்கு இருப்பிடம் அசுத்தங்கள் நிறைந்தது. அழுகிவிடக் கூடியது. அகங்காரம் எனும் எஜமானன் உடலிலே பேராசை எனும் எஜமானியோடு வசிக்கின்றான். அவனுக்கும் குறும்பான இந்திரியங்கள் எனும் பசுக்கள் பத்து உண்டு. மனமோ இவனது ஏவலாள்.

''அவனது இதயத்தை ஆசைகள் எரிக்கின்றன. ஆனால் தன் ஆசைகளை நிறைவேற்றச் சக்தியில்லாதிருக்கின்றான். மரணம் மனிதனின் நரைத்த தலையை முதுமைப்பருவம் எனும் உப்புபோட்டு பக்குவப்படுத்தப்பட்ட பூசணிக்காய் என்று எடுத்துக்கொண்டு மகிழ்ச்சியோடு உண்ணுகிறது.

''காலமானது, வாழ்க்கை எனும் நூலை அறுத்துத் தள்ளும் ஓர் எலி. அது எதையும் விழுங்கிவிடும்''

மரியாதைக்குரிய மகரிஷியே! துக்கம், அச்சம், உலகாயுதத் தொல்லைகள் இல்லாமல் பேருண்மை ஒளியைப் பெறும் வழியை அடியேனுக்குக் கற்றுத் தாருங்கள். ஹிம்சைகள், பலவீனங்கள், ஐயம், பிரமை இவை இல்லாத நித்தியபதம் எதுவென்று எனக்குக் காட்டுங்கள்''

இவ்வாறு நீண்ட பிரசங்கம் செய்த ராமர் முகம் சிவக்க, கண்கள் கலங்கி கைகூப்பி வேண்டினார்.

''ஆள வேண்டியவனே இப்படி அழுகிறானே'' என மக்கள் திகைத்தனர். எனக்கு இந்த வயதிலும் வராத விரக்தி, இவனுக்கு இதற்குள் எப்ப வந்தது?'' என்று தசரதர் எண்ணினார்.

“''நாம் ராமனுக்கு அறிவுபூர்வமான ஆறுதல்களை வழங்குவது வியர்த்தம். அவனுக்கு குரு கடாச்சம் தேவை'' என மந்திரிகளும் பண்டிதர்களும் மௌனமாகி நின்றனர்.

தமது மன உளைச்சலைக் கண்டவர்களிடம் காட்டிக் குழம்பாமல் சரியானவரிடம் சென்று ராமர் உரைத்ததை எண்ணி வசிஷ்டர் பெருமிதம் கொண்டார். விசுவாமித்திரர் ராமரை அருளுடன் நோக்கினார். ''இந்த ராஜபோக பூமியில் இப்படி ஒரு சீலமிக்கவனா?'' என்று பூரித்தார்.

ராமருக்கு அவர் சுகதேவரின் கதையைக் கூறினார்.

பிறகு அவர் வசிஷ்டரிடம், "முனிபுங்கவரே, தங்களது தவமும், சாத்திர ஞானமும் திரண்டு நிற்கிறது. ராமனின் வடிவில் வைராக்கியமும், விசாரமும் பொங்கித் ததும்பும் அவனுக்கேற்ற மாற்றத்தைக் காட்டியருளுங்கள்" என வேண்டினார்.

"பிரம்மரிஷியே, ராமனின் தற்போதைய நிலை உலகத்தவருக்கு வெற்றுப் புலம்பல்போல் தோன்றும். ஆன்மிகச் சாதகர்களுக்கோ இது ஞானப்புலம்பல் என்பது புரியும். ஆதலால் உங்கள் கட்டளையை ஏற்கிறேன்" என்றார் வசிஷ்டர்.

வசிஷ்டரின் அடக்கத்தை வியந்து, "ஞான சிரேஷ்டரே, நாம் இருவரும் சமர்புரிந்து முடிந்தபோது, பிரம்மதேவர் நமக்கருளிய கதைகளையும்,உபதேசங்களையும் தாங்கள் ராமனுக்கு உரைத்தால், அவனது சித்தம் தெளியும்" என்று கூறி விசுவாமித்திரர் கரம் கூப்பினார்.

ராமரும் உடனே விசிஷ்டரை வணங்கி நின்றார்.

குழந்தாய் ராமா, உன் மனநிலை புரிகிறது. நீ உரைத்த நீண்ட உரையில் எதுவும் உண்மைக்கு மாறானதல்ல: அவை யாவும் சத்தியமே. ஆனால் முழு சத்தியம் அல்ல. மாயாதேவ உனக்கு எதையும் மறைக்காமல் தன் மாளிகையைத் திறந்து காட்டிவிட்டாள். ஆனால் அவை பாதி உண்மை. இப்போது ஞானமாதா உனக்குக் காட்டவேண்டியதைப்பற்றி விஸ்வதாரமாக விசாரம் செய்யலாம் வா...."

விசுவாமித்திரரும் தரையில் ராமரோடு அமர்ந்தார். மன்னரும் அமர்ந்தார். மக்களும் அமர்ந்தனர். அரசசபை ஆச்சிரமச்சூழல் பெற்றது. காலம் கழிவதைக் கண்டவர் அங்கு யாருமிலர்.

சிரேஷ்ட ஞாகவானான வசிஷ்டர் கதை கதையாகக்கூறி ஞானத்தை நல்க ஆரம்பித்தார்.

விவேகம் பற்றிச் சொன்னது ஒரு கதை
வழிப்புணர்வை வெளிப்படுத்தியது அடுத்தது.
இஷ்டநிஷ்டையை இயம்பியது ஒன்று.
யோகத்தை வலியுறுத்தியது மற்றொன்று.

காமத்தின் கொடூரத்தையும், மோகத்தின் விளைவுகளையும் சொல்லிச்சொல்லி ராமருக்கு மனசாந்தியை வழங்கிவிட்டார் வசிஷ்டர்.

அவரது சீடர்கள் அவை அனைத்தையும் தொகுத்துக் கொண்டே வந்தார்கள் - யோக வசிஷ்டம் என்ற பெயரிட்டு!

அந்தக் கதைகளின் பிழிந்து வைத்த சாரமாக, ராமரின் தெளிந்த முகத்தைப் பார்த்தபடி, "ராமா, அந்த மாங்கனியை எடு" என்றார் விசிஷ்டர்.

ராமர் பழத்தைத் தந்து, "குருவே, இது சற்று அழுகிவிட்டதே, இது பயன்படாது" என்றார்.

"ஆம் சரிதான் மாமன்னரே, நீங்கள் மற்றொரு கனியை எடுங்கள்" என்றார் தசரதரைப் பார்த்து.

நன்கு கனிந்த ஒரு கனியை எடுத்து, "ஆசார்யரே, இதே சுவையான கனி" என்றார். வசிஷ்டர் புன்னகைத்தர். விசுவாமித்திரர் அதை உணர்ந்தர்.

"ராமா! மன்னா! நீங்கள் இருவரும் உரைத்தவை முழு உண்மையல்ல. இந்த மாங்கனி போன்றதுதான் இந்த ஜகத். இதை அழுகிய கனியாகப் பயன்படாத ஒன்றாகப் பார்ப்பது பிழை. அந்தப் பார்வை துன்ப நோக்குக் கொண்டது"

தசரதர் முகம் மலர்ந்தார். ராமரின் மனநிலையை குருதேவர் சரிசெய்திடுவார் என்று.

ஆனால் வசிஷ்டரே,"ஒரு மாமுனிவர்போல் எதையும் புரிந்து கொள்பவனே, ராமா! சிலர், ஒரு சில மாங்கனிகளைப் பார்த்து, எல்லாக்கனிகளும் எப்போதும் நல்லதாகவே இருக்கும் என நினைத்து உண்டபடியே இருக்கிறார்கள். இன்பம் மட்டுமே இவ்வுலக இயற்கை என்று எண்ணித் தரிவதும் தவறு" என்றார்.

"அப்படியானால், வாழ்க்கை என்பது இன்பமும், துன்பமும் சேர்ந்ததா குருவே?"

"ஆம் ராமா, வாழ்க்கை, இன்பமும் துன்பமும் சேர்ந்தது மட்டுமல்ல: இந்த இரண்டையும் கடந்து தான் மெய்ஞான வாழ்க்கை. அழுகிய கனி உண்ணப் பயனற்றது. ஆனால் அதற்கே வேறு ஒரு முக்கிய பயன்பாடும் உள்ளதே. ஜகத்தும் அதுபோலத்தான்

"ஜகம் துன்பமயமானதுதான், அழுகல் கனியைப்போல. ஆனால் அக்கனியின் தோலையும், சதைப்பகுதியையும் நீக்கிவிட்டு, அடுத்த மாமரத்திற்கான விதையை - பீஜத்தைப் பார்ப்பவன், ஜகத்தைக் கண்டு அஞ்சமாட்டான். அவனே அசத்தில் சத்தை கண்டவன்"

ராமர் கூர்ந்து கேட்டார். வசிஷ்டர் தொடர்ந்தார்.

"வேதாந்த விசாரம் செய்பவனின் புரிதல் எப்படி இருக்கும் தெரியுமா? சோகம், மோகம், மாயை இவற்றைப் புறந்தள்ளி எல்லாவற்றுக்கும் பீஜமான ஆன்மா மீதே அவனது திருஷ்டி இருக்கும்.

"அவன் அடுத்த மரத்திற்கான விதையை - பீஜத்தை நடுவான்: பேணுவான்: எருவிடுவான்: என்னவெல்லாம் தேவையோ அவற்றை இட்டுவிதையை மரமாக்குவான்: அதன் மூலம் ஆயிரக்கணக்கான மாங்கனிகளை விளைச்சலாக அடைவான். அவற்றை மக்களோடு பகிர்ந்துண்பான்..."

வசிஷ்டர் கூறிக்கொண்டே போக, சத்குருவின் திருவாயிலிருந்து வரும் சத்தான விஷயங்களால், தன் மனதின் பித்தான கருத்துக்கள் களைந்தெறியப்படுவதைக் கண்டார் ராமர்.


வசிஷ்டர் ராமரின் சிரசில் கைவைத்து ஆசிர்வதித்தார். இன்பம் துன்பமற்ற ஆனந்தத்தில் நிலைத்து நின்றது ராமரின் சிந்தை.

"ஆயிர வருடத்து இருள் என்றாலும், ஒளியின் முன் அரைக்கணத்தில் ஓடோடிவிடும்" என்பதை நேரில் கண்டவர்போல் விசுவாமித்திரர் விசஷ்டரை வணங்கி நின்றார்.

தனது அக்ஷான இருளைப் போக்கிய குரவின் பாதங்களில் ராமர் வீழ்ந்தார்.

விசுவாமித்திரர் புறப்பட்டார். வில்லை ஏந்திய ராமர் தாடகை வதம் நடத்திட கம்பீரமாக அவரைப் பின்தொடர்ந்தார்.

Professor S. Srisatkunarajah
Department of mathematics and Statistics
University of Jaffna.



# பைவரவத் திருக்கோலங்கள்



**அறிமுகம்**

சிவாகமரபில் பைரவ வழிபாடு தனித்துவம் மிக்கது. சிவாலயமரபில் அஷ்டபரிவாரங்களுள் ஒருவராகவும், காவற் தெய்வம் எனும உயர்வுடனும் போற்றப்படும் இப் பைரவர் ஆபதோத்திதாரணர், வடுகர், ஷேத்திரபாலர் எனப் பல்வேறு பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றார். இவற்றோடு பிரம்மசிரத்தேச மூர்த்தியும் தொடர்பு பெறுவது கருத்திற் கொள்ளத்தக்கது. பைரவ வழிபாடானது கிராமிய மரபிலும், சிவாகம மரபிலும், தாந்திரீகமரபிலும் வெவ்வேறு விதமாகக் கொள்ளப்படுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இந்நிலையில் திருவுருவமாகவும், யந்திர வடிவிலும் பைரவத் திருக்கோலம் காணப்படினும் புராண மரபினையனுசரித்து அதனூடாக தெளிவு பெறத்தக்க கதை மரபுகளுடனேயே பைரவ மூர்த்தியின் தீருக்கோலங்கள் பைரவத் திருக்கோலங்கள் என நோக்கப்படுகின்றது.

**சிவாகமங்கள்**

சிவாகமங்கள் காமிகம் முதல் வாதுளமீறாக இருபத்தெட்டாகும். உபாகமங்கள் இருநூற்றெழுப்பத்தாறு ஆகும். இச் சிவாகமங்களுள் உத்தரகாரணம், பூர்வகாரணம், அஜிதம், அம்சுமத்பேதாகமம், மகுடம், ரௌரவம் என்பவற்றில் ஷேத்திரபாலர், பைரவர், ஆபதோத்தாரணர் என பைரவரது வடிவங்கள் பேசப்படுகின்றன.

**தந்திர சாஸ்திரங்கள்**

தந்திர சாஸ்திரங்கள் அறுபத்தி நான்காகும். அவை அஸ்வக்ராந்தம், ரதக்ராந்தம், விஷ்ணுக்ராந்தம் என மூன்று வகையிலுமாக நூற்றிதொன்னூற்றிரெணடு தந்திரங்களுண்டு. இம்மரபு மிகப் பரந்த தன்மையது. இம்மரபில் பைரவ வடிவங்கள் பல பேசப்படுகின்றன. அவற்றினுள் சுவர்ணாகர் ஷணபைரவ வடிவம் தனித்துவமுடையதாகும். மேலும், ஆகாசபைரவர், வடுகபைரவர், மகாபைரவர் எனப் பேசப்படுவது சுட்டிக் காட்டத்தக்கது.

**புராணங்கள்**

புராணங்கள் மஹாபுராணங்கள், உபபுராணங்கள் என இரு பிரிவுகளுடையன. மஹா புராணங்கள் பதினெட்டும், உப புராணங்கள் பதினெட்டுமாகும். இவை தவிர பல்வேறு விதமான புராணங்கள் பல காணப்படுகின்றன.

புராணங்கள் சிவாகம மரபுகளுடன் நெருங்கிள தொடர்புடையவையாகும். இவை சிவாகமங்கள் கூறும் திருவுருவங்களுமான தெய்வீக வியல் வரலாறுகளை எடுத்தியம்பும் திறனுடையன. இம்மரபிலேயே தென்னிந்திய சைவ பண்பாட்டினது கருவூலமாக புராணங்களை நோக்குவது சுட்டிக் காட்டத்தக்கது.

**புராணங்களில் தெய்வீகவியல் வரலாறு**

சிவனது மூர்த்தி பேதங்களுள் 25 பிரதானமானவை. அவை 64 மூர்த்திபேதங்களதக பரந்து விரியும் தன்மையானவை. அவற்றுள் பைரவ வடிவம் ஒன்றாகும். தனித்த நிலையில் பைரவ வடிவங்கள் 64 என்றும், அவற்றைவிட பைரவ மூர்த்தத்துடன் தொடர்புடைய மூர்த்திபேதங்கள் என பலவும் தொடர்பு பெறுகின்றன. இத்தகைய பைரவ மூர்த்தியின் தோற்றம் பெற்ற வரலாற்றையும், தொடர்புடைய கதைகளையும் புராணங்கள் மிக விரிந்த நிலையில் தெய்வீகவியல் வரலாறாகக் கூறுகின்றது. அவற்றினடிப்படையில் நோக்குகையில் பைரவர், ஆபதோத்தாரணர், வடுகர், ஷேத்திரபாலகர், பிரம்மசிரத்சேதர் என்னும் மூர்த்தி பேதங்கள் முக்கியத்துவமுடையனவாகும். அவற்றினை நோக்குவோம்.

**1. பைரவமூர்த்தி**

பைரவ மூர்த்தியில் தோற்றமானது பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது. சிவந்த சுவாலையான சடையையுடையரும், களங்கமற்றவரும் சிவந்த ஒளிபொருந்திய அங்கங்களையுடையவரும், கைகளில் சூலம், கபாலம், பாசம், டமருகம் ஆகியவற்றைக் தாங்கியவரும், உலகின் காவலரும், நிர்வாணமானவரும், நாயை வாகனமாக உடையவரும், மூன்று கண்களையுடைவரும், ஆனந்தமான வடிவமுடையவரும், பூதம், பிசாகம் இவைகளின் தலைவரும் வடுகருமாக விளங்கும் ஷேத்திரபாலரை சிவவடிவமாக வணங்குகின்றேன்'' எனத் தெளிவுபடுத்துகின்றது.

பைரவ மூர்த்தியின் வரலாறு பற்றி புராணம் தெளிவுபடுத்துகையில் அந்த தாசுரனை வதம் செய்த கதையுடன் தொடர்புடையதாகும்.

**2. ஆபதோத்தாரண மூர்த்தி**

முப்பத்த முக்கோடி தேவர்களுக்கும் ஆபத்துக்களிலிருந்து பாதுகாப்பதற்காக விளங்கும் வடிவமே ஆபதோத்தாரண மூர்த்தியாவார். இவர் தண்டம், கபலாம் ஆகிய இருகைகளிலாயுதம் ஏந்தியவராக விளங்குவது சுட்டிக் காட்டத்தக்கது.

**3. வடுகர்மூர்த்தி**

முண்டகன் எனும் அசுரன் சிவனிடம் வரம் பெற்றவன். இம்முண்டகன் பிரமனைத் துன்புறுத்தியபோது பிரமனது துயர்தீர்க்க சிவன் கொண்ட வடிவமே வடுகர்மூர்த்தம் ஆகும்.

**3. ஷேத்திரபால மூர்த்தி**

ஷேத்ரபாலர் என்பது பூமியைப்பாது காப்பவர் என்பது பொருளாகும். மஹாசம்ஹார காலத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் எனும் ஐந்தொழில்களையும் புரியும் சிவன் மஹாசம்ஹார காலத்தில் உலகினைப் பாதுகாக்கும் வடிவமே ஷேத்திரபால மூர்த்தம் ஆகும்.

4. **பிரம்ம சிரசேதமூர்த்தி**

சிவனது அட்டவீரட்ட வடிவங்களுள் பிரமனைச் சிரங்கசெய்த வடிவமொன்றாகும். பிரம்மன் அகந்தை கொண்டவேளை சதாசிவனுக்கு நிகரான ஐந்து முகங்களுள் ஒன்றினை சிவன் கொய்த மூர்த்ததே பிரம்ம சிரச்சேத மூர்த்தம் ஆகும். இதனைப் புராணங்கள் மிக விரிவாக எடுத்தியம்புகின்றன.

இவற்றிற்கு மேலாக பைரவ வடிவங்கள் பல தந்திர சாஸ்திரங்களில் யந்திர வடிவமாகவும், தனித்துவம் மிக்க மூர்த்தங்களாகவும், விளங்கும் சிறப்பினை எடுத்தியம்புகின்றன.

**நிறைவுரை**

சிவாகம மரபிலும், புராண மரபிலும் சிறப்புப் பெற்று விளங்கும் பைரவரின் வடிவம் மற்றும் தெய்வீக வியல் வரலாறுகள் தனித்துவமானவை பைரவ மூர்த்தத்தின் தனித்துவத்தை சிவாகமங்களும், புராணங்கள் மற்றும் தந்திர சாஸ்திரங்கள் எடுத்துக் கூறுகின்றன. அத்தகைய பைரவரின் மூர்த்தியின் வடிவங்கள் மற்றும் வழிபாட்டு மரபுகள் மிகவும் பரந்த தன்மையாகும்.

திரு. ச. பத்மநாபன்
B.A(Hons),PGDip in Edu, M.Phil
தலைவர், சமஸ்கிருதத்துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்



# வைரவர் வழிபாடு



கிஞ்சு கந்தரு வாய்க்கலைக் கிள்ளையா
னஞ்சு கம்பிலொன் நற்றிடக் கிள்ளியே
மிஞ்சு கந்தொறு மிக்குறுங் கார்நிறக்
கஞ்சு கன்பொற் கழலினை போற்றுவாம்"

- திருச்செந்தூர் புராணம்

சிவனின் திருக்குமார்களாகக் குறிக்கப்பெறும் விநாயகர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகள் இருப்பது போல சிவ அம்சமாகக் கூறப்படுபவர்கள் வைரவர், வீரபத்திரர் ஆகியோரும் சிவபெருமானின் வேறு வடிவங்களேயன்றி அவரினும் வேறானவர் அல்லர். சிவபெருமானின் ஐந்து முகங்களான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் ஆகியன பல அருட்திறன்களை உலகுக்கு வெளிபடுத்தியுள்ளன. இவ்வகை மூர்த்தி பேதங்களுள் வைரவ மூர்த்தியும் ஒன்றாகும். உலகெங்கும் வியாபதித்து இருப்பதும் தீமை, சூது போன்றவற்றை அழித்து நற்பலனைத் தரவல்ல உபாசனா மூர்த்தியாகக் கருதப்படுகின்றது.

சௌந்தர்லஹரியில் கூறப்படுவது யாதெனில் மகாபிரளயத்தில் பஸ்மமாக்கப்பட்ட உலகத்தை மீண்டும் சிருஷ்டிப்பதற்காக அம்பிகை ஆனந்த பைரவியாகவும் பரமசிவன் ஆனந்த பைரவராகவும் தாண்டவமாகி ஒன்பது வகையான ரசங்களும் உருவாவதாகவும் கூறப்படுகின்றது. லலிதாஸஹஸ்ர நாமத்தில் துக்கத்தைப் போக்குகின்ற ருத்திரன் வைரவர் என அழைக்கப்படுகின்றான்.

இந்து மதத்தில் சைவ ஆலயங்கள் தோறும் வைரவருக்கு சிறு ஆலயங்கள் யாகமண்டபத்திற்கும் மணிக்கோபுரத்திற்கும் இடையில் அமைந்திருக்கும். ஆலயங்களில் தினமும் காலையில் பூசைகள் தொடங்க முன்னரும் இரவு அர்த்தசாமப் பூஜை முடிவுறுகின்ற போது வைரவருக்கு விஷேட பூசைகள் இடம்பெறுகின்றன. ஆலயத்தின் காவலராக விளங்கும் வைரவரை ஷேத்திரபாலர் என்றும் அழைக்கப்படுவர். முன்னொரு காலத்தில் பிரம்மதேவனுக்கும் ஐந்து தலைகள் இருந்ததாகவும் அவன் தானே உயர்ந்தவன் இணையற்ற பரம்பொருள் என்று அகங்காரம் கொள்ள சிவபெருமான் உக்கிர சக்தியாகத் தோன்றி கொடூர வடிவத்தில் பயங்கர ஆயுதங்கள் கொண்டு பிரம்மதேவனின் ஐந்து தலைகளில் ஒன்றைக் கிள்ளி அவனது அகந்தையை அகற்றியதாகக் கந்தபுராணம் கூறும்.

வைரவர் வழிபாடு கிராமமட்டங்களில் சிறு தெய் வழிபாடகவே விளங்கி வந்துள்ள போதும் தற்போது முழுமையாக ஆகமம் நெறிசார்ந்த கிரியை மரபிற்குள்ளே கொண்டு வரப்பட்ட தெய்வமாக மாறியுள்ளத. வைரவக் கடவுளுக்கும் பலநாமங்கள் சூடாமணி நிகண்டிலே கூறப்பட்டுள்ளது. அவையாவன முத்தன், குமரன், பிள்ளை, முடுவற்படையோன், காரி சித்தன், ஷேத்திரபாலன், செந்தொடைக்குரியகோமான்,

வித்தகன், ஞானியுர்தி, கருங்குதிரையானி, வடுகன் ஆகியனவாகும். வடுகதேவர், சட்டநாதர், நரசிம்ம வைரவர் எனத் தமிழ் நூல்கள் கூறும் புராணங்களும் மஹாவயிரவர், காலவைரவர், உக்கிரவைரவர் வடுகநாதர், சட்டைநாதர், போன்ற பெயர்களைக் கூறி அதன் தோற்ற வடிவங்களையும் கூறியுள்ளன.

ஆயினும் இன்று சாதாரணமாக எல்லா இடங்களிலும் தரிசனத்திற்கு இலகுவாக்கப்பட்ட மூர்த்தம் ஞானவைரவர் மூர்த்தம். சிவபெருமானின் உருவத்திருமேனியான போக, கோர, யோக வடிவங்களுள் துஷ்டரை நிக்கரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனஞ் செய்கின்ற மூர்த்தமாக கோர வடிவமான வைரவர் தோன்றினாலும் ஆன்மாக்களின் வினைகளைக் களைவதற்கும் அகங்காரத்தை அழிப்பதற்கும் அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தைத் தருபவனாகவும் ஞான வைரவர் அமைந்துள்ளார்.

நீல மேனியும் சிலம்பொலிக்கும் திருவடியும் பாம்புகள் பொருந்திய திருஅரையும், தலைமாலைகள் புரளும் திருமார்பும், சூலம் மழு, பாசம், உடுக்கு இவைகள் ஏந்திய திருக்கரங்களும், முக்கண்களும் சிவந்த சடையும் கோபச்சிரிப்பும் கொண்ட ரைவர் உக்கரவடிவம் கொண்டபோது பெரிய கோரப் பற்கள் இரண்டும் கொண்டதான இவர் கால ரைவர் எனவும் அழைக்கப்படுவர். அதேபோல் கற்பாந்த வைரவர், சங்காரவைரவர், உன்மத்த வைரவர், உக்கர வைரவர், கண்டவைரவர் எனவும் காரணங்கருதி அழைக்கப்படுகின்றார்.

வைரவருக்கு வாகனமாக நான்கு வேதங்களின் தோற்றமான சுவான (நாய்) வாகனம் கூறப்படுகின்றது. வைரவப் பெருமானும் வேம்பு, ஆல், அரசு, மா போன்ற மரங்களின் கீழ் சூலாயுதத்தை அறிகுறி அடையாளமாக வைத்து வணங்கப்படுகின்றார்.


பிரமனின் தலைகிள்ளிய கபாலவைரவர் தன் பிரம்மஹத்தி தோஷம் நீங்க காசியில் கங்கை நீராடியதால் காலவைரவரானார். அன்று முதல் காசிக்குச் சேனாதிபதியாகினார். காசியில் நீராடுபவர் கால வைரவரைத் தரிசித்தால் யமபயத்திற்கு ஆளாகமாட்டார் எனக் காசி புராணம் கூறும் அதேபோல் சிதம்பரத்தில் பூசை செய்தவர்க்கு பொன்னாலாய படிக்காசு வழங்கியதால் சுவர்ண வைரவர் என அழைக்கப்படுவர்.

வைரவரின் விரத நாட்களாக சித்திரைப் பரணி, ஐப்பசிப் பரணி, தைமாத முதல் செவ்வாய் முதல் ஒவ்வொரு செவ்வாயும் வைரவ சுவாமிக்கான விரதநாட்கள் ஆகும். இக் காலத்தில் வைரவருக்கு சிவப்புப்பட்டு, சிவப்பு பூமாலை, வடமாலை என்ப சாத்தி வழிபடலாம். மாதப்பிறப்பு , வெள்ளிக்கிழமை, சித்திரை வருடப்பிறப்பு போன்ற முக்கிய நாட்களில் பொங்கல் செய்து, பழவகைகள் பெருமடையாகப் படைத்துக் குறிப்பாக வைகாசி மாத்தில் பெருமடை வைத்து வழிபடும் வழக்கம் எம்மக்களிடையே காணப்படுகின்றது.

முடிபாக வைரவர் காவற் தெய்வமாக இருப்பதனால் உலகில், நோய், பணி ஏற்படுகிறபோது பிணி தீர்ப்பவராகவும், வைரவ ஆலயத்தில் தாயத்து அல்லது காவல் நூல் அணிந்து சென்றால் நமக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதால் கறுப்பு நூல் அணியும் வழக்கம் இன்று காணப்படுகின்றது. ஆதலால் வைரவப் பெருமானை நாம் பக்தி பூர்வமாக வழிபட்டு விரத அனுட்டானங்களைப் பின்பற்றி இஷ்ட சித்திகளைப் பெறுவோமாக.

பரமனை மதித்திடாப் பங்கயாசன்
ஒரு தலை கிள்ளியே ஒழிந்தவானவர்
குருதியும் அகத்தையும் கொண்டு தண்டமுன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவோம்.

சைவப்புலவர், கீதோபதேவித்தகர், சொல்லிகைவாரி, சாமஸ்ரீ, தேசோதயசுடச
எஸ். கே. என் தவராஜா
BA,PGDip Public Admin, M.A in Saiva Siddantha
(உதவிப் பதிவாளர், யாழ் பல்கலைக்கழகம்)



# ஆசிச் செய்தி



இறைவன் மிக அற்புதமாகவே இவ்வுலகத்தினைப் படைத்துள்ளான். அதிலும் மனிதனின் மேலிருந்து அளவற்ற அன்பினால் போலும் அவனுக்கு ஆறாவது அறிவையும் படைத்திருந்தான். மனிதன் அனுபவித்து மகிழ்வதற்காகவே உலகில் ஏனையவற்றை எல்லாம் படைத்தான் போலும். ஆயினும் மனிதன் தன் ஆறாவது அறிவினால் அழிவுப் பாதைக்குச் செல்லத் தொடங்கினான். இதனைத் தடுத்து நிறுத்தி மனிதனை வாழ வைக்க வென்றே மதங்கள் தோற்றம் எடுத்தன.

சமயங்கள் மனிதனுக்கும் கட்டுக்கோப்புக்களை விதித்தன. அதன் மூலம் மனிதன் கெட்டழியா வண்ணம் பாதுகாப்புக் கொடுத்தன. மனிதனும் சமயங்களுக்கு கட்டுபட்டு நடக்க வேண்டியதை உணரத் தொடங்கினான். இறைபக்தி மனிதனிடம் உள்ள மிருகக் குணங்களை எல்லாம் அழித்தொழித்த சிறந்த சமுதாயத்தை உருவாக்கி மனிதனை மனிதனாக மகிழ்சியுடன் வாழ வைக்க வல்லதென்பதை மனிதன் அறியத்தொடங்கினான். சமங்களை வளர்த்தெடுத்து இறைபக்தியை மனிதனிடம் உண்டாக்கி அதன் மூலம் அவனையும் அவன்சார் சமூகத்தையும் மகிழ்சியாகவும் சுதந்திரமாகவும் வாழ வைக்க வணக்கஸ்தலங்கள் தோன்றின. இவ்வாறாக வந்தோர் வருவோரை வாழவைக்க யாழ்ப்பாணம் சுண்டுக்குளி மூளாய் வீதி ஸ்ரீ ஞான வைரவர் மடாலயமாக விளங்கிய வைரவர் இன்று புதுப் பொழிவூட்ப்பட்டு மூலஸ்தானத்தில் பண்டிகை வேலையுடன் சிறப்பாக அமைத்துள்ளது. இவ்வாலயத்திற்கு 1 வருடத்திற்கு முன்பு நண்பன் குமரதீபன் அவர்களுடன் வந்து பார்வையிட்ட போது குமரதீபன் அவர்கள் தங்கள் உறவினர்களுடைய குலதெய்வமாக இவ் வைரவர் ஆலயத்தை புதிதாக நிர்மாணம் செய்யவேண்ட மென்று விருப்பம் கொண்டார். வைரவர் அருளால் இறைகங்காரியம் நிறைவு பெறுவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகிறேன். வைரவருக்கும் இந்தியாவில் 8 படைவீடுகள் உண்டு. அதேபோல வைரவருக்கு 64 உருவங்கள் உண்டு.

வைரவப் பெருமானின் வாகனம் நாய். பொதுவாக நாய் தன்னை வளர்க்கும் எஜமானுக்கும் எஜமானது குடும்பத்தாருக்கும் மிகவும விசுவாசமாகவும் நன்றியுணர்வோடும் நடந்து கொள்ளும். அவர்களுக்கு மற்றவர்களால் ஏதாவது ஓர் ஆபத்து என்றாலும் சரி அல்லது அவர்களது பொருள்களினை வேறு எவராவது தொட முயற்சித்தாலும் சரி முன்வந்து காத்து நிற்கும். அதே போல காவல் புரிவதிலும் படு சுட்டியாக செயல்படும். நாய்க்கு மட்டுமே எமன் வருவதை அறியும் ஆற்றல் உண்டு. காலனை காலால் எட்டி உதைத்தவனும் காலகாலனாக பைரவன் ஆக காலனை விரட்டும் காலன் பைரவனுக்கு காலன் வருவதை அறியும் ஆற்றல் கொண்ட நாய்வாகனமானது எவ்வளவு விந்தையிலும் விந்தையாக செயல். உலகத்திலையே நன்றிக்கும் விசுவாத்திற்கும் எடுத்துக் காட்டுக்கு ஓர் உயிரினம் உண்டென்றால் அது நாய் மட்டுமேயன்றி வேறெதுவும் இருக்க முடியாது. இதற்கெல்லாம் மேலாக 4 வேதங்களே

வேதநாயகனை வைரவப் பெருமானுக்கு நாதரூபமான வைரவப் பெருமானுக்கு உலகைக் காக்கும் லோக ரஷகனாக கால பைரவனுக்கு அமைந்து இருப்பதும் பெருமைப்படக் கூடியதாகும். நாய் விழிப்புணர்வு மிக்கது. மோப்ப சக்தி அதிகம் கொண்டது. உலகில் எவ்வளவு புண்ணியஷேத்திரங்கள் உண்டோ அதேபோல் எவ்வளவு புண்ணி நதிதீர்த்தங்கள் உண்டோ அவ்வளவையும் காத்து அருள்பவன் கால பைரவன். காவல் காப்பதற்கு உறுதுணைாக இருப்பது அவரின் வாகனமான நாய் ஆகும்.

பைரவஎன்பது பயத்தை போக்குபவர் என்ற பொருளும், பயத்தை உண்டாக்குபவர் என்ற பொருளும் உண்டு. அதாவது நல்லவர்களுக்கு கெட்டவர்களால் ஏற்படுத்தப்படும் கஷ்டநஷ்ட பயங்களைப் போக்கி ஆபத்துக்கு உதவுபவராகவும் அதேபோல் கெட்டவர்களுக்கு அவர்கள் செய்யும் கெட்டகாரியங்களுக்கு எதிராக சிம்ம சொற்பனமாக விளங்கி பயத்தை உண்டாக்குபவராகவும் திகழ்பவரே மகா வைரவர் என்று கூறப்படுகின்றது. அந்த வகையில் இந்த ஆலயத்தை நிர்வகிப்போர் வைரவர் அருளாள் சீரம் சிறப்புமாக வாழ வேண்டும். அத்துடன் வைரவர் ஆலயம் மென்மேலும் வளர்ச்சியடைய வைரவப் பெருமானை வேண்டி இந்த ஆலயத்தை அமைத்து தந்த சிற்பிகளுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு எனது ஆசியுரையை நிறைவு செய்கின்றேன்.

ஓம் கடோ கடோ பைரவா!
ஞான பைரவா!
நரசிம்ம பைவரவா!

க. நாகஜெயகுமாரன்
மயிலியற்புலம் கந்தசுவாமி கோயில்
(முன்னாள் தலைவர்)
அகில இலங்கை சமாதான நீதவான்

# சுண்டுக்குளி தெற்கு கிராம அலுவலரது வாழ்த்துச்செய்தி



ஸ்ரீ ஞானவைரவர் ஆலய கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இவ் கும்பாபிஷேக மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

சமூகங்களுக்கிடையே அமைதியையும் நல்லொழுக்கத்தையும் பேணி உயர் விழுமியங்களை நிலை நாட்டுவதற்காக பிரதேசங்கள் தோறும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தற்காலச் சமுாயம் வன்முறை மற்றும் ஒழுக்க விழுமியங்கள் குறைந்ததாக மாறிவரும் நிலையில் ஆலய வழிபாடு மிகவும் அத்தியவசியமான தொன்றாக மாறி வருகின்றது. சமுதாயத்தை ஒன்றிணைப்பதற்காகவும் சமய கலாசார மரபுகளைப் பாதுகாப்பதற்காகவும் ஆலயங்களில் விழாக்கள் நடாத்தப்படுவது வழமையாகும். அவ்வகையில் கும்பாபிஷேக தினத்தை முன்னிட்டு வெளியிடப்படும் இம்மலர் சமயம் சார் விடயங்களை உள்ளடக்கி வெளியிடப்படுகின்றது. இவ்விடயங்கள் இன்றைய சமூகத்திற்கு மிகவும் பயனுடையதாக இருக்கும் என நம்புகிறேன்.

கும்பாபிஷேக தினத்தின் ஒரு பகுதியாக இம்மலரை வெளியிடும் ஆலய நிர்வாக சபையினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் கும்பாபிஷேக தினம் சிறப்புற அமைய அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவரை வேண்டி கும்பாபிஷேக மலருக்கு எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி இ. கஜலக்சி
கிராம சேவையாளர்
சுண்டிக்குளி தெற்கு J/75
யாழ்ப்பாணம்.



## அருள் மிகு ஞான வைரவர் அர்ச்சனை மாலை (108)
## வைரவர் புராணம்

**தியானம்**

பரமனை மதித்திடாப் பங்க யாசனன்
ஒருதலை கிள்ளியே யொழிந்த வானவர்
குருதியு மகந்தையுங் கொண்டு தண்ட முன்
புரிதரு வடுகனைப் போற்றி செய்குவாம்.

வெஞ்சினப் பரியழகன் மீது போர்த்திடும்
அஞ்சனப் புகையென வால மாமெனச்
செஞ்சுடர்ப் படிவமேற் செறித்த மாமணிக்
கஞ்சுக் கடவுள்பொற் கழல்க ளேத்துவோம்.

**அர்ச்சனை**

பிரமன்றன் சிரமரிந்த பெருமாளே போற்றி
இரப்பதற் கொருதலையை உடையானே போற்றி
கணங்களொரு வாகனமா யுடையானே போற்றி
அணங்காகக் காளியை உடையானே போற்றி
அமலனுக்கொரு மைந்தனாய் வந்தவரே போற்றி
இமவான்றன் புத்திரியின் புத்திரனே போற்றி
கையொன்றில் திரிசூலம் உடையவரே போற்றி
மையொழுகு கண்ணிக்கு மகனாரே போற்றி
அம்மை சிவகாமி பாலனே போற்றி
இம்மையிலே எல்லாந் தந்தவனே

அடியவருக் கெளிமையாய் வந்தவனே போற்றி
முடியுடைய வேந்தருக்கும் முதல்வனே போற்றி
படியிலே பாவங்கள் அறுப்பாய் போற்றி
மியுடையார் மிடியினை மடிப்பவனே போற்றி
கந்தனுக்கு முன்வந்த கருணாமூர்த்தியே போற்றி
எந்தனுக்கு அருள்புரிய வந்தவரே போற்றி
கணபதிக்குப் பின்வந்த கபாலியெ போற்றி
கணப்போதில் வினைகளைச் சாடிடுவாய் போற்றி
காசினியோர் தொழுதிருந்த கடவுளே போற்றி
பேசினிய பெருமானே பெரியானே போற்றி

தரணியி லுயிர்வாழ வந்தவரே போற்றி
நாரணர்க்கும் நான்முகர்க்கும் நாயகனே போற்றி
ஆரணங்க ளறியாத ஐயனே போற்றி

மாரனை வென்றெடுத்த மதியனே போற்றி
அகண்டபரி பூரணனாம் ஐயனாரே போற்றி
மகரிஷிகள் போற்றுகின்ற மாமணியே போற்றி
அம்மமை சிவகாமி பாலகனே போற்றி
மும்மைக்கும் முதலாக உள்களானே போற்றி
ஆதி அந்தம் இல்லா தவரே போற்றி
பாதிமதி வேணியன் மகனே போற்றி

அண்டமெல்லாங் கடந்த அருட்சுடரே போற்றி
மண்டினி ஞாலத்தை மகிழ்விப்பவரே போற்றி
சிவமூர்த்த மாக நிற்பவரே போற்றி
பலவினைகள் எல்லாம் ஒழிப்பவரே போற்றி
பைரவர்கள் வணங்கும் பகவானே போற்றி
வைரவர் என்னும் பெயருடையோய் போற்றி
வடுகாய நம என்று வணங்கிடுவோம் போற்றி
சுடுகாட்டில் நடமாடும் சூலபாணியே போற்றி
பைரவ புவனதத்தில் இருப்பவரே போற்றி
பாதாள ஞான வைரவரே போற்றி

தோற்றத்தில் நீலநிறம் உடையவரே போற்றி
ஆற்றலிலும் அம்மானை வென்றவரே போற்றி
திருவடியில் சிலம்பினை அணிந்தவரே போற்றி
அருள்மறைகள் ஆறங்கம் அணிந்தவரே போற்றி
மார்பிலே தலைமாலை உடையவரே போற்றி
கார்போன்ற நிறத்தை உடையவரே போற்றி
மழுவென்னும் ஆயுதம் உடையவரே போற்றி
அழுதார்க்கு அருள்புரியும் ஆண்டவரே போற்றி
பாசமெனுங் கயிற்றை உடையவரே போற்றி
பாச வேரறுக்கும் பகவானே போற்றி

உடுக்கையை ஏந்தி ஒலிப்பவரே போற்றி
முக்கண்கள் உடைய முதல்வனே போற்றி
கடுக்கை மாலை பூண்டவரே போற்றி
எக்காலமு மெமைக் காப்பவரே போற்றி
பயங்கரத் தோற்றம் உடையவரே போற்றி
வியத்தக்க அற்புதங்கள் செய்தவரே போற்றி
கோரப் பற்களினை உடையவரே போற்றி
வீரவேல் முருகனுக்குத் தமையனாரே போற்றி
செஞ்சடையை உடைய சேவகனே போற்றி
நஞ்சணி கண்டனின் நன்மகனே போற்றி

சீற்றநகை கொண்ட முகமுடையோய் போற்றி
ஏற்றமெல்லாம் எமக்களிக்கும் நாயகனே போற்றி
ஆணவத்தை அடக்கிய ஆண்டவனே போற்றி
நாணத்தை நமக்களித்த நாயகனே போற்றி
முனிவர்களின் செருக்கை அழித்தவனே போற்றி
நனிபெரிதும் ஞானத்தை அளித்தவனே போற்றி
தேவர்களின் அகங்காரம் அழித்தவனே போற்றி

பாவவினை பற்றறுக்கும் பகவானே போற்றி
ஊழிக்காலத்தில் உலகினை அழிப்பவரே போற்றி
ஆழியிலும் எம்மை அணைப்பவரே போற்றி

நான்மறையே நாய்வடிவாய் ஆனவரே போற்றி
கான்முளையாம் எம்மைக் காத்தருள்வாய் போற்றி
அறுவகைச் சமயத்தின் பைரவரே போற்றி
நறுமலர் மாலையை அணிபவரே போற்றி
வடைமாலை தன்னை விரும்புபவரே போற்றி
நடைபாதை தன்னையும் நயந்தவரே போற்றி
புளியடியும் புங்கடியும் இருப்பவரே போற்றி
தெளிவுடையார் உள்ளத்து இருப்பவரே போற்றி
அரசடியும் ஆலடியும் அமர்ப்பவரே போற்றி
பரஞானம் தந்தருளும் பரமனே போற்றி

காவலுக்கு ஒருதெய்வம் ஆனவரே போற்றி
ஏவலுக்கு மியைந்து எமைக் காத்தவரே போற்றி
ஷேத்திர பாலகர் ஆனவரே போற்றி
ஏத்திஎழு வார்க்கன்ப ரானவரே போற்றி
பெருந்தொந்தி உடைய பெம்மானே போற்றி
அருமறைகள் ஓலமிடும் ஆண்டகையே போற்றி
உருண்ட கண்கள் உடையவரே போற்றி
மருண்ட மனத்தை மலர்விப்பவரே போற்றி
ஆடையெதுவுமற்ற பெருமானே போற்றி
ஓடையிலே ஊறிவரும் அருஞ்சுனையே போற்றி

அரவ அணிகலன்கள் அணிந்தவரே போற்றி
பரவ இனியவரே பகவானே போற்றி
எண்ணெய் மூர்த்தங்கள் இசைந்தவரே போற்றி
மண்ணவரும் விண்ணவரும் மகிழ்ந்தவரே போற்றி
அசிதாங்க பைரவர் ஆனவரே போற்றி
பசிதீர்க்க வந்தருளும் பகவானே போற்றி
குருபைரவ ராகிநின்ற கோமானே போற்றி
அருமறைக ளுக்குமொட்டா ஆண்டவனே போற்றி
கண்ட பைரவர் ஆனவரே போற்றி
கண்ட இடமெல்லாம் கருணைசெய்வாய் போற்றி

குரோத பைரவர் ஆனவரே போற்றி
விரோத மொன்றில்லா விழுத்துணையே போற்றி
உன்மத்த பைரவர் ஆனவரே போற்றி
ஜென்மத்திலும் உமை மறவேன் தெய்வமே போற்றி
கபால பைரவர் ஆனவரே போற்றி.
சபாபதியின் மைந்தன் ஆனவரே போற்றி
சபரிமலை ஐயப்பா சரணம் சரணம்
வடுகாய நமஓம் வடுகாய போற்றி

K. Thiagarajah
Retd. Chief Post Master
Justice of Peace
2001/10/வகி/யாழ்/பி/004

25, New Road
Koiyathoddam.
JAFFNA.
..................200...

# கொய்யாத்தோட்டம் அருள்மிகு செல்வ விநாயகர் ஆலய நிர்வாக சபை தலைவரினது ஆசிச்செய்தி



யாழ் சுண்டுக்குளி மூளாய் ஒழுங்கையில் அமர்ந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திருவருள்மிகு ஞான வைரவர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா மகா கும்பாபிஷேகம் 21.08.2016 (ஞாயிற்றுக்கிழமை) திருவருளின் துணை கொண்டு பிரதிஸ்டா பிரதமகுரு ம.சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்று இருப்பதைக் கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

வைரவர் வழிபாடு சிறப்புற்று விளக்கும் யாழ்ப்பாணத்திலுள்ள சுண்டுக்குளி பகுதியில் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம் மென்மேலும் விருத்தி அடைந்து மிகப்பெரிய ஆலயமாக வரவேண்டும் என இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

இத்திருப்பணியில் ஈடுபட்டுவரும் அனைத்து அன்பர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் வணக்கங்களையும் தெரிவிக்கின்றேன். சிவமூர்த்தங்களில் ஒன்றாக வைரவப் பெருமான் காவல் தெய்வமாக துணை நின்று காத்தருளும் சிவபேறாகையால் வைரப்பெருமான் அவன் தாள் வணக்கம் மேன்மையான இறையருளே ஆகும்.

கோ. தியாகராஜா
தலைவர்
கொய்யாத்தோட்டம் அருள்மிகு செல்வவிநாயகர் ஆலயம்,
கொய்யாத்தோட்டம்.

உ
சிவமயம்

கொழும்புத்துறை வீதி, பாண்டியன்தாழ்வு

அருள்மிகு

ஸ்ரீ நரசிம்ம ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபை

கொழும்புத்துறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
யாழ்ப்பாணம்.

திகதி 16-11-2016

# பாண்டியன் தாழ்வு நரசிம்ம ஞான வைரவர் தேவஸ்தான பரிபாலனசபை தலைவரது

## ஆசிச் செய்தி

சுண்டுக்குளி பதியிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள் மிகு ஸ்ரீ ஞான வைரவப்பொருமானின் மகாகும்பாபிஷேக விழாவின் நிகழ்வுகளைச் சுமந்து வெளிவருகின்ற கும்பாபிசேக சிறப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை பெரும்பாக்கியமாகவே கருதுகிறேன்.



கல்வி கற்றோர்க்கும், செழிப்பு மிக்க செல்வத்திற்கும் குறைவில்லாத புண்ணிய பூமியில் அமையப்பெற்ற வைரவப்பெருமான் தன்னை வழிபடுவோர்க்கும் ஆலயத்தைச் சூழவுள்ள அடியவர்களுக்கும் காவல் தெய்வமாகவும் கஷ்டங்கள் நீக்கும் இஷ்ட தெய்வமாகவும் விளங்குகின்றார். செல்லுமிடமெல்லாம் கூடவே வந்து எமையெல்லாம் காத்தருளும் வைரவர் வழிபாடு இந்துக்களிடையே மேலோங்கி இருப்பது மிகப்பெரும் சிறப்பே. சிவபெருமானை முழுமுதற் கடவுளாக கொண்ட ஆகம விதிகளுக்குட்பட்டு அமையப்பெற்று இந்து ஆலயங்கள் எல்லாவற்றிலும் வைரப்பெருமானுக்கென்று தனித்துவமான அமைப்பும் பூஜைமுறையும் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். ஆலய வாசல் அருகில் அமைந்திருப்பரானது அடியர்களிற்கு மட்டுமல்ல ஆலயத்தின் காவற்காரனும் எம்பெருமானே என்பது புலனாகின்றது. சிவனின் கலை வடிவமாக வழிபடப்படும் வைரவர் 16 வடிவங்களை காட்சி அளிக்கின்றார். வைரவப்பெருமானிற்கு வழிபடப்படும் விசேஷட நாள்களில் ஐப்பசிப்பரணி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். எமது யாழ்ப்பாண பிரதேசத்தை பொறுத்தமட்டில் வைரவர் ஆலயங்களின் எண்ணிக்கை மற்றும் வைரருக்கான சிறப்புபூசைகள் என்பன வைரவர் வழிபாட்டின் தொண்மையையும், முக்கியத்துவத்தையும் எடுத்து இயம்புகின்றன.

தொண்மை வழிபாடு என்ற ரீதியில் சட்டத்துக்கு முரணான மற்றும் மனிதாபிமானத்துக்கு விலக்கான வகையில் ஒரு சில ஆலயங்களில் ஈவிரக்கமற்ற முறையில் மேற்கொள்ளப்படும் மிருக பலியிடல் மனம் வருந்தத்தக்க ஒரு முறையற்ற வழிபாடே ஆகும். அந்த வகையில் மேற்படி மிருக பலியிடலை நீதிமன்ற தடைசெய்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். நாம் ஒவ்வொருவரும் இரக்கமும் மனிதநேயமும் உள்ள இந்துக்களாக வாழவேண்டும் என்பதுடன் இந்துக்களாகிய நாம் எமது காவல் தெய்வமான வைரவர் வழிபாட்டில் முழு மன நிறைவுடனும் பக்தியுடனும் ஈடுபட்டு மன நின்மதியுடன் வாழ்வோமாக.

"மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

சுபம்

தலைவர்
பொ. வெற்றிவேல்

# செல்லத்துரை சோமசுந்தரம் ஐயா அவர்களின் ஆசிச் செய்தி



போர்த்துக்கேயர் ஆட்சி முறையில் வாணிபம் செய்ய வந்து குடியேறிய மக்களே முளாயை அண்டி வசிக்கின்றனர்.

மூலாய்வதி கொழும்புத்துறை முகத்தில் இருந்தும் கோட்டை அடியிலிருந்தும் இந்தியன் பெரிய வண்டில் மாடு காங்கேசன்துறை, பருத்தித்துறை, ஊர்காவற்துறையிலிருந்து அரிசிகள் இறக்குமதி செய்து மலையாழம் புகையிலை ஏற்றுமதி செய்து கப்பல் வாணிபம் செய்து பெரிய மாதாகோயில் சூழ வரையிருந்து குடும்பங்கள் மூளாய் வீதியில் வசிந்து வந்தன. 1950 இறுதியான காலத்தில் வண்டில்கார கதிரேசு, சிவஞானம், வைத்திலிங்கம் என்னும் பலபேர்கள் வைரவரை சுற்றி வாழ்ந்த இடமே தற்போது வைரவர் ஆலயம் அமைந்த இடமாகும். இவ்விடத்தில் வேம்பு, மாவிலங்கை, ஆல், அரசு, மருதம், மஞ்சமுன்னா, கொன்றை பூர்த்து கமலம் வீசிய இடம்.

வைரவப் பெருமான் அமைந்துள்ள இடமானது செல்லத்துரை இராசம்மா ஆகியோர்களுக்கு சொந்தமான நிலமாகும். இதில் அவர்கள் வைரவப் பெருமானை நீண்டகாலம் ஆதரித்து வந்தனர். தற்போது இவ்வாலய காணியானது அவர்களுடைய மகன் திரு. சந்திரபோஸ் தன் கண்காணியில் உள்ளது.

பிற்காலம் செல்லத்துரை குடும்பம், தம்பிள்ளை குடும்பம், தம்பையா குடும்பம் இந்த வழியிலே சந்தியார் உறவில் இக்கோயிலை பாராமரித்து வருகின்றனர்.

செல்லத்துரை சோமசுந்தரம்
மூத்த குடிமகன்.
மூளாய் வீதி, சுண்டுக்குளி

# திரு கு.இராசசிங்கம் அவர்களின் ஆசிச் செய்தி



ஈழத்திருநாட்டில் சைவ மதத்திர்கள் செறிந்து வாழும் கிராமங்கள் தோறும் குல தெய்வமாகவும் குடும்ப தெய்வுமாகவும், வழிபாட்டிற்கும் காவல் தெய்வமாகவும் வழிபடுபவர் வைரவப் பெருமான்.

ஈசனின் திரு அவதாரங்களில் வைரவ மூர்த்தமும் ஒன்று அதனால் தான் வைரவர் ஓர் காவல் தெய்வமாக சைவ மக்களால் வணங்கப்பட்டு வருகின்றார். முற்காலத்தில் நீண்ட பாதைகளில் பயணம் செய்பவர்கள் பயமின்றி பயணிப்பதற்கு தெரு ஓரங்களில் வளர்ந்தோங்கிய வேம்பு, அரசு போன்ற மரங்களின் கீழ் வைரவரை சூல வடிவில் அமைத்த வழிபட்டு பயணிப்பர். கிராமங்களில் வயற்கரை கிராமங்களின் எல்லைகளிலும் வைரவ சூலம் வைத்து வணங்குவதுடன் வருடாவருடம் அவர்க்கு பெரியமடை இட்டும் வேள்விகள் நடாத்தியும் வழிபட்டு தமது பிரார்த்தனைகளைச் செய்தும் வந்துள்ளனர். அப்படியான நடைமுறைகள் தற்காலத்திலும் சில கிராமங்களில் நடைமுறையில் உள்ளது.

அதேபோல் யாழ்ப்பாணம் சுண்டுக்குளி தெற்கு இறையில் அமைந்து இன்று மிகவும் பிரசித்தமாய் அடியார்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வருபவர் ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவப் பெருமான். அவர் அருள் பாலிக்கும் எல்லைக் கிராமங்கள் தோறும் உள்ள அநேக வீடுகளில் இன்றும் குடும்ப தெய்வமாக வைரவரை சூல வடிவில் அமைத்து தமது காணிகளில் கிணற்றடி மற்றும் வேம்பு, நாவல் போன்ற மரங்களின் கீழ் சிறிய கொட்டகை அமைத்து தங்கள் வழிபாட்டை செய்பவர்கள் உள்ளர். அதேபோல் சுமார் நூறு வருடங்களின் முன்னர் வட்டுக்கோட்டை மூளாய் பகுதிகளில் இருந்தும் விளான் பகுதியிலும்இருந்து சுண்டுக்குளிப் பகுதியில் பூலாய் வீதியில் குடியேறியவர்களே வாழ்ந்து வந்ததுடன் அதனால் தான் எம் முன்னோர் இப்பகுதியை மூளாய் என்று அழைத்தனர். அத்துடன் தற்போது குருசோ வீதி என்பதனை மூளாய் றோட் என்று அழைத்தனர். காலப் போக்கில் பெயர் மாற்றம் பெற்றதுடன் அன்று இப் பகுதியில் வாழ்ந்த வந்தவர்கள் சூழ்நிலை, சூழல் மாற்றங்களாலும் மற்றும் தொழில் நிமித்தமும் தங்கள் சொந்த இடங்களையும் மாற்றிக் கொண்டனர். இருந்து இன்று வரை இச்சூழலில் ஐந்தாறு சைவக் குடும்பங்கள் தொடர்ந்தும் வாழ்ந்து வருகின்றனர்.

இக் கணிப்பின் உரிமையாளர் வட்டுக் கோட்டைப் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட செல்வத்துரை பொன்னுத்துரையாவார். இவர் தமது வாழ்க்கைக்கு சொந்தத் தொழிலாக சுருட்டுத் தொழிலை ஆரம்பித்து பலருக்கும் தொழில் கொடுத்து வாழ்ந்தவர். அவரின் மகள் திருமதி இராசம்மா என்பவருக்கு இக் காணியை பிற்காலத்தில் உரிமையாக்கினார். இவர்கள் தங்கள் குலதெய்வமாய் வணங்க தங்கள் காணியில் ஏற்படுத்திய சூலவளிபாட தொடர்ந்து அயலில் வாழ்ந்த சைவமக்களையும் ஈர்த்தமையால் அனைவரும் இணைந்து வளிபட்டு அவர்களின் இஸ்ட சித்திகளை ஈடேற்றும் வல்லமை பெற்று அருள் பாலித்தார். கால மாறுதல்களால் திருமதி இராசம்மா அவர்களின் ஏக புத்திரன் திரு சந்திபோஸ்

தொழில் தேடி லண்டன் மாநகரம் சென்றார். திருமதி இராசம்மா அவர்கள் இறையடி ஏய்திய பின்னரும் அவர்கள் மேற் கொண்ட வைரவர் பணியை அயல் வாழ்ந்த திரு கனகசபை துரைசிங்கம் குடும்பத்தாரும், திரு செல்லத்துரை சோமசுந்தரம் குடும்பத்தாரும், தொடர்ந்தும் வைரவரிற்கு தொண்டாற்றி வந்தார்கள். மிகவும் பழைமையான சக்தி மிக்க வைரவப்பெருமானுக்கு இன்று அவரின் அருளால் சிறப்புற நல்வாழ்வு வாழ்வும் பெற்ற புலம் பெயர் குடும்பத்தாரும் அயல்வாழ்வு அடியார்களும் இன்று ஓர் அழகிய மடாலயமாய் அதனை அமைத்தும் பலதிருப்பணிகளை செய்தும் அவரை மன மகிழ வைத்து சிறப்பு கும்பவிசேகமும் செய்து தாம் தமது நன்றிக் கடனை ஈடேற்றியுள்ளனர்.

இவ்வாலயம் அமைப்பதற்கு தமது காணியை வழங்கிய திரு சந்திரபோஸ் அவர் தம் பெருமனமும் இந் தொண்டை சீர் பெறச் செய்த அனைத்து அடியார்க்கும் எம் பெருமான் இன்னருளை வாரி வழங்கிய நல்ல அருள் புரிவாராக.

மேன் மேலும் இப்பணி தடையற நடக்க வைரவப் பெருமான் தன் அருளாட்சியை பொழிய வேண்டுகின்றேன்.

மேன்மை கொள்சைவநீதி விளங்குக உலமெலாம்.

கு. இராஜசிங்கம்
கொய்யாத்தோட்டம்



# நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோன்பு அபிவிருத்தி ஒன்றிய தலைவரின் ஆசிச் செய்தி



ஞானவைரவர் அருள் பெறுவோமா!

கலையும், கலாசாரமும் பேணிப் பாதுகாத்துக் கொள்வதிலே தான் விழுமியங்களுடைய கடமை தங்கி இருக்கின்றது. காலத்திற்கு காலம் இயற்கை அனர்த்தங்களாலும், இடப் பெயர்வுகளாலும் கலையும், கலாசாரமும் அழிவுறு நிலைக்கு சென்றாலும் மீளக் கட்டி யெழுப்பப்பட்டே வருகின்றது. இந்த நிலை தோற்றுவிக்கின்ற பிரதான காரணிகளாக எமது மூதாதையருடைய சிந்தனைகள் தான் சந்ததி வழியாக பெறப்பட்ட கருத்துக்கள், அனுபவப் பகிர்வுகள், அடையாளச் சின்னங்கள், வெளியிடப்பட்ட வெளியீடுகள், மக்கள் பிரதிநிதிகள் பிரசன்னங்கள் இளைய தலைமுறையினருக்கு உத்வேகத்தை கொடுத்திருக்ககூடிய முன்தள உந்து சக்திகளாகும்.

அந்த வகையில் சுண்டிக்குளி ஞான வைரவர் ஆலயம் பல தசாப்தகால வரலாற்றுச் சிறப்பை கொண்டது. அத்துடன் இந்து சமய வழிபாட்டிங்களில் இடப் பெயர்வின் பின் மீளக் குடியேராத காரணத்தால் தரிசு நிலங்களாக காட்சி கொடுக்கும் இடத்தில் மீளக் கட்டியெழுப்பப்பட்டிருப்பது இளைய தலைமுறையின் உணர்வலைகளை நிமிர்ந்தே நிற்கின்றது என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும். சினிமாவிலும், தொலைக்காட்சி நாடகங்களிலும் நாட்களை கழிக்கும் சமூக மரபு மாறிவரும் இந்தக் காலகட்டத்தில் ஸ்ரீஞானவைரவரை நிலைநிறுத்தி வைக்கும் கைங்கரியத்தை செய்த செயற்பாடாளரை வாழ்க வளர்க என வாழ்த்துவதோடு ஞானவைரவர் அருள் என்றும் கிடைக்க வேண்டும் என்று வாழ்த்துகின்றோம்.

அத்துடன் ஆலய வழிபாட்டை ஒழுங்குபடுத்தி, வளர்ந்து வரும் சிறார்களின் ஆன்மீக நாட்டத்தை மேம்படுத்தி கூட்டுப்பிரார்த்தனை, ஆன்மீக சொற்பொழிவு அற நெறிக்கல்வி போன்றவற்றையும் மேற்கொண்டு விலகிச் செல்லும் விழுமியங்களை உள்வாங்கி விலை மதிப்பற்ற இந்துசமய பண்பாட்டை மேலோங்கச் செய்ய ஞானவைரவர் பாதம் பணிந்து பணிபுரிவோமாக.

விளங்குக சைவநீதி

இ. மதிகரன்

நல்லூர் பிரதேச இந்து ஆலயங்களின் சமூக நலனோன்பு அபிவிருத்தி ஒன்றியம்

# திரு.து.தனபாலசிங்கம் அவர்களின் உள்ளடக்கிடக்கை



ஞானவைரவர் ஆலயம் இது கொட்டிலாக இருக்கும் பொழுது நான் சிறு பராயத்திலிருந்து எம்பெருமானுக்கு விளக்கேற்றி வழிபட்டேன். இவ்வாலயம் கிட்டதட்ட 200 ஆண்டுகள் பழமைவாய்ந்தவை என மூதாதையினரால் கூறப்பட்டது. எமது பேரனார்கள் தாய்தந்தையர்கள் உட்பட வேறுசில அடியார்களினாலும் கூறப்பட்டது. இவ்வாலயம் சிறுகொட்டிலாகத்தான் இருந்தது. இவ்வாலயத்தை திருமதி இராசமாக்கா அவர்கள் அவரது சொந்தக் காணியில் பராமரித்து வந்தர். வருடாவருடம் விசாகப் பொங்கல் மிகவும் சிறப்பாக நடைபெறும். ஒரு சில அடியார்களுக்கு உருக் கலைகளும் வருவது உண்டு. இவ்வாலயத்தை ஒரு சில சைவகுடும்பங்கள் வழிபட்டு வந்தார்கள். எல்லோரையும் வைரவப்பெருமான் சீரும் சிறப்புமாக வைத்திருக்கின்றான். இவ்வூரில் மாற்று மதத்தவர்களும் வாழ்கின்றார்கள். அவர்களும் வந்து விளங்கித்தான் செல்வார்கள். பின்பு இடப்பெயர்வு காரணமாக ஆலயம் முற்றாக சேதமடைந்தது. மீண்டும் சில திருத்தவேலை செய்து வழிபட்டு வந்தோம். பின்பு இவ்வாலயத்தை கட்டி கும்பாபிஷேகம் செய்ய வேண்டும் என எண்ணி எம்பெருமான் அடியார்க்கு அருள் பாலித்தார். அடியார்கள் எல்லோரும் சேர்ந்து உள்நாட்டு வெளிநாட்டு நிதியுடன் இவ்வாலயத் புனரமைப்பு செய்யப்பட்டு பிரதமகுரு மகாதேவா சோம சுந்தர சிவாச்சாரியர் அவர்களால் 21.08.2016 ஞாயிற்றுக்கிழமை மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வாலயத்தில் உரிமையாளராகிய திருமதி இராசமக்காவின் மகன் குடும்பத்தினரும் வெளிநாட்டில் இருந்து வந்து பங்கு பற்றி சிறப்பித்தமை மேலும் சிறப்பானதாகும். எல்லாம் அந்த வைரவப் பெருமானின் திருவருள்தான்.

நன்றி

திரு. து. தனபாலசிங்கம்
செயலாளர், ஈச்சமோட்டை கலட்டிப்புலம் ஸ்ரீ ஞான வைரவர் ஆலயம்,
ஈச்சமோட்டை.

# திருமதி மயூரினி பத்மகாந்தனின் உள்ளத்திலிருந்து




பைரவர் சிவபெருமானின் 64 திருமேனிகளுள் ஒருவராவார். இவர் வைரவர் என்றும் அறியப்படுகின்றார். பைவரவரின் வாகனமாக நாய் குறிப்பிடப்படுகின்றது. இதனால் இந்து சமயத்தவர் நாய்களுக்கு பைரவர் என்ற பொதுப் பெயரும் வழக்கத்தில் இருக்கின்றது. பைரவரை சொர்ணாகர்ஷண பைரவர், யோக வைரவர் ஆதி பைரவர், கால பைரவர், உக்ர பைரவர் என்றெல்லாம் அழைக்கின்றார்கள்.

கால பைரவர் சிவபெருமானின் ருத்திர ரூபமாக சொல்லப்படுபவர். சிவன் கோவிலின் வட கிழக்குப் பகுதியில் நின்ற கோலத்தில் காட்சி தருபவர். ஆடைகள் எதுவுமில்லாமல் பன்னிரு கைகளுடன் நாகத்தை பூணூலாகவும், சந்திரனைத் தலையில் வைத்தும், சூலாயுதம், பாசக்கயிறு, அங்குசம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியும் நிர்வாண ரூபமாய்க் காட்சி தருபவர் கால வைரபவர். சனியின் குருவாகவும், பன்னிரண்டு ராசிகள், எட்டுத் திசைகள், பஞ்ச பூதங்கள் நவக்கிரகங்களையும், காலத்தையும் கட்டுப்படுத்துபவராகவும் கூறப்படுகின்றார்.

எமது ஞான வைரவரோ சூல வடிவில் காட்சி தந்து எம்மை எல்லாம் தந்தை போல் பராமரித்து வருகிறார். அவர் அருள் மென்மேலும் பெருகுக. அவர் ஆலயம் மேலும் வளர்க.

ஓங்குக சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

திருமதி மயூரினி பத்மகாந்தனின்
பரிஸ், பிரான்ஸ்



PUBLIC LIBRARY
JAFFNA













# பைரவர் 108 போற்றி

தேய்பிறை அஷ்டமி திதியில் பைரவர் வழிபாடு செய்வது பயத்தைப் போக்கி, வாழ்வில் தன்னம்பிக்கையைத் தரும். இந்த நாளில் மாலை 4.30- 6 மணிக்குள் திருவிளக்கேற்றி வீட்டிலேயே இந்த போற்றியைச் சொல்லலாம். பைரவர் சன்னதி முன்பு கூட்டாக அமர்ந்து, ஒருவர் சொல்ல மற்றவர்கள் திருப்பிச் சொல்லலாம்.

ஓம் பைரவனே போற்றி
ஓம் பயநாசகனே போற்றி
ஓம் அஷ்டரூபனே போற்றி
ஓம் அஷ்டமித் தோன்றலே போற்றி
ஓம் அயன்குருவே போற்றி
ஓம் அறக்காவலனே போற்றி
ஓம் அகந்தையழிப்பவனே போற்றி
ஓம் அடங்காரின் அழிவே போற்றி
ஓம் அற்புதனே போற்றி
ஓம் அசிதாங்க பைரவனே போற்றி
ஓம் ஆனந்த பைரவனே போற்றி
ஓம் ஆலயக்காவலனே போற்றி
ஓம் இன்னல் பொடிப்பவனே போற்றி
ஓம் இடுகாட்டில் இருப்பவனே போற்றி
ஓம் உக்ர பைரவனே போற்றி
ஓம் உடுக்கை ஏந்தியவனே போற்றி
ஓம் உதிரம் குடித்தவனே போற்றி
ஓம் உன்மத்த பைரவனே போற்றி
ஓம் உறங்கையில் காப்பவனே போற்றி
ஓம் ஊழ்வினை தீர்ப்பவனே போற்றி
ஓம் எல்லை தேவனே போற்றி
ஓம் எளிதில் இரங்குபவனே போற்றி
ஓம் கபாலதாரியே போற்றி
ஓம் கங்காளமூர்த்தியே போற்றி
ஓம் கர்வ பங்கனே போற்றி
ஓம் கல்பாந்த பைரவனே போற்றி
ஓம் கதாயுதனே போற்றி
ஓம் கனல்வீசும் கண்ணனே போற்றி
ஓம் கருமேக நிறனே போற்றி
ஓம் கட்வாங்க தாரியே போற்றி
ஓம் களவைக் குலைப்போனே போற்றி
ஓம் கருணாமூர்த்தியே போற்றி

ஓம் கால பைரவனே போற்றி
ஓம் காபாலிகர் தேவனே போற்றி
ஓம் கார்த்திகையில் பிறந்தவனே போற்றி
ஓம் காளாஷ்டமிநாதனே போற்றி
ஓம் காசிநாதனே போற்றி
ஓம் காவல்தெய்வமே போற்றி
ஓம் கிரோத பைரவனே போற்றி
ஓம் கொன்றைப்பிரியனே போற்றி
ஓம் சண்ட பைரவனே போற்றி
ஓம் சட்டை நாதனே போற்றி
ஓம் சம்ஹார பைரவனே போற்றி
ஓம் சங்கடம் தீர்ப்பவனே போற்றி
ஓம் சிவத்தோன்றலே போற்றி
ஓம் சிவாலயத்து இருப்போனே போற்றி
ஓம் சிக்ஷகனே போற்றி
ஓம் சீர்காழித்தேவனே போற்றி
ஓம் சுடர்ச்சடையனே போற்றி
ஓம் சுதந்திர பைரவனே போற்றி
ஓம் சிவ அம்சனே போற்றி
ஓம் சுவேச்சா பைரவனே போற்றி
ஓம் சூலதாரியே போற்றி
ஓம் சூழ்வினை அறுப்பவனே போற்றி
ஓம் செம்மேனியனே போற்றி
ஓம் ஷக்ஷத்ரபாலனே போற்றி
ஓம் தட்சனை அழித்தவனே போற்றி
ஓம் தலங்களின் காவலனே போற்றி
ஓம் தீது அழிப்பவனே போற்றி
ஓம் துர்சொப்பன நாசகனே போற்றி
ஓம் தெற்கு நோக்கனே போற்றி
ஓம் தைரியமளிப்பவனே போற்றி
ஓம் நவரச ரூபனே போற்றி
ஓம் நரசிம்ம சாந்தனே போற்றி
ஓம் நள்ளிரவு நாயகனே போற்றி
ஓம் நரகம் நீக்குபவனே போற்றி
ஓம் நாய் வாகனனே போற்றி
ஓம் நாடியருள்வோனே போற்றி
ஓம் நிமலனே போற்றி
ஓம் நிர்வாணனே போற்றி
ஓம் நிறைவளிப்பவனே போற்றி
ஓம் நின்றருள்வோனே போற்றி

ஓம் பயங்கர ஆயுதனே போற்றி
ஓம் பகையளிப்பவனே போற்றி
ஓம் பரசு ஏந்தியவனே போற்றி
ஓம் பலிபீடத்து உறைவோனே போற்றி
ஓம் பாபம் தீர்ப்பவனே போற்றி
ஓம் பால பைரவனே போற்றி
ஓம் பாம்பணிந்த தெய்வமே போற்றி
ஓம் பிரளயகாலனே போற்றி
ஓம் பிரம்ம சிரச்சேதனே போற்றி
ஓம் பூஷண பைரவனே போற்றி
ஓம் பூதங்களின் நாதனே போற்றி
ஓம் பெரியவனே போற்றி
ஓம் பைராகியர் நாதனே போற்றி
ஓம் மல நாசகனே போற்றி
ஓம் மகோதரனே போற்றி
ஓம் மகா பைரவனே போற்றி
ஓம் மலையாய் உயர்ந்தவனே போற்றி
ஓம் மகா குண்டலனே போற்றி
ஓம் மார்த்தாண்ட பைரவனே போற்றி
ஓம் முக்கண்ணனே போற்றி
ஓம் முக்தியருள்வோனே போற்றி
ஓம் முனீஸ்வரனே போற்றி
ஓம் மூலமூர்த்தியே போற்றி
ஓம் யமவாதனை நீக்குபவனே போற்றி
ஓம் யாவர்க்கும் எளியவனே போற்றி
ஓம் ருத்ரனே போற்றி
ஓம் ருத்ராட்சதாரியே போற்றி
ஓம் வடுக பைரவனே போற்றி
ஓம் வடுகூர் நாதனே போற்றி
ஓம் வடகிழக்கு அருள்வோனே போற்றி
ஓம் வடைமாலைப் பிரியனே போற்றி
ஓம் வாரணாசி வேந்தே போற்றி
ஓம் வாமனர்க்கு அருளியவனே போற்றி
ஓம் விரும்பியதை அருள்வோனே போற்றி
ஓம் விபீஷண பைரவனே போற்றி
ஓம் வீழாமல் காப்பவனே போற்றி போற்றி!

# ஸ்ரீ பைரவர் வழிபாடும் மந்திரங்களும்

**சொர்ணாகர்ஷண பைரவர் ஸ்தோத்திரம்:**

"ஓம் ஏம் க்லாம் க்லீம் க்லூம் ஹ்ராம் ஹ்ரீம்
ஹ்ரூம்ஸக: வம் ஆபத்துத்தாரணாய
அஜாமிலா பத்தாய லோகேஸ்வராய
ஸ்வர்ணாகர்ஷண பைரவாய
மம தாரித்தர்ய வித்வேஷணாய
ஓம் ஹ்ரீம் மஹா பைரவாய நம:"

இந்த மந்திரத்தை தினம் தோறும், பைரவரை வழிபட்டுப் பாராயணம் செய்து வந்தால் செல்வ வளம் பெருகும். கடன்கள் தீரும்.

**வடுக பைரவ மூல மந்த்ரம்:**

"ஓம் ஹ்ரீம் வம் வடுகாய ஆபத்துத்தாரணம்
குருகுரு வம் வடுகாய ஹ்ரீம் ஓம் ஸ்வாஹா"

சர்வ சத்ரு நாசத்திற்கும் ஆபத்துகள் விலகவும் மேற்கண்ட மந்திரம்.

**பைரவ காயத்ரி மந்திரம் 1:**

"ஓம் சூல ஹஸ்தாய வித்மஹே ஸ்வாந வாஹாய தீமஹி
தந்நோ பைரவ: ப்ரசோதயாத்"

இது நம்மைத் துன்பங்கள், துயரங்கள் அணுகாமல் இருக்க...

**பைரவர் காயத்ரி மந்திரம் 2:**

"ஓம் திகம்பராய வித்மஹே தீர்கதிஷணாய தீமஹி தந்நோ பைரவ: ப்ரசோதயாத்"

நீடித்த ஆயுளுக்கும், பகைவர்கள் தொல்லை அணுகாமல் இருக்கவும்

உசாத்துணை :

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html


# பைரவரைப் போற்றும் தேவாரப் பதிகம்

கும்பகோணம் - திருவாரூர் பாதையில் உள்ள திருச்சேறைத் தலத்திலுள்ள சாரபரமேஸ்வரர் ஆலயத்தில் கால பைரவர் அற்புதமாகக் காட்சியளிக்கிறார். அவரை வழிபட்ட திருநாவுக்கரசர், பைரவரைப் போற்றிப் பாடிய ஒரே ஒரு தேவாரப்பதிகம் இது.

விரித்த பல்கதிர்கொள் சூலம்
வெடிபடு தமருகம்கை
தரித்ததோர் கோலகால பயிரவனாகி
வேழம் உரித்து உமை அஞ்சக் கண்டு
ஒண்திருமேனி வாய் விள்ளச்
சிரித்தருள் செய்தார் சேறைச்
செந்நெறிச் செல்வனாரே.

உசாத்துணை :

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**
http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html



# பைரவர் வழிபாடும் அதன் சிறப்புகளும்




**பைரவர் வழிபாடும் அதன் சிறப்புகளும்:**

படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களையும் ஆற்றும் இந்த பைரவரின் வழிபாடு வடக்கேயிருந்து வந்த கபாலிக வழிபாட்டின் ஒரு பகுதியாகும். அனைத்து சிவாலயங்களில் பரிவார தெய்வ வழிபாடாக வழிபடப்படும் இந்த பைரவ வழிபாடு இல்லங்களில் திரிசூல வழிபாடாகவும் போற்றப்படுகிறது. வீடுகளில் காவல் தெய்வமான பைரவர் வடிவங்களை சிலைகளாகவோ படமாகவோ வைத்து வழிபடுவதற்குப் பதில் வீட்டின் சுவரில் திரிசூலத்தை வரைந்து அதனருகில் திருவிளக்கேற்றி வழிபடுகின்றனர். அனைத்து சிவாலயங்களிலும் வழிபாடு சூரியனிடமிருந்து ஆரம்பித்து அர்த்தசாமப் பூசையாக பைரவருடன் முடிவடைகிறது. இரவு அர்த்தசாமப் பூசை முடிந்ததும் பைரவருக்கான சிறப்பு வழிபாடுகள் செய்து ஆலயத்தின் கதவுகளை மூடி ஆலய சாவிக்கொத்தை அவரின் காலடியில் வைப்பது வழக்கம். பாதுகாப்பற்ற இந்நாளில் இப்படி சாவிகளை வைப்பதைத் தவிர்த்து பூசை முடிந்ததன் அடையாளமாக கைமணியையும் அபிஷேக கலசம் அல்லது கைச்செம்பையும் வைக்கின்றனர். ஆலயங்களில் நடைபெறும் வருடாந்திர பிரமோற்சவத்திற்கு முன்னும் பின்னும் பைரவருக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்யப்படுகின்றன. விசேஷதினங்களில் இவருக்கு நெய்யபிஷேகம் சிறப்பாகச் செய்யப்படுகிறது. அந்த விசேஷ தின பூசையில் எட்டுவித பட்சணங்களும், எட்டுவித அன்னங்களும், நைவேத்தியப் பொருட்களாக நிவேதிக்கப்படுகின்றன. இன்னும் எட்டுவித மலர்களால் அர்ச்சனை செய்து எட்டுவித ஆரத்திகளும் செய்யப்படுகின்றன.

**வழிபாட்டிற்கு உகந்த நேரம்:**

பைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். இந்த அகால நேரத்தில் பராசக்தியானவள் பைரவி என்னும் பெயரில் நடமாடுகின்றாராம். அவளுடன் இறைவனும் பைரவராக தலத்தை வலம் வருவாராம். அதனால் சித்தர்கள் அந்த நள்ளிரவு நேரத்தில் திரிபுர பைரவியையும் பைரவரையும் தியானிக்கின்றார்களாம்.

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**
http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html

# துன்பம் நீங்கி இன்பம் பெற பைரவர் வழிபாடு

சிவபெருமானின் பஞ்ச குமாரர்களில் கணபதி, முருகன், வீரபத்திரர், ஐயனார் மற்றும் பைரவரும் ஒருவர்.

1. பைரவர் என்பது வடமொழிச் சொல்லாகும். இதற்கு மிகவும் பயங்கரமானவர் என்பது பொருளாகும். எதிரிகளுக்கு பயம் தந்து தன்னை நாடுபவர்களுக்கு அருள் செய்வதால் இவருக்கும் பைரவர் என்பது பெயராயிற்று.
2. பைரவருக்கு க்ஷேத்திர பாலகமூர்த்தி என்றும் ஒரு பெயருண்டு. க்ஷேத்திரம் என்றால் கோயில். பாலகர் என்றால் காப்பவர். கோயிலைக் காப்பதால் இப்பெயர் ஏற்பட்டது.
3. பொதுவாக பைரவர் நீலமேனி கொண்டவராய், சிலம்புகள் அணிந்த திருவடியைக் கொண்டவராய், பாம்புகள் பொருந்திய திருவரையும் மண்டை ஓட்டு மாலைகள் புரளும் திருமார்பும், சூலம், பாசம், உடுக்கை, மழு முதலியன தாங்கிய திருக்கரங்களை உடையவராய் கூறப்பட்டாலும் அஷ்டபைரவர் வடிவங்களாகக் கூறும்போது அவரின் வர்ணம், ஆயுதம், வாகனம் இவை மாறுபட்டுக் காணப்படும்.
4. காசி நகரமே பைரவரின் பிரதான தலம் என்பதால் இந்நகரின் பல்வேறு இடங்களிலும் பைரவர் கோயில்கள் காணப்படுகின்றன.
5. தாராசுரம் மற்றும் திருப்போரூரில் பைரவர் அமர்ந்த நிலையில் காணப்படுகிறார்.
6. பைரவரின் பொதுவான வாகனம் நாய் ஆகும். ஒற்றை நாய் வாகனம் காணப்பட்டாலும் நகரத்தார் கோயில்களில் பைரவர் வடிவத்தில் பெரும்பாலும் இரு நாய் வாகனங்களே காணப்படுகின்றன. ஆனால் திருவான்மியூர், போரூர், வேதாரண்யம், திருவிற்கோலம் ஆகிய தலங்களில் பைரவருக்கு நாய் வாகனம் இல்லை.
7. அஷ்ட பைரவ வடிவங்களில் அன்னம், ரிஷபம், மயில், கருடன், குதிரை, யானை, சிம்மம், நாய் ஆகியவை வாகனங்களாகக் காட்டப்பட்டுள்ளன.
8. பைரவருக்குரிய வழிபாட்டு நேரம் நள்ளிரவாகும். ஒவ்வொரு மாதமும் தேய்பிறை அஷ்டமி தினங்களில் பைரவ விரதம் இருந்து வழிபட்டால் எந்தத் துன்பமும் நம்மை அணுகாது.

8473(P)

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html

# ஒவ்வொரு மாதமும் வழிபட வேண்டிய பைரவர்கள்

**இழந்த பொருட்களை மீண்டும் பெற:** பைரவரின் சன்னதி முன்னால் (27) மிளகை வெள்ளைத் துணியில் சிறு மூட்டையாகக் கட்டி அகல் விளக்கில் வைத்து நல்லெண்ணெய் ஊற்றி தீபமேற்றி 27 நாள் வழிபட்டால் இழந்த பொருட்களும் சொத்துக்களும் திரும்பக் கிடைக்கும்.

**குழந்தைச் செல்வம் பெற:** திருமணமாகி பல வருடங்களாகியும் குழந்தைப் பேறு இல்லாதவர்கள் ஆறு தேய்பிறை அஷ்டமி நாட்களில் சிவப்பு அரளிப் பூக்களால் பைரவரை அர்ச்சனை செய்து, ஏழை குழந்தைகளுக்கு அன்னதானம் வழங்கி வழிபடின் விரைவில் அத்தம்பதியருக்குக் குழந்தைச் செல்வம் கிட்டும்.

**சனி பகவானின் அருள் கிடைக்க, தோஷம் நீங்க:** சனீஸ்வரரின் குரு பைரவர் என்பதால், பைரவரை வணங்கினால், சனிபகவான் மகிழ்ந்து நமக்கு அதிக துன்பங்களைத் தரமாட்டார். எனவே, நாம் சனிக்கிழமைகளில் பைரவரை வணங்கினால் சனி பகவானால் உண்டாகும் இன்னல்கள் யாவும் நீங்கும்.

**தடைபெற்ற திருமணம் நடக்கவும், எதிரிகள் தொல்லை நீங்கவும்:** ஞாயிற்றுக்கிழமைகளில் இராகுகால நேரத்தில் பைரவரை வணங்க வேண்டும். அதனால் உடனே நன்மை உண்டாகும். பில்லி, சூனியம், ஏவல் அகலும். திருமணம் கைகூடும். 6 சனிக்கிழமைகளில் 6 எண்ணெய் தீபம் ஏற்றி வழிபட்டால் தடைபட்ட திருமணம் கைகூடும். தடைப்பட்ட அனைத்து காரியங்களும் நிறைவேறும். குடும்ப ஒற்றுமை நிலைக்கும்.

**ஒவ்வொரு மாதமும் வழிபட வேண்டிய பைரவர்கள்:** துவாதச ஆதித்தியர்கள் அதாவது பன்னிரண்டு ஆதித்தியர்கள் ஒருங்கிணைந்து சூரியனாகி செயல்படுவதாகவும், சூரியனே பன்னிரண்டு வித தன்மைகளுடன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு தன்மை உடையவராக செயல்படுவதாகவும் கூறுவார்கள். துவாதச ஆதித்யர்களை வழிபட்டு நலம் பெறலாம். காலத்தின் நாயகனும் சூரியனைத் தனக்குள் கொண்டவருமான சர்வேஸ்வரனின் திருவடிவமான பைரவர் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பைரவராகக் காட்சி தருகிறார். எந்தெந்த மாதத்தில் எந்த பைரவர் ஆட்சி புரிகிறாரோ அந்த பைரவரை வழிபட்டு நன்மை அடையலாம்.

உசாத்துணை


**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html

**மாதங்கள் துவாதச ஆதித்தியர்கள் ஆதித்தியர்களின் பிராண தேவதை:**

| | | | |
|---|---|---|---|
| சித்திரை | : | அம்சுமான் | சண்ட பைரவர் |
| வைகாசி | : | தாதா | ருரு பைரவர் |
| ஆனி | : | ஸவிதா | உன்மத்த பைரவர் |
| ஆடி | : | அரியமான் | கபால பைரவர் |
| ஆவணி | : | விஸ்வான் | ஸ்வர்ணாகர்ஷண பைரவர் |
| புரட்டாசி | : | பகன் | வடுக பைரவர் |
| ஐப்பசி | : | பர்ஜன்யன் | க்ஷேத்ரபால பைரவர் |
| கார்த்திகை | : | துவஷ்டா | பீஷண பைரவர் |
| மார்கழி | : | மித்திரன் | அசிதாங்க பைரவர் |
| தை | : | விஷ்ணு | குரோதன பைரவர் |
| மாசி | : | வருணன் | ஸம்ஹார பைரவர் |
| பங்குனி | : | பூஷா | சட்டநாத பைரவர். |

உசாத்துணை
http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html



# ஸ்ரீ-சௌபாக்ய-பைரவர்

உயிர்கள் எல்லாவற்றிற்கும் சகல செல்வங்களைத் தந்து அவற்றின் மூலம் இன்பத்தையும் அனுபவிக்கச் செய்யும் தெய்வமாகத் திகழ்பவர் சௌபாக்ய பைரவர். இவர் கொலு வீற்றிருக்குமிடம் கற்பகச் சோலைகளுக்கு இடையே அமைந்துள்ள பொங்கு பூம்புனல் ஊற்றுக்கு நடுவில் உள்ளதான மகராலயமாகும்.

மகரங்களால் தாங்கப்படும் பொன் மயமான கோட்டையில் சகல பரிவாரங்களுடன் பைரவர் எழுந்தருளியிருக்கிறார். தூய வெண்ணிறமான குதிரையை வாகனமாகவும், இரட்டை மீன் பொறித்த கொடிகளை உடையவராகவும், மச்சமுத்திரை தாங்கியவராகவும் அவர் ஜொலித்துக் கொண்டிருக்கிறார்.

பொன் வண்ணத்துடன், பளபளப்பாக அழகிய அகன்ற கண்களைக் கொண்ட மீன், கடலின் உள்ளே மறைந்திருக்கும் பெருஞ் செல்வத்தின் அடையாளமாகும். கடலின் அடியாழத்தில் மகரம் எனப்படும் ஆற்றல் பொருந்திய மீன்கள் வாழ்கின்றன. செல்வத்திற்கு அவை காவல் தெய்வங்களாக உள்ளன.

மகரங்களால் காக்கப்படும் கோட்டையே மகராலயமாகும். அத்தகைய செல்வச் சிறப்பு மிக்க மீன் வடிவக் கோட்டையில் சௌபாக்ய பைரவர் பாக்யேஸ்வரியான ஆனந்தவல்லியுடன் வீற்றிருக்கின்றார். மீன் அல்லது மீன் கொடியை உடையவராக, நகுலம் எனும் கீரியை ஏந்தியவராக, சூலம், அமிர்தம் நிரம்பிய பானபாத்திரம் தாங்கியுள்ளவராக வெண்ணிற குதிரையில் அமர்ந்து காட்சியளிக்கின்றார். பாக்யத்தின் பயன் ஆனந்தமே என்பதால் அவரது தேவியின் பெயர் ஆனந்தவல்லி என்று வழங்கப்படுகிறது. அவருடைய மகராலயமான அறுகோணக் கோட்டையின் ஆறு பக்கங்களிலும் அமைந்துள்ள உப்பரிகைகளில் உல்லாசினி, நிராகுலி, யோகின்யை, சல்லாபினி, ஹ்ரிதேஸ்வரி, விநோதினி எனும் ஆறு தேவியர் உள்ளனர். இவர்கள் அன்பர்களுக்குக் கவலையற்ற நிலையையும், மன மகிழ்ச்சியையும், இதமான மனோநிலையையும், புதிய புதிய சுகங்களையும் பெறும்படியான பாக்யத்தைக்கொடுக்கின்றனர். இவர்களை பைரவ தந்திரத்தினர் ஷட்குல தேவியர் என்று அழைக்கின்றனர்.

இவர்களையடுத்த எண்கோணக் கோட்டையில் அஷ்ட பைரவர்கள் அஷ்டமாத்ருகைகளுடன் எட்டு கோணங்களில் வீற்றிருக்கின்றனர். அவர்களை அடுத்த வெளிவட்டத்தில் உள்ள தாமரைப் பொய்கைகளின் நடுவே பதினாறு பவள மாளிகைகள் உள்ளன. அதில் பதினாறு பேற்றையும் வழங்க வல்ல, சோடச லட்சுமிகள் எனப்படும் செல்வ லட்சுமிகள் வசிக்கின்றனர். இவர்களை அடுத்துள்ள கொடிகள் நிரம்பிய வல்லீ வனத்தில் உள்ள அறுபத்து நான்கு மாளிகைகளில் அறுபத்து நான்கு யோகினியருடன் அறுபத்து நான்கு பைரவர்களும், அவர்களது பரிவாரமான வேதாளர்களும் வீற்றிருக்கின்றனர்.

அவர்களை அடுத்து மூவட்டம் விளங்குகிறது. இந்த வட்டங்களில் காடுகள் முதல் வட்டத்திலும், அடுத்த வட்டத்தில் அகழியும், மூன்றாவது வட்டத்தில் மலைகளும் உள்ளன. காடுகளில் வன பாலகர்களும், அகழியில் தீர்த்த பாலகர்களும், மலைகளில் ஷேத்திர பாலகர்கள் எனும் கிரி பாலகர்களும் வீற்றிருக்கின்றனர். இவர்கள் எண்ணற்றவர்கள்.

சௌபாக்ய பைரவரையும், அவரது பரிவாரங்களையும் குறிக்கும் வகையில் அமைந்ததே சௌபாக்ய பைரவ யந்திரம். இதில் கற்பக வனங்கள் சூழ்ந்த சோலைகளின் நடுவே அமைந்துள்ள பொங்கும் பூம்புனல் மடுவைக் குறிக்கும் வகையில் மடுவில் வட்டமான வடிவமும், அதன் நடுவில் பைரவர் வீற்றிருக்கும் மகராலயத்தினைக் குறிக்கும் வகையில் இரட்டை மீன் வடிவமும் உள்ளன. அதைச் சுற்றி அமைந்த அறுகோணத்தில் பைரவ சமயத்தின் குல தேவதைகளான ஷட்குல தேவியர்கள் வீற்றிருக்கின்றனர். அதை அடுத்த எண் கோலத்தில் அஷ்ட பைரவர்கள் தேவியருடன் வீற்றிருக்க, அதைச் சுற்றியமைந்த பதினாறு இதழ் தாமரையில் சோடச லட்சுமிகள் வீற்றிருக்கின்றனர். அதைச் சுற்றியமைந்த அறுபத்து நான்கு இதழ் தாமரையில் யோகினிகளும், பைரவர்களும், வேதாளங்களும் உள்ளனர். அதைச் சூழ்ந்துள்ள மூவட்டங்கள் காட்டரண், மலையரண், நீரரண் ஆகியவற்றைக் குறிக்கின்றன. அவற்றில் வனபாலர்கள், தீர்த்த பாலர்கள், கிரிபாலர்கள் பூசிக்கப்படுகின்றனர். அதையடுத்த மூன்று புறங்களில் பிரபஞ்சத்தைச் சுற்றியுள்ள வட்டவெளியாக உள்ள சப்தசாகரம், சக்ரவாள கிரி ஆகியவற்றிலுள்ள தேவர்கள் வழிபடப்படுகின்றனர். இந்த வட்டங்களின் நான்கு திக்கிலும் மந்திர பைரவர், யந்திர பைரவர், மணி பைரவர், ஔதபைரவர் என்ற நால்வர் வீற்றிருக்கின்றனர். நான்கு புறமும் மும்மூன்று வீதிகள் உள்ளன. இவை கடல், ஆகாசம், மலை என்பனவற்றைக் குறிக்கின்றன. இந்த சகல சௌபாக்ய சக்கரத்தை நிலைப்படுத்தி அதிலுள்ள தேவர்களையும், தேவதைகளையும் ஆராதித்து வழிபடுபவன் சகல செல்வங்களையும் அடைகிறான். இவர்கள் தம்மை ஆளும் தலைவனாக விளங்கும் சௌபாக்ய பைரவரின் பக்தர்களுக்கு எவ்வித ஆபத்தும் இல்லாமல் காப்பவர்கள்.

சௌபாக்ய பைரவர் அன்பர்களுக்கு எல்லையற்ற சுகமான வாழ்வைத் தருவதுடன் அவர்களை எப்போதும் மகிழ்ச்சியில் நிலைத்திருக்கச் செய்கிறார். இதிலுள்ள தேவதைகள் யாவரும் வாழ்வில் மகிழ்ச்சியை நிலைத்திருக்கச் செய்பவர்கள். பகைவர்களிடமிருந்து காப்பவர்கள். மனதில் உண்டாகும் அதிர்ச்சியையும் கலக்கத்தையும் நீக்குபவர்கள். நாளும் புதிது புதிதான மகிழ்ச்சியை உண்டாக்குபவர்கள். இயற்கையாலும் விலங்குகளாலும் உண்டாகும் தொல்லைகளை அறவே அகற்றுபவர்கள்.

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html

# ஸ்ரீ பைரவர்

சிவபெருமானால் படைக்கப்பெற்ற பிரம்மன், சிவனாரைப் போலவே ஐந்து முகங்களும் எட்டுத் தோள்களு மாக விளங்கினார். எனவே இவரை, சிவபெருமானுக்கு இணையாக அனைவரும் போற்றினர். இதனால் ஆணவம் கொண்டார் பிரம்மன் மதிமயங்கி சிவநிந்தனை செய்தார். அப்போது பைரவரைத் தோற்றுவித்த சிவனார், பிரம்மதேவனின் ஐந்தாவது தலையை வெட்டி, அதனை கபாலமாக்கிக் கொண்டார்.

இன்னொரு கதையும் சொல்வர்.

திருமாலும் பிரம்மனும் சிவனாரின் அடி-முடியைத் தேட முயன்றபோது, பிரம்மன் அன்னபட்சியாகி வானில் பறந்து சென்று சிவனாரின் திருமுடியைக் காண இயலாமல் தோற்றார். ஆனாலும் தோல்வியை ஒப்புக் கொள்ள மனமின்றி, திருமுடியைக் கண்டதாக பொய்யுரைத்து திருமுடியில் இருந்து வீழ்ந்ததாக தாழம்பூவையும் பொய் சாட்சி சொல்ல வைத்தார். குறிப்பாக, பிரம்மனது ஐந்தாவது தலை இந்தப் பொய்யைத் திரும்பத் திரும்ப சொன்னதாம்!

இதில் சினம் கொண்ட சிவனார், தனது புருவ மத்தியில் இருந்து பைரவ மூர்த்தத்தை உண்டு பண்ணினார். 'பைரவனே! பொய்யுரைத்த பிரம்மனின் தலைகளை அறுத்தெறி' என்று உத்தரவிட்டார். உடனே பிரம்மனின் உச்சந்தலையை அறுத்தெறிந்தாராம் பைரவர். மற்ற தலைகளையும் வெட்ட முயன்றார். அப்போது அங்கு தோன்றிய திருமால், "முன்னர் பிரம்மன் செய்த தவத்தில் மகிழ்ந்து அவனுக்கு ஐந்து முகங்கள் அளித்தீர். இப்போது நீரே நான்முகனாகி விட்டீர். எனவே அவனை மன்னியுங்கள்!" என்றார். இதையடுத்து பிரம்மாவும் மன்னிப்பு கேட்டார்.

"வேதம் ஓதுவோருக்கு இனி நீரே அரசன் அனைத்து வேள்விகளுக்கும் நீயே குரு! யாக யக்ஞங்களின் பலனை அனைவருக்கும் நீ வழங்கு" என்று அருளினார் ஈசன். எனவே, பிரம்மன் தனது நான்கு முகங்களாலும் வேதங்களை ஓதிக் கொண்டே இருப்பதால், வேதன், வேதி, வேதா, வேதபுரோகிதன் என்றெல்லாம் அழைக்கப்படுகிறார்.

படிப்பு மற்றும் அறிவினால் வித்யாகர்வம் வந்து விடுகிறது. ஆணவமும் செருக்கும் உண்டாகிறது் இறுமாப்பு மற்றும் அகங்காரம் தலைதூக்கி விடுகிறது. இதனால் பொய்யும் புரட்டும் அதிகமாகி, பிற உயிர்களுக்குத் துன்பத்தையும் தீமையையும் ஏற்படுத்தி விடுகிறது. இவற்றையெல்லாம் சிவபெருமான் நீக்கினார் என்பதை இந்தக் கதையின் மூலம் அறியலாம்.

தனது உக்கிரத்தில் இருந்து பைரவ மூர்த்தியை சிருஷ்டித்து பிரம்மதேவனின் அகங்காரத்தை அடக்குவதற்காக அவனது தலையை கொய்தார் அல்லவா சிவபெருமான்! இந்த பைரவ மூர்த்தியை பிரம்மசிரக் கண்டீஸ்வரர் என்று அழைப்பர்.

சிவனாரின் அட்டவீரட்ட தலங்களில் முதன்மையானது கண்டியூர். இங்கு பிரம்மனது ஒரு தலையை கண்டித்து, துண்டித்ததால் இந்த ஊருக்கு கண்டியூர் என பெயர் அமைந்ததாம்! தஞ்சாவூரில் இருந்து திருவையாறு செல்லும் வழியில் உள்ளது இந்த ஊர்.

இங்கு மேற்கு பார்த்த சந்நிதியில் சிரக்கண்டீஸ்வரர் காட்சி தருகிறார். அம்பாள்-மங்களநாயகி.

பிரம்மனின் தலையைக் கொய்த பைரவரின் வடிவம் இங்கு உள்ளது. பிரம்மன், இங்கு திருக்குளத்தை (பிரம்ம தீர்த்தம்) அமைத்து, சிவனாரை வழிபட்டான் என்பர். கண்டியூர் வீரட்டனாத்து மகாதேவர் என்று கல்வெட்டுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரம்மசிரக்கண்டீஸ்வரரின் அற்புத சிற்பம் ஒன்று காஞ்சிபுரம் கயிலாசநாதர் திருக்கோயிலில் உள்ளது. இதில் ஐந்தில் ஒரு தலையை இழந்து விட்ட பயத்துடன் காட்சி தருகிறார் பிரம்மன். எட்டு கரங்களில் ஒரு கரத்தில், பிரம்மனின் தலையையும் வில், மான், மழு, அம்பு, சூலம், பாசம் ஆகியவற்றை ஏந்தியபடி இன்னொரு கரத்தில் வியோம முத்திரையுடன் தரிசனம் தருகிறார் பைரவர்! சடையில் பாம்புகள் முகத்தில் கடுங்கோபம் வலக்காலை ஊன்றி இடக்காலை மடித்தும் காட்சி தருகிறார்.

காஞ்சிக்குத் தெற்கில் உள்ள பெருநகர் என்பது பிரம்மன் சிவபெருமானை வழிபட்ட பிரம்ம நகரம். இங்கு உள்ள தனிச் சந்நிதியில் பைரவ சிவன் வடிவம் தனிச் சிறப்புடன் திகழ்கிறது.

வலிமை மிக்க ஞானமூர்த்தியாக பைரவரை சிருஷ்டித்து அவரிடம் உலகைக் காக்கும் பொறுப்பை அளித்தார் சிவபெருமான். எதிரிகளுக்கு பயத்தையும் தன்னை வேண்டியவர்க்கு அருளையும் தரும் சிவமூர்த்தி இவர்!

பைரவர் என்றால் பயங்கரமானவர் என்று பொருள். பெண்களுக்குக் காவலாக இருந்து தர்மத்தைக் காப்பதால் இவர் பைரவர் என்பாரும் உண்டு. பைரவர் என்பது மருவி வைரவர் ஆனதாகச் சொல்வர். வைரம் போல் திடமான தேகம் கொண்டவர் பக்தர்களுக்கு வைரம் போன்ற உறுதியான கோட்டையாக இருந்து காவல் தெய்வமாக விளங்குபவர் என்பதற்காகவும் வைரவர் என்று அழைக்கப்பட்டதாகவும் சிலர் கூறுகின்றனர்.

தலை மீது ஜ்வாலா முடி மூன்று கண்கள் மற்றும் மணிகளால் கோர்க்கப்பட்ட ஆபரணத்தை அணிந்தும் காணப்படுகிறது பைரவரின் வடிவம்! பின்னிரு கரங்களில் டமருகம், பாசக்கயிறு முன்னிரு கரங்களில் சூலம், கபாலம், காவல் தெய்வம் என்பதால், காவலுக்கு உதாரணமாக சொல்லப்படும் நாயை வாகனமாகக் கொண்டுள்ளார். இவரது வாகனமான நாய் இவருக்குப் பின்னே குறுக்காகவும், சில இடங்களில் நேராகவும் உள்ளது. சில தலங்களில், நான்கு நாய்களுடன் காட்சி தருகிறார் பைரவர்!

வேதமே நாய் வடிவம் கொண்டு பைரவருக்கு வாகனமாக உள்ளது என்றும் சொல்கின்றனர்

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**
http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html



# விளக்கு ஏற்றுவதன் பலன்

விளக்கில் முதலில் திரியைப் போட்டு பின்னர் எண்ணெய் ஊற்றக் கூடாது

பசு நெய் : எல்லா சுகங்களும் கிடைக்கும். செல்வம் சேரும்.

நல்லெண்ணை : எல்லாவித பீடைகளும் விலகும்.

கடலை எண்ணெய் : இதை ஊற்றி தீபம் ஏற்றக்கூடாது.

விளக்கு எண்ணெய் : தாம்பத்திய சுகம், புகழ் தேவதை வசியம் கிடைக்கும். பொதுவாக சுத்தமான, கலப்படமில்லாத நல்லெண்ணை ஏற்றி வீட்டில் விளக்கேற்றினாலே போதும். சிறிய வெள்ளி காமாட்சி விளக்கு வாங்கி அதில் நெய் ஊற்றி காலையிலும், மாலையிலும் ஏற்றி வைப்பது நல்லது.

ஆலயத்தில் இலுப்ப எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றி சிவனை வழிபட்டால் கடன்கள் தீரும். இலுப்ப எண்ணெய் கோவில்களில் மட்டும்தான் பயன்படுத்தலாம். வீட்டில் விளக்கேற்ற இலுப்பை எண்ணெய் பயன்படுத்தக்கூடாது. கணபதிக்கு தேங்காய் எண்ணெய் ஊற்றி விளக்கேற்றலாம். மகாலட்சுமிக்கு பசு நெய் ஊற்றி விளக்கேற்றலாம்.

மகாவிஷ்ணுவுக்கு நல்லெண்ணை ஊற்றி விளக்கேற்றலாம். எல்லா தேவதைகளுக்கும் நல்லெண்ணை விளக்கு ஏற்றலாம். விளக்கிற்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் கடலை எண்ணெய் ஊற்றி தீபம் ஏற்றவே கூடாது. அப்படி ஏற்றி வைத்தால் கடன்கள் பெருகும். தீயவிளைவுகள்தான் ஏற்படும்.

பசுநெய், விளக்கு எண்ணெய், வேப்ப எண்ணெய், இலுப்ப எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகிய இந்த ஐந்தும் கலந்த பஞ்ச தீப எண்ணெய் ஊற்றி ஐந்து முகம் ஏற்றி பஞ்சமி திதியில் தேவியை வழிபட்டால் அம்மனின் அருள் கிடைக்கும். பஞ்சதீப எண்ணெய் ஊற்றி ஐந்து முகம் ஏற்றி வடக்குப் பக்கம் பார்த்து தீபம் ஏற்றி வந்தால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி கிடைக்கும். துன்பங்கள் நீங்கும். வரவேண்டிய பண பாக்கிகள் வந்து சேரும். ஞாயிறு, திங்கள், வியாழன், சனி ஆகிய தினங்களில்தான் குத்துவிளக்கை விளக்கி சுத்தப்படுத்த வேண்டும். பிற நாட்களில் சுத்தப்படுத்தக் கூடாது.

குத்து விளக்கு பூஜை செய்தால் தலைவாழை இலை மீது குத்து விளக்கை வைத்து பூஜை செய்ய வேண்டும். விளக்கில் விபூதி, சந்தனம் அல்லது குங்குமம் உச்சியில் ஒரு பொட்டும் அதன் கீழ் மூன்றும், அதன் அடி கீழ் இரண்டும், அடியில் இரண்டுமாக எட்டு இடங்களில் பொட்டு இட வேண்டும்.

குத்து விளக்கின்அடிப்பாகத்திலும், நடுப்பகுதியிலும், உச்சிப் பகுதியிலும் பூச்சூட வேண்டும். விளக்கில் முதலில் திரியைப் போட்டு பின்னர் எண்ணெய் ஊற்றக் கூடாது.


முதலில் எண்ணெய் ஊற்றி விட்டு பின்னர்தான் திரிபோட வேண்டும்.

தீபாவளிதிருநாளில் இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு தீபம் ஏற்றி வழிபட வேண்டும். தீபாவளி தின தீப வழிபாடு உங்கள் புகழ், செல்வம், உடல் நலத்தை மேலும் அதிகரிக்கும்.

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html



# கிரக தோஷம் போக்கும் ஆதிபைரவர்!

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் சிவகாமசுந்தரி சமேத திருத்தளிநாதர் கோவிலில் தனிச் சன்னதியில் எழுந்தருளி கம்பீரத்துடன் அமர்ந்து அருள் பாலிக்கும் ஸ்ரீயோக பைரவர்தான் ஆதிபைரவர்.

இவரிடம் இருந்துதான் முதலில் அசிதாங்க பைரவர், உருபைரவர், சண்ட பைரவர், குரோதன பைரவர், உன்மத்த பைரவர், கால பைரவர், பீஷண பைரவர், சம்ஹார பைரவர் எனும் அஷ்ட பைரவர்கள் தோன்றினர்.

பின்னர் இந்த எட்டு பைரவர் திருமேனி ஒவ்வொன்றிலிருந்தும் எட்டு எட்டாக ஒவ்வொரு காரணத்திற்கேற்ப 64 திருக் கோலங்களில் பைரவர்கள் வாகனத்துடனும், வாகனம் இல்லாமலும் நம் நாட்டில் உள்ள எல்லாக் கோவில்களிலும் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்கள். ஆக, நம் நாட்டில் உள்ள எல்லா ஆலயங்களிலும் எழுந்தருளி அருள்பாலிக்கும் எல்லா பைரவ மூர்த்திகளுக்கும், இத்தலத்தில் எழுந்தருளிக்கும் ஸ்ரீயோக பைரவர்தான் மூலமூர்த்தி ஆவார்.

பைரவரை ஜோதிட நூல்கள் காலமே உருவாய் கொண்ட காலபுருஷனாக கூறுகின்றன. பன்னிரெண்டு ராசிகளும் அவரது உருவின் பகுதிகளாகின்றன.

மேஷம்-சிரசு, ரிஷபம்-வாய், மிதுனம்-இரு கரங்கள், கடகம்-மார்பு, சிம்மம்-வயிறு, கன்னி-இடை, விருச்சிகம்-லிங்கம், தனுசு-தொடைகள், மகரம்-முழந்தாள், கும்பம்-கால்களின் கீழ்பகுதி, மீனம்-அடித்தளங்கள்.

பிரபஞ்சத்தில் சகல ஜீவ ராசிகளும் வான் மண்டலத்தில் உள்ள நட்சத்திரங்களும், சூரியன், சந்திரன், சனி, ராகு - கேது ஆகிய நவக்கிரகங்களும் காலச்சக்கரத்தின் ஆளுகைக்கு உட்பட்டதே! காலச் சக்கரத்தினை இயக்கும் பரம்பொருள் பைரவரே!


கிரகங்கள் எல்லாம் நம்மை ஆட்டிப் படைக்கின்றன. ஆனால், அந்த கிரகங்களை எல்லாம் ஸ்ரீயோக பைரவர் ஆட்டிப் படைத்து ஆட்சி செய்கிறார். பைரவர் அரசர் என்றால், அவர் இட்ட கட்டளைகளை நிறைவேற்றும் சேவகர்களே கிரகங்கள். பைரவரின் கட்டளைப்படியே காலச்சக்கரம் சுழல்கிறது. அவர் கட்டளைப்படியே எல்லா கிரகங்களும் செயல்படுகின்றன. அவரைச் சரணடைந்து நெஞ்சம் உருக வழிபட்டால் காலத்தின் கட்டுப்பாட்டையும் மீறி கிரக தோஷங்களை அகற்றி நன்மை புரிவார்.

ஒவ்வொரு கிரகப்பெயர்ச்சியின்போதும் எல்லா ராசிகளுக்கும், குறிப்பாக பாதிக்கப்படும் ராசிக்காரர்கள் ஸ்ரீபைரவரைச் சரணடைந்து வழிபட அவரின் கடைக்கண் பார்வை பட்டு வாழ்வில் எல்லா வளமும் பெறலாம்!

உசாத்துணை

**Monday, July 25, 2011 Vairavar Valipadu**

http://bairavararul.blogspot.com/2011/07/blog-post_25.html



# 64 பைரவர்கள் மற்றும் அவர்களின் சக்திகள்

வைரவர் சிவபெருமானின் அறுபத்து நான்கு திருமேனிகளுள் ஒருவராவார். இவர் வைரவர் என்றும் அறியப்படுகிறார். வைரவரின் வாகனமாக நாய் குறிப்பிடப்படுகிறது. வைரவரை சொர்ணாகர்ஷண வைரவர், யோக வைரவர், ஆதி வைரவர், கால வைரவர், உக்ர வைரவர் என்றெல்லாம் அழைக்கின்றார்கள்.

கால வைரவர், சிவ பெருமானின் ருத்திர ரூபமாக சொல்லப்படுபவர் சிவன் கோவிலின் வட கிழக்குப் பகுதியில் நின்ற கோலத்தில் காட்சி தருபவர். ஆடைகள் எதுவுமில்லாமல் பன்னிரு கைகளுடன் நாகத்தை பூணூலாகவும், சந்திரனைத் தலையில் வைத்தும், சூலாயுதம், பாசக் கயிறு, அங்குசம் ஆகிய ஆயுதங்களைத் தாங்கியும் நிர்வாண ரூபமாய்க் காட்சி தருபவர். கால வையிரவர் சனியின் குருவாகவும், பன்னிரன்டு ராசிகள், எட்டு திசைகள், பஞ்ச பூதங்கள், நவகிரகங்களையும், காலத்தையும் கட்டுப்படுத்துபவராகவும் கூறப்படு கிறார்.

வைரவ மூர்த்தி அறுபத்து நான்கு பணிகளைச் செய்யும் பொருட்டு அறுபத்து நான்கு வைரவராக தோற்ற மளிக்கின்றார். முதலில் தோன்றிய பைரவர் சொர்ண பைரவரே ஆவார். ஒரு வடிவம் பின்பு 8 பைரவர்களாக மாறியது. பின்னர் 8 பைரவ வடிவங்கள் ஒவ்வொன்றும் 8 வடிவங்களாக மாறி 64 பைரவர்களாக வெளிப்பட்டனர். 64 யோகினிகளே 64 பைரவர்களின் சக்திகளாக மாறினர். 64 பைரவர்களும் அவர்தம் சக்திகளின் பெயர்களும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| எண் | வைரவர் | யோகினி |
|---|---|---|
| 1. | நீலகண்ட வைரவர் | ஜயா |
| 2. | விசாலாட்சி வைரவர் | விஜயா |
| 3. | மார்த்தாண்ட வைரவர் | ஜயந்தி |
| 4. | முன்டனப்பிரபு வைரவர் | அபராஜிதா |
| 5. | ஸ்வஸ்சந்த் வைரவர் | திவ்யமோகினி |
| 6. | அதிசந்துஷ்ட வைரவர் | மகாயோகினி |
| 7. | கேசர வைரவர் | ஸித்தமோகினி |
| 8. | ஸம்ஹார வைரவர் | கணேஸ்வர யோகினி |
| 9. | விஸ்வரூப வைரவர் | ப்ரேதாஸின்யை |
| 10. | நானாரூப வைரவர் | டாகினி |
| 11. | பரம வைரவர் | காளி |
| 12. | தண்டகர்ண வைரவர் | காளராத்ரி |
| 13. | ஸீதாபத்ர வைரவர் | நிசாசரி |
| 14. | சிரீடன் வைரவர் | டங்கார்ரீ |
| 15. | உன்மத்த வைரவர் | வேதாள்யா |

| | | |
|---|---|---|
| 16. | மேகநாத வைரவர் | ஹம்காரி |
| 17. | மனோவேக வைரவர் | ஊர்த்துவகேசி |
| 18. | ஷேத்ரபாலக வைரவர் | விருபாட்சி |
| 19. | விருபாஷவைரவர் | சுஷ்காங்கீ |
| 20. | காரள வைரவர் | நரபோஜினி |
| 21. | நிர்பய வைரவர் | பட்சார்ரி |
| 22. | பிசித வைரவர் | வீரபத்ரா |
| 23. | ப்ரேஷ்த வைரவர் | தூம்ராக்ஷி |
| 24. | லோகபால வைரவர் | கலகப்ரியா |
| 25. | கதாதர வைரவர் | கோர ரத்தாட்சி |
| 26. | வஜ்ரஹஸ்த வைரவர் | விச்வரூபி |
| 27. | மகாகால வைரவர் | அபயங்கிரி |
| 28. | பிரகண்ட வைரவர் | வீரகௌமாரி |
| 29. | ப்ரளய வைரவர் | சண்டிகை |
| 30. | அந்தக வைரவர் | வாராஹி |
| 31. | பூமிகர்ப்ப வைரவர் | முண்டதாரணி |
| 32. | பீஷண வைரவர் | ராக்க்ஷஸி |
| 33. | ஸம்ஹார வைரவர் | பைரவி |
| 34. | குலபால வைரவர் | த்வாங்க்ஷிணி |
| 35. | ருண்டமாலா வைரவர் | தூம்ராங்கி |
| 36. | ரத்தாங்க வைரவர் | பிரேதவாகினி |
| 37. | பிங்களேஷ்ண வைரவர் | கட்கினி |
| 38. | அப்ரரூப வைரவர் | தீர்க்கலம் போஷ்யா |
| 39. | தராபாலன வைரவர் | மாலினி |
| 40. | ப்ரஜாபாலன வைரவர் | மந்திரயோகினி |
| 41. | குல வைரவர் | காளி |
| 42. | மந்திரநாயக வைரவர் | சக்ரிணி |
| 43. | ருத்ர வைரவர் | கங்காளி |
| 44. | பிதாமஹ வைரவர் | புவனேஸ்வரி |
| 45. | விஷ்ணு வைரவர் | த்ரோடகீ |
| 46. | வடுகநாத வைரவர் | மகாமாரீ |
| 47. | கபால வைரவர் | யமதூதி |
| 48. | பூதவேதாள வைரவர் | காளி |
| 49. | த்ரிநேத்ர வைரவர் | கேசினி |
| 50. | திரபுராந்தக வைரவர் | மர்த்தினி |

| | | |
|---|---|---|
| 51. | வரத வைரவர் | ரோமஜங்கே |
| 52. | பர்வதவாகன வைரவர் | நிர்வாணி |
| 53. | சசிவாகன வைரவர் | விசாலி |
| 54. | கபாலபூஷன வைரவர் | கார்முகி |
| 55. | ஸர்வக்ஞ வைரவர் | தோத்யமினம |
| 56. | ஸர்வதேவ வைரவர் | அதோமுக்யை |
| 57. | ஈசான வைரவர் | முண்டாக்ரதாரிணி |
| 58. | ஸர்வபூத வைரவர் | வியாக்ரிணி |
| 59. | கோரநாத வைரவர் | தூங்ஷிணி |
| 60. | பயங்கர வைரவர் | பிரேதரூபிணி |
| 61. | புத்திமுக்திபலப்ரத வைரவர் | தூர்ஜட்டை |
| 62. | காலாக்னி வைரவர் | கோர்யா |
| 63. | மகாரௌத்தர வைரவர் | கராளி |
| 64. | தட்சிணாபிஸ்தித வைரவர் | விஷலங்கர்யா |

நன்றி
வயாவிளான் தெற்கு ஞானவைரவர் ஆலயம் இணையதளம்
WWW.Vayavilan.org



# கால பைரவர் தோன்றிய கதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் குறிப்பாக வட இந்தியாவில் கால பைரவர் இல்லாத கோவில்களே இல்லை என்று கூறுமளவு மிகவும் பெருமை பெற்றவர் கால பைரவர். இவர் கைகளில் திரிசூலம், உடுக்கை மற்றும் வெட்டப்பட்ட ஒரு தலையுடன், உடலில் சாம்பல் பூசிக் கொண்டு, நாய் மீது அமர்ந்த படி மிகவும் பயங்கரமாக காட்சியளிப்பார்.
இவரை வணங்கினால் பல இன்னல்களில் இருந்து நம்மை விடுவிப்பார் என்பது பெரும்பாலானோரின் நம்பிக்கை. இவ்வளவு பெருமைமிக்க கால பைரவர் எப்படி அவதரித்தார் என்பது உங்களுக்குத் தெரியுமா? இங்கு ஸ்கந்த புராணத்தில் கால பைரவர் தோன்றிய கதை குறித்து கொடுக்கப்பட்டுள்ளது.

**தேவலோக விவாதம்**

தேவலோகத்தில் உள்ள தெய்வங்கள் ஒரு முறை பல விஷயங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்தனர். அப்போது ஒரு தேவதை தெய்வங்களில் உத்தமமானவர் யார் எனக் கேட்க, பிரம்மா சிறிதும் தாமதிக்காமல், இதில் என்ன சந்தேகம் நான் தான் எனக் கூறினார். இதைக் கேட்ட விஷ்ணு பகவான் கோபம் கொண்டார். இருவருக்கும் கடுமையான வாக்குவாதம் நடைப்பெற்றது.

**வேத அதிபதிகள்**

விவாதம் முடிவது போன்று இல்லை. எனவே அவர்கள் வேத அதிபதிகளை அழைத்து, அவர்களின் கருத்தைக் கேட்டனர். வேத அதிபதிகளோ சற்றும் யோசிக்காமல், சிவபெருமான் தான் அனைவரையும் விட உத்தமமானவர் என்று கூறினர். அதைக் கேட்ட பிரம்மா மிகுந்த ஆத்திரம் கொண்டு, சிவபெருமானைக் குறித்து கண்ட படி பேசினார்.

**பிரம்மாவின் ஆத்திரக் கூற்று**

பிரம்மா ஆத்திரத்தில், 'யார் அந்த சிவன்? உடல் முழுவதும் தூசி படிந்தவாறு சாம்பல் பூசிக்கெண்டு, கழுத்தில் பாம்பை சுற்றிக் கொண்டு, நீண்ட சடைமுடியுடன், ஒரு மாட்டின் மீது அமர்ந்து சுற்றுகின்றவரா, என்னை விட உத்தமமானவர்? என இன்னும் ஏசிக் கொண்டிருக்கையில், கைலாயத்தில் உள்ள சிவனின் காதுகளில் அனைத்தும் விழ, சிவன் மிகுந்த கோபத்திற்கு உள்ளானார்.

**ஒளி வெள்ளமாக தோன்றிய சிவன்**

பிரம்மாவின் கூற்றைக் கேட்டு, விஷ்ணுவும், பிற கடவுள்களும் பிரமித்து நிற்கையில், மிகுந்த சப்தத்துடன் சிவன் ஒளி வெள்ளமாக தோன்ற, அந்த ஒளி வெள்ளத்தில் ஒரு மனிதன் தோன்றினான். பிரம்மா அம்மனிதனைக் கண்டு யார் நீ என்று கேட்க, அம்மனிதன் சிறு குழந்தையாக உருமாறி அழத் தொடங்கியது.

**ருத்ரா**

'ஏய் குழந்தாய், நீ என் தலையில் இருந்து முளைத்ததோடு, என்னை சரணடைந்து அழுவதினால் உனக்கு ருத்ரா என பெயரிடுகிறேன் என்று கூறியதோடு, அழுவதை நிறுத்திவிட்டு உலகைப் படைக்கத் துவங்கு, நான் உன்னைக் காப்பாற்றுகின்றேன் என்று கூறினார் பிரம்மா.

**கால பைரவர்**

பிரம்மா அவ்வாறு கூறியதும், அக்குழந்தை ஒரு பயங்கரமான உருவத்துடன் உருமாறி, அவர் எதிரில் நின்றது. மீண்டும் பிரம்மா, 'ஏய் மனிதா, இவ்வளவு பயங்கரமான உருவத்துடன் வந்து நிற்கும் உன்னை காலத்தைக் காக்கும் மனிதனாக நியமித்து, கால பைரவர் என பெயர் மாற்றுகிறேன். நீ மக்களுடைய பாவங்களை ஏற்று, தீயவர்களை அழிப்பதோடு, இறந்தவர்கள் மோட்சம் அடையச் செல்லும் காசிக்கு சென்று காசிராஜனாக இரு என்று கூறி ஆசீர்வதித்தார்.

**பைரவர்**

பிரம்மாவின் கூற்றை இதுவரை பொறுமையாக கேட்டுக் கொண்டிருந்த, அம்மனிதன் பிரம்மாவின் ஐந்து தலைகளில் ஒன்றைத் துண்டித்து தன் கைகளில் ஏந்தினான். பின் சிவன் தன் உண்மையான உருவத்திற்கு மாறி, பிரம்மாவே உன்னுடைய எந்த தலை என்னை நிந்தித்து பாவத்தைப் பெற்றதோ, அந்த தலையை பைரவர் துண்டித்துவிட்டார் எனக் கூற, அப்போது தான் அனைவருக்கும் வந்திருப்பது சிவன் என்றே புரிய வந்தது. சிவனே தன் மற்றொரு அவதாரமான கால பைரவரைத் தோற்றுவித்துள்ளார்.

**கால பைரவனிடம் சிவனின் கூற்று**

பின் சிவன் தன்னால் தோற்றுவிக்கப்பட்ட கால பைரவனிடம் 'நீ பிரம்மாவின் தலையைத் துண்டித்ததினால் ஏற்பட்ட பாவத்தைப் போக்க, பிரம்மாவின் தலையை ஏந்திக் கொண்டு மூவுலகையும் சுற்றி பிட்சை பெற்றுக் கொண்டவாறு காசியை அடையுமாறு ' கூறினார். அப்படி சிவன் கூறிக் கொண்டிருக்கையில், பயங்கரமான முகத்துடன் இரத்தம் கக்கிக் கொண்டிருந்த பெண் அங்கு தோன்றினாள். அவளிடம் சிவபெருமான், 'நீ கால பைரவன் பின் பயமுறுத்திக் கொண்டே துரத்தி செல், அவன் காசியை அடைந்ததும் பயமுறுத்துவதை நிறுத்திவிடு, உன்னால் காசியில் இருக்க முடியாது என்றும் கூறினார்.

**மோட்சம் தரும் காசி**

இந்த நிகழ்ச்சியினால் தான் காசிக்கு சென்றால் மோட்சம் கிடைக்கும் என்ற பழமொழி வந்தது. இதன் காரணமாகத் தான் இறந்தவர்களுக்கு மோட்சம் கிடைக்க காசியில் உள்ள கால பைரவரை அனைவரும் வணங்குகின்றனர்.

பிரசுரம்

Saturday,April 2016 Tamil Boldsky online

## நன்றியுரை



சுண்டுகுளி மூலாய் வீதி அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் ஆலய மாகாகும்பாபிசேக பெருவிழா 21.08.2016 அன்று மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அந்தவகையில் இக்கும்பாபிசேக பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெறுவதற்கும் ஆலயம் மிக ஜொலிப்பாக வெளிப்பட்டதற்கும் மூல காரணங்களையும் நாம் கடந்து வந்த பாதையையும் சற்று நோக்குவோம்.

இவ்வாலய வரலாறு பற்றி பார்க்கும் போது சுமார் 150 வருடங்கள் அதாவது 1950 ஆண்டுகளிலிருந்தே வழிபாடு நடைபெற்றிருப்பதற்கான சான்றுகள் உள்ளன. மூலாய வீதி என்பது சுண்டுக்குளி இறையில் குருசோவீதியும் மத்தீயுஸ் வீதியையும் இணைக்கும் சுமார் 400அ தூர நீளமான வீதியாகும். இங்கே பல குடும்பங்கள் இந்துக்களாகவும் சில சகோதர மத குடும்பத்தவர்களும் வசித்து வந்தனர்.

செல்லத்துரை என்பவர் தனது காணிக்குள் மரபு வழியாக வைரவ ஆலயத்தை வைத்து வழிபட்டு வந்தார். பின்பு அவரது மகள் இராசமக்கா மிகவும் சிறப்பாக பூசை முறைகளை செய்து குல தெய்வத்தை ஆதரித்து வந்தார். அக்காலத்தில் சுமார் 23 பொங்கல்கள் விசாக திருநாளில் நடைபெற்று படையல்கள் அபிசேகங்கள், பூசைகள் சிறப்பாக நடைபெற்றுள்ளது. அக்காலங்களில் திருமதி இராசமக்கா அவர்களே பூசை செய்யும் பூசகராக மிகவும் சிறப்பாக அயலவர்கள் அனைவரையும் வைரவர் பால் இழுத்தார்.

பூசை வழிபாடுகள் நடைபெறும் போது அங்கு கோயில் வளாகத்திலேயே இருக்கும் ஒரு நாய் பக்தர்களுக்கு இடையூறு விளைக்காமல் சங்கு ஊதும் போது அந்நாய் தானும் அந்த இசைக்கேற்ப ஊளையிடுமாம்.

அங்கு ஒரு நாகபாம்பு வைரவ கோயிலை சுற்றி திரிவதை பக்தர்கள் அவதானித்துள்ளனராம். அந்த நாக பாம்பை கருவறையினுள்ளும் கூரை உள் முகட்டிலும் பலபக்தர்கள் அவதானித்துள்ளனராம்.

பல அடியார்கள் நேர்த்திக்கடன்கள் வைத்து அவர்கள் வேண்டுதல் நிறைவேறிய பின் கற்பூரதாங்கி, பஞ்சமணி கொத்து போன்ற பொருட்களை அன்பளிப்பு செய்தனராம். அரைபரப்பு காணியிலேயே 23 பொங்கள் இடம்பெற்றுள்ளது என நினைக்கும் ஒரு நேரத்தில் போது மெய்சிலிர்கின்றது.

அதனைத் தொடர்ந்து இராமக்காவின் மறைவு அத்தோடு அவரது மகன் சந்திரபோஸ் அயல்நாட்டு விஜயம் ஆலயத்துக்கு பேரிழப்பாகும். ஆயினும் பூசை வழிபாடுகளில் குறைவில்லை. செல்லத்துரை சோமசுந்தரம், துரைசிங்கம் தனபாலசிங்கம் ஐயாத்துரை சீவரட்ணம் மற்றும் பலர் ஆலயத்தை விளக்கேற்றி பூசைவழிபாடுகளை மேற்கொண்டனராம். அவர்களில் தம்பிள்ளை வழிவந்தோரும் செல்லத்துரை வழிவச்தோரும் ஆலய பராமரிப்புக்கு பெரிதும் பங்காற்றினராம்.

காலங்கள் உருண்டோடின. 1996 இடம்பெயர்வின் பின் ஆலயம் யுத்தகாலத்தில் சிறிது பாதிப்புள்ளாகி சூலம் இருப்பிடத்தை விட்டு விலகி கிழே கிடந்ததாகவும் அதை செல்லத்துரை சோமசுந்தரம் மீண்டும் இருப்பிடத்தில் வைத்து இடிபாடுகளை புனருத்தாபனம் செய்து பழைய நிலைக்கு கொண்டுவந்தாராம்.

பொதுவாக எமது இந்து தெய்வங்கள் தம்மை பராமரிப்பதற்கு தேவையான மானிடர்களை அவர்கள் கனவிலேயோ அல்லது சம்பங்கள் மூலமோ காட்சி கொடுத்து தமக்கென ஒருவரை நியமிக்கும் என்ற சான்றோர் வாக்கு உண்மையாகின்றது.

அதுமட்டுமன்றி எமது எம்பெருமான் தமது பக்தர்களை காத்தருள் புரிவதற்காக நள்ளிரவு வேளைகளில் வலம் வருவதாகவும் கூறப்படுகிறது. பலர் நள்ளிரவு வேளைகளில் ஓர் கறுத்த பெரிய நாய் உலாவுகின்றதை உணர்ந்ததாகவும் வெள்ளிப்பிரம்பு உலாவுகின்றதை கண்டதாகவும் சலங்கையொலி சத்தம் அதாவது காலில் சலங்கை கட்டி நடந்தால் எவ்வாறு ஒலியெழுப்புமோ அவ்வாறு கேட்பதாகவும் மெய்சிலிர்க்க கூறியுள்ளனராம்.

இது நள்ளிரவு வேளைகளில் இவ்வாறு சத்தம் கேட்டதல் அது எமது வைரவ பெருமான் நடமாடுகின்றார் என்ற நம்பிக்கையிலும் பலர் பயத்திலும் இரவு வேளைகளில் வெளியில் செல்லவில்லையாம்.

இவ்வாறு ஒருநாள் அயலவர் ஒருவர் சினிமா பார்த்துவிட்டு நள்ளிரவில் வீடு திரும்பி படுக்கைக்கு சென்றவராம். தம்மை யாரோ அழைக்கின்ற குரல் கேட்டு அவர் மீண்டும்

வெளியே செல்ல முற்பட்டு கதவை திறந்து முயற்சி செய்தும் அவருக்கு வெளியே போக முடியவில்லையாம். காரணம் ஒரு பெரிய நாய் வாசலிலிலே நின்று வழிமறித்ததாம். அதன் பின் தான் அழைத்த குரல் காற்று கறுப்பு பேய் குரலாக இருக்கலாம் என்றும் எம்பெருமான் தமது வாகனத்தின் மூலம் காந்தருளினார் என்றும் மெய்சிலிர்த்தாராம்.

பின்பு 2010களில் பிற்பகுதியில், அடியேன் வேலை நிமிர்த்தம் யாழ்ப்பாணம் வந்தபோது எமது குலதெய்வத்தை அடிக்கடி சென்று விளக்கேற்றுவதை வழக்கமாக கொண்டிருந்தேன்.

பின் 2012 ஆண்டு முதல் எனது அன்னையாரின் அறிவுறுத்தலுக்கமைய நாள்தொறும் விளக்கேற்ற ஆரம்பித்தேன். மூத்த உறுப்பினர் செல்லத்துரை சோமு ஐயாவின் அறிவுரைப்படி அடியேன் காலையிலும் மாலையில் சோமு ஐயாவுமாக விளக்கேற்பட்டது.

அன்றிலிருந்து ஓர் ஆசை. கோயில் அழகாக்கப்படாதா என்று. அப்போது கோயிலையும் அப்போதிருந்த நிலையையும் 2011 வந்தபோதே ஒருநாள் புகைப்படம் எடுத்து ஒரு சிறிய முன்யோசனை வரையையும் எனது சகோதரன் மயூரன் மற்றும் பகீரதன் ஆகியோருடன் சேர்ந்து வரைந்து அக்கோயிலால் பயன்பெற்ற அருள்பெற்ற அனைவருக்கு அனுப்பினோம். (வரைபு இணைக்கப்பட்டுள்ளது)

எம்பெருமான் ஏறத்தாழ ஐந்து தலைமுறை மானிடர்களை கண்டுவிட்டார். அவரை வழிபட்டு பல வெற்றிகளையும் சுகபோகங்களை கண்ட மக்கள் எம்பெருமானை கைவிடுவார்களா?. ஆலய இந்த நிலைகண்டு மௌனிப்பார்களா? நிச்சயம் இல்லை. கோயில் இந்நிலையையும் புனருத்தாபன யோசனையும் அவர்களுக்கு தெரியப்படுத்தினாலே போதும், அவர்கள் வாரி வழங்குவர். அதனால் ஒரு ஒருங்கிணைப்பாளர் வேலையை செய்வோம் என்று எண்ணினேன். அனைவருக்கும் தெரியப்படுத்தினோம். பலர் சாதகமான பதில் அளித்தனர். ஆயினும் அம்முயற்சி உடனே மெய்க்கவில்லை. காலம் உருண்டோடியது.

2015 நடுப்பகுதியில் திருமண விழாவில் அடியேனது வீட்டிற்கு வர்ணம் பூசும் வேலைகள் நடைபெற்ற அடியேனுக்கு ஒரு இனம்புரியாத கவலை. ஆலய புனருத்தாபன முயற்சியை தீவிரப்படுத்தவில்லை. ஆலயம் கவலைக்குரிய நிலையில் உள்ளபோது எம்வீட்டுக்கு மட்டும் வர்ணமா என்று யாரோ கேட்பது போல உணர்ந்தோர். அன்று திடசங்கர்பம் பூண்டேன். மீண்டும் வரையப்பட்ட முன்யோசனையை தெரியப்படுத்துவோம். பெறப்படும் பங்களிப்புகேற்ப ஆலயத்தை புனருத்தாபனம் செய்வோம் என்று. 2016 ஆரம்பத்தில் உள்நாட்டு வெளிநாட்டு அடியவர்கள் அனைவரிடமும் நிதியுதவி கோரினோம். தாம் சென்ற இடமெல்லாம் வெற்றியே யாரும் இல்லையென்றாது வாரி வழங்கினர்.

2016 மாசி சோமசுந்தர குருக்களிடம் அறிவுரை கேட்டேன். அவர் உடனே வந்து எமது ஆலயத்தை பார்வையிட்டு அறிவுரை கூறினார். அக்காணி உரிமையாளரின் சம்மந்தியாரான வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை அவர்களிடம் அனுமதியும் அறிவுரையும்

கேட்டேன். அவர் தனது மருமகன் மற்றும் சம்மந்தியாருடன் பேசி இனங்கினார். அவர் ஊக்கமும் அளித்தார்.

அன்று ஒரு நாள் ஆலயத்தில் விளக்கேற்றும் போது ஆலய வலது பக்க முன்றலில் தென்னை மரத்திலிருந்து ஒரு பாம்பு விழுந்து சத்தம் கேட்டு மெய்சிலிர்த்தேன். அப் பாம்பு விழுந்த இடத்தில் சிறிது நேரம் காட்சி அளித்து விட்டு சென்று விட்டது.

அதன் பின்பு சோமசுந்தர குருக்கள் பாலஸ்தானம் செய்வதற்கு சிறிய இருப்பிம் அமைக்குமாறு காட்டிய இடம் வேறொன்றுமில்லை அதே பாம்பு விழுந்து காட்டிய இடம் அப்பொழுது குருக்களிடம் நடந்தவற்றை கூறினேன். அதற்கு குருக்கள் எம்பெருமானே தாம் தற்காலிகமாக எழுந்தருளும் இடத்தை உமக்கு பாம்பு வடிவில் அடையாளம் காட்டியுள்ளார் என்று மெய்சிலிர்த்தார்.

பின்பு 29.04.2016 காலை 06.29 மணிக்கு எமது எம்பெருமான் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு தீப ஆராதனைகள் நடத்தினார் எமது அன்புக்கும் மதிப்புக்குரிய சோமசுந்தர குருக்கள் முத்துலிங்கம் சிவானந்தனின் கண்காணிப்பில் தர்சன், சிவம், சேகர் என மூன்று வேலையாட்கள் மூலம் 07.05.2016 வேலைகள் ஆரம்பமாயின. கோயிலின் பழைய அமைப்பு முற்றாக தகர்கப்பட்டது.

ஆரா்ரி பாஸ்கரன் ஐயா அவர்கள் நிலையம் எடுத்துகொடுத்தார். வேலைகள் நடைபெற்றாலும் பண்டிகை கட்டுவதில் சிரமம் ஏற்படவேலைகள் ஸ்தம்பித்தன. பின்பு நாக ஜெயக்குமார், மற்றும் ஆசாரி பாஸ்கரன் அவர்களின் ஆலோசனையின் பிரகாரம் பிரபல ஆசாரி (நல்லூர் கோபுரங்கள்) வீரசிங்கம் அவர்கள் 23.05.2016 அன்று பார்வையிட்டு தாம் கட்டிதருவதாக வாக்குறுதி அளித்தார்.

பின்னர் அவரது இளைய சகோதரர் ஆசாரி துஸ்சியந்தன் குழுவினர் 7.06.2016 மிகுதி வேலைகளை மேற்கொண்டனர்.

24.06.2016 இருப்பிட கல் வைக்கப்பட்டது.

26.06.2016 அன்று கூரை வேலையும் ஆரம்பிக்கப்பட்டது.

28.06.2016 கோயில் வேலைகள் நிறைவு செய்யப்பட்டது.

13.07.2016 வெளிகேற் உள்கேற் வேலைகள் இடம்பெற்றது.

06.07.2016 மின் இணைப்பு வேலைகள் வழங்கப்பட்டது.

07.08.2016 ஆசாரி துஸ்யந்தன் அவர்களால் வர்ணம் பூச்சு ஆரம்பிக்கப்பட்ட்து.

10.07.2016 குளாய்க்கிணறு அமைக்கப்பட்டது.


8473(P)


















மகாகும்பாபிசேகம்

பிரம்ம ஸ்ரீ மா. சோமசுந்தரக்குருக்கள் தலைமையில் கும்பாபிசேக நிகழ்வுகள் 2016 ஆவணி 19, 20, 21 மூன்று நாட்களும் காலை மாலை என இருவேளையும் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. 19ம் திகதி அனுகை, வாஸ்துசாந்தி, நவக்கிரக ஓமம், கணபதி ஓமம் என்பனவும் 20ம் திகதி வைரவர் பாலஸ்தாபன இருப்பில் இருந்து புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட இருப்பிடத்தில் எழுந்தருளினார். அதனைத் தொடர்ந்து எம்பெருமானுக்கு பால்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. பல அடியவர்கள் தமது கைகளினால் எம்பெருமானுக்கு பால்காப்பு சாத்தி வழிபட்டனர். பின்பு புண்ணியாவாசனம் விம்பசுத்தி என்பனவும் இடம்பெற்றது. அத்தோடு காணி உரிமையாளரின் மகனும் வாழ்நாள் பேராசிரியரின் பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மருமகனாருமான மஜிதரன் பிறநாட்டிலிருந்து வருகை தந்தார். 21. 08. 2016 அன் மகாகும்பாபிசேகம் மிகவும் சிறப்பாக பல அடியவர்கள் புடைசூழ இடம்பெற்றது.

பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மற்றும் அவரின் மகளார் குடும்பம் கண்காணிப்பில் கும்பாபிசேகம் இனிதே நிறைவேறியது.





கும்பாபிசேக சிறப்புக்களை நோக்குமிடத்து யாழ்ப்பாணத்திலே மிகவும் புகழ்பூத்த சிவாச்சார் தர்மஸதர் குருகுலம் மகாதேவ குருக்கள் வருகை தந்து ஆசி வழங்கியமை சிறப்பு. இந்தியா பழனி முருகன் கோயில் குருக்கள் இங்கு வருகை தந்து ஆசியுரையும் சொற்பொழிவும் வழங்கியமை அதிலும் சிறப்பு.

திருஞானசம்பந்த ஆதினம் முதல்வர் வந்து ஆசிச்செய்தி வழங்கியது அதிலும் சிறப்பு.

சிமையாமிசன் வதிவிட ஆச்சாரியார் வருகை தந்து ஆசிச்செய்தி வழங்கியது அதிலும் சிறப்பு. புகழ்பெற்ற மேள நாதஸ்வர வித்துவான் பிச்சையப்பா மூத்தபுதல்வன் மேள நாதஸ்வரம் வாசித்ததும் சிறப்பு. மகாதேவ சோமசுந்தரக் குருக்கள் கும்பாவிசேக தலைமை குருவாக இருந்தது மேலும் சிறப்பு. காணி உரிமையாளர் புதல்வன் லண்டனில் இருந்து இங்கு வந்து கலந்து கொண்டது மிகச்சிறப்பு. வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை ஐயா அவர்கள் தலமைதாங்கியது சிறப்பிலும் சிறப்பு.

ஆகவே யாரும் எமது கோயிலை சுற்றளவை மையமாக கொண்டு கூறமுடியாது சுற்றளவில் சிறிதானாலும் எம்பெருமானின் திருவருளோ மிகப்பெரியது. அதனால் தான் மிகப்பெரிய புகழ்பூத்தவர்கள் வந்து கலந்து சிறப்பித்துள்ளனர். கடுகு சிறிது காரம் பெரிதுக்கு ஒப்பாகும்.


ஓம் கடோ வைரவா!

வ. குமரதீபன், அயலவன் (தம்பிப்பிள்ளையின் பூட்டன்)
சிரேஸ்டவிரிவுரையாளர்,
சந்தைப்படுத்தல் துறை,
யாழ்பல்கலைக்கழகம்.



## இணைப்பு : வரைபு

## சுண்டுக்குளி வைரவர் ஆலயம் ஆரம்ப நிலையும் முயற்சியும்



மேற்படி ஆலய பனாமைப்ப செயற்பாட்டில் பின்வரும் செயற்றிட்டக்கை வளாங்குள்ளோம்.



சுண்டுக்குளி வைரவர் கோயிலானது மிகவும் பழைமை வாய்ந்த ஒன்றாககவும் எமது சந்ததியினரின் குலதெய்வமாகவும் விளங்கியது. இக்கோயிலானது ஆரம்ப காலத்தில் திருமதி இராசமக்கா அவர்களினால் பராமரிக்கப்பட்டு வந்தது. இராசமக்காவின் காணி எல்லைக்குள் அமைந்த எமது காவல் தெய்வமான வைரவர் தொன்று தொட்டு எமக்கு அருள் புரிந்து வந்துள்ளார். எமது முன்னோர்கள் அக்கோயிலையே குலதெய்வமாக பூசித்து பொங்கல், பூசைகள் மற்றும் காணிக்கைகள் என தமது வழிபாட்டை நிறைவேற்றி வாழ்வில் முன்னேற்றம் கண்டுள்ளனர். தற்பொழுது எம்மில் பலர் இன்றுவரை வழிபாட்டிலும் அக்கோயிலை ஆதரித்தும் பூசை முறைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

இருப்பினும் இப்பொழுது அவ்வாலயத்தின் நிலை என்ன? எம் அனைவருக்கும் தெரிந்திருந்தாலும் ஆலயத்தின் தற்போதைய நிலைமையினை எடுத்து உரைப்பது எமது கடமையாகும். ஆலய சூழல் மற்றும் சுற்றுப்புறம் மற்றும் ஆலயம் மிகவும் கவலைக்கிடமாக உள்ளதை நாம் ஆதார பூர்வமாகவும் சாட்சிகளுடனும் உங்களுக்கு எடுத்துரைக்க உள்ளோம்.

1. ஆலய காணியானது தற்பொழுது இராமக்காவிடமிருந்து கைமாறியுள்ளது அதாவது பிறமதத் தலைவர் ஒருவரின் உரிமைக்குள்ளாகிவிட்டது. ஆதலால் பாதைப்பிரச்சினையும் அக்கோயில் பராமரிப்பும் எதிர்காலத்தில் கேள்விக் குறியாகிவிட்டது.

   இது தொடர்பாக நாம் (அவ் உரிமையாளருடன் கலந்து உரையாடிய போது கோயில் காணியை கோயிலுக்கெ விடுவதாகவும் அதற்கு பாதை விடுவதாகவும் வாக்குறுதி அளித்தார்.

   தற்பொழுது கோயிலின் நிலை பற்றி பார்க்கும் போது கோயில் (கோபுரம்) மிகவும் பாழடைந்து அதாவது பழைமையாக நிறப்பூச்சு மறைந்து காணப்படுகிறது.
   மேலும் கூரையானது செயலற்று மழைகாலங்களில் எமது தெய்வம் மழையில் நனைகின்ற சூழல் காணப்படுகின்றது.

   கோயில் உள்வீதி மிகவும் சீரற்று உள்ளது. சுற்றுப்புற வேலிச்சுவர் இல்லாததால் கவனிப்பார் அற்று திறந்தவெளியாக உள்ளது.

மேலும் கோயிலின் சிறு கோபுரம் அதாவது கருவறை கதவின்றி உள்ளதால் பாதுகாப்பற்று மேலும் கோழி, நாய் போன்ற பிராணிகள் உட்சென்று நடமாடுகின்றன. அதுமட்டுமன்றி பூசை வழிபாடுகள் வைப்பதற்கும் பராமரிப்பதற்கும் (எண்ணெய், கற்பூரம், திரி, தீப்பெட்டி) ஒரு பாதுகாப்பான இடம், அறை அல்லது பூட்டு போட்ட பெட்டியேனும் இல்லை. அப்பொருட்கள் சிதறிக்கிடப்பதுடன் பக்தர்கள் மேலும் பூசைப்பொருட்களை கொண்டுவந்து சேர்ப்பதை தவிர்க்கின்றனர் எனலாம்.

இவ்வாறு ஆலயம் மிகவும் கேள்விக்குறியான நிலையும் பக்தர்களும் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு எமது குல தெய்வத்தை அநாதரவாக விடலாமா?



# ஆலய புனருத்தாரண திருப்பணிக்கான அடியார்களிடம் இருந்தும் ஏனைய வழிகளிலும் கிடைத்த நிதி பங்களிப்புக்கள்

அட்டவணை 1

| திகதி | விபரம் | விலாசம் | தொகை |
|---|---|---|---|
| 01. | திரு. திருமதி. மஜீதரன் குடும்பம் | இங்கிலாந்து | 60000.00 |
| 02. | திருமதி. யோகேஸ்வரி வசந்தகுமார் (குமரதீபன்) | சுண்டுக்குளி | 60000.00 |
| 03. | திருமதி. புனிதவதி பஞ்சலிங்கம் (பகீரதன்) | பழைய பூங்காவீதி | 51000.00 |
| 04. | திரு. திருமதி. பாலசிங்கம் குடும்பம் | குருசோ வீதி | 50000.00 |
| 05. | திரு. திருமதி. ரதீஸ்குமார் (நரேன்) | இங்கிலாந்து | 50000.00 |
| 06. | திரு. திருமதி (மயுரினி) பத்மகாந்தன் | பிரான்ஸ் | 50000.00 |
| 07. | திரு. திருமதி. ரங்கேஸ்வரன் | இங்கிலாந்து | 30000.00 |
| 08. | திரு. திருமதி. கிருபாகரன் (டக்சினி) | பிரான்ஸ் | 30000.00 |
| 09. | திரு. திருமதி. உமாபரன் (அனுசா) | சுவிஸ் | 25000.00 |
| 10. | திரு. T. ரமேஸ்வரன் குடும்பம் | பெல்ஜியம் | 25000.00 |
| 11. | திரு. திருமதி. கிருஷ்ணகுமார் (மாலினி) | ஜேர்மனி | 23285.00 |
| 12. | திரு. திருமதிதேவமகேஸ்வரன் (கமலா) | மூலாய்வீதி | 20000.00 |
| 13. | வாழ்நாள்பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை | அத்தியடி | 20000.00 |
| 14. | திரு. திருமதி. சிவராமலிங்கம் | குருசோவீதி | 15000.00 |
| 15. | திரு. திருமதி. தயாளன் (தீபகுமாரி) | பிரான்ஸ் | 15000.00 |
| 16. | திரு. நிமலநாதன் - மைதிலி | லண்டன் | 15000.00 |
| 17. | திரு. திருமதி. து. தனபாலசிங்கம் | ஈச்சமோட்டை | 10000.00 |
| 18. | திரு. திருமதி. பார்த்தீபன் (பாமினி) | வடலியடைப்பு | 10000.00 |
| 19. | திரு. திருமதி. விஜயேந்திரன் (நந்தினி) | திருநெல்வேலி | 10000.00 |
| 20. | திரு. திருமதி. அன்பழகன் (கலைவாணி) | தாவடி | 10000.00 |
| 21. | திரு. திருமதி. ஜெயந்தன் (டயானி) | நல்லூர் | 10000.00 |
| 22. | திரு. திருமதி. ரதீஸ்வரன் (சுரேன்) | வவுனியா | 10000.00 |
| 23. | திரு. திருமதி. து. சோமசுந்தரம் | கொக்குவில் | 5000.00 |
| 24. | ஐயாத்தரை குடும்பம் | மல்லாகம் | 5000.00 |
| 25. | திரு. திருமதி. கந்தையா (நகேஸ்வரி) | மூலாய்வீதி | 5000.00 |
| 26. | திரு. திருமதி. நிர்மலானந்தன் | கொக்குவில் | 5000.00 |
| 27. | திரு. மு. லோகேந்திரா (காசி) | ஈச்சமோட்டை | 5000.00 |
| 28. | திரு. திருமதி. ஜெகானந்தன் | கல்வியன்பாடு | 5000.00 |
| 29. | திரு. திருமதி. சியாம் (திசா) | கனடா | 5000.00 |

| | | | |
|---|---|---|---|
| 30. | திரு. திருமதி. சபானந் (சூட்டி) | கொக்குவில் | 5000.00 |
| 31. | திரு. திருமதி. மயூரன் | இணுவில் | 5000.00 |
| 32. | திரு. வாசன் | மூலாய்வீதி | 5000.00 |
| 33. | திரு. புஸ்பநாதன் | மூலாய்வீதி | 5000.00 |
| 34. | திரு. S. சிவராஜேஸ்வரன் | குருசோ வீதி | 2000.00 |
| 35. | திருமதி. சரோஜா | குருசோ வீதி | 1000.00 |
| 36. | திருமதி. இ. அமுதவல்லி | மூலாய் | 1000.00 |
| 37. | திரு. துசியந்தன் - ஆசாரி | அராலி | 1000.00 |
| 38. | திரு. சங்கர் சர்மா | நாயன்மார்கட்டு | 1000.00 |
| | | | 660285.00 |
| i | மீதி மண் விற்பனை - வருமானம் | 2000.00 | |
| ii | மீதி செங்கல் விற்பனை - வருமானம் | 3500.00 | |
| iii | வாழைக்குலை விற்பனை வருமானம் | 1620.00 | |
| iv | உண்டியல் வரவு | 4807.00 | 11927.00 |
| | மொத்த வருமானம் | | 672212.00 |

# வரவு செலவு கணக்கு

| விபரம் | இல | தொகை | தொகை |
|---|---|---|---|
| சேகரிப்புக்கள் | | 672212.00 | |
| விளம்பர சேகரிப்பு | | 89500.00 | |
| | | | 761712.00 |
| **01. பாலஸ்தாபன செலவுகள்** | | | |
| அபிசேக பொருட்கள் | 1 | 1790.00 | |
| மாலை, வைக்கோல் | 2 | 600.00 | |
| இருப்பிடம் கட்டும் கூலி | 3 | 1000.00 | |
| இருப்பிடமேல முகப்பு- Welding | 4 | 6500.00 | |
| ஆட்டோ செலவு Welding | 5 | 150.00 | |
| தட்சணை | 6 | 5400.00 | |
| **02. புனருத்தாரண செலவுகள்** | | | |
| Gate உள்,வெளி செய்த கூலி | 7 | 30000.00 | |
| மண் (1டக்டர்) | 8 | 7000.00 | |
| சீமேந்து, Paint, ஆணி, வாளி, கடகம் | 9 | 6035.00 | |
| காட்டுகல் - (2 டக்ரர்) | 10 | 8500.00 | |
| மண் - 1டிப்பர், சல்லி - 1 டக்ரர் | 11 | 31000.00 | |
| சீமேந்து - 10பைக்கற் | 12 | 8600.00 | |
| மேசன் கூலி | 13 | 37300.00 | |
| ஆசாரி கூலி மற்றும் பொம்மை | 14 | 115500.00 | |
| தனு எலெட்ரிகல் | 15 | 3520.00 | |
| தனு எலெட்ரிகல் | 16 | 4012.00 | |
| Clty Hardware & Stores | 17 | 22560.00 | |
| New lucky Hardware | 18 | 21813.00 | |
| New Lucky Hardware | 19 | 30300.00 | |
| Sri Rankanathan - ஓடு 700 | 20 | 23110.00 | |
| Shanmugalingam Hardware | 21 | 45000.00 | |
| MPS Brothers மரங்கள் | 22 | 66476.00 | |
| Sivan Dillers - குளாய் கிணறு | 23 | 20000.00 | |
| Navayanan Titles & Hard ware | 24 | 13300.00 | |
| Akila கட்டடப்பொருள் | 25 | 7420.00 | |
| தட்சணை மற்றும் ஆசனகல் | 26 | 17500.00 | |
| தச்சன் கூலி வேலை | 27 | 22000.00 | |

| | | | |
|---|---|---|---|
| மின்சார இணைப்பு கூலி | 28 | 5475.00 | |
| குழாய் கிணறு,கைப்பம்செலவு துப்பரவு | 29 | 13100.00 | |
| Gate உள், வெளி வர்ணம்பூசிய செலவு | 30 | 1400.00 | |
| தென்னை மரம் தறித்த கூலி | 31 | 5000.00 | |
| தேனீர் செலவு | 32 | 1620.00 | |
| | | | |
| **03. கும்பாபிசேக செலவு** | | | |
| சிவசம்பு அபிசேகபொருட்கள், வேம்பு | 33 | 16070.00 | |
| தட்வணை , ஆசாரி, மேசன் | 34 | 57000.00 | |
| மேளம் | 35 | 10000.00 | |
| ஒலி, மாலை, பஜனை, வாழை | 36 | 20000.00 | |
| குடம், ழுற்றும் பல பொருட்கள் | 37 | 2190.00 | |
| தேங்காய் மற்றும்அன்னதானபொருட்கள் | 38 | 3410.00 | |
| பழவகை மற்றும் மரக்கறி | 39 | 7090.00 | |
| பொன்னாடை கொள்வனவு | 40 | 4800.00 | |
| Bulb மற்றும் பூசணி | 41 | 560.00 | |
| மலர் வெளியீடு | 42 | 55000.00 | |
| மொத்த செலவுகள் | | | (759101.00) |
| | | | |
| மீ/வ/ கையிலுள்ள காசு | | | 2611.00 |


B473(7)























































# Star Rest

021 492 5521
0773846330

Kandy Road,
Paranthan.


A/C Non A/C Rooms & Restaurent





021 490 6621
0773846330

Vallai Road,
Thoddilady,
Jaffna,


பேள் நியூ பசன் கவுஸ்
PEARL New Fashion House
பிரதான வீதி,
சங்கானை.
அன்பளிப்புப் பொருட்களுக்கும்
அழகுசாதனப் பொருட்களிற்கும்
பேள் நியூ பசன் கவுஸ்


முத்தையா வெதுப்பகம்
சிறந்த பாண் உற்பத்தியாளர்கள்
இங்கே சுகாதார முறைப்படி தயாரித்த
கேக் வகைகள், பிஸ்கட் வகைகள், சிற்றுண்டி வகைகள்,
உடனுக்குடன் தயாரித்துக் கொடுக்கப்படும்
ஓடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்
mobil :
0779049691
0771310841
0765343034
021 221 5550
371/1 Main Street, Jaffna.



செல்வி நகை அகம்
Chelvi Nakai Agam
Manufacturers of Gold Jewels
புன்னகைத்திடும் தங்க நகைகளைப்
பெற்றிட செல்வி நகை அகம்
1/3 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். 021 222 9441




Luxon Communication
தரமான போட்டோக் கொப்பிகளுக்கும்
பாடசாலை உபகரணங்களுக்கும்
மற்றும் பக்ஸ் (Fax) அனுப்புவதற்கும்
நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்
LUXON Communication
Tel No : 021 222 3331
021 222 6149
60,Eachchamoddai Road,
Jaffna.
E-mail : Vimluxon11@yahoo.com




ஜீவா பேக்கரி
சிறந்த பாண் உற்பத்தியாளர்கள்
இங்கே சுகாதார முறைப்படி தயாரித்த
கேக் வகைகள், பிஸ்கட் வகைகள், சிற்றுண்டி வகைகள்,
உடனுக்குடன் தயாரித்துக் கொடுக்கப்படும்
T.P No :
021 222 0493
077 7170531
077 9596629
189, Columbagam Road,
Pandiyan Thalvu, Chundikuli,
Jaffna.




VAI

**Varathar Accounting Institute**

பலாலி வீதி, கோண்டாவில்

தொலைபேசி இல : 0774598499

அனுமதிக் கட்டணம் இல்லை மாணவர்கள் மீது தனிப்பட்ட கவனம்

**A/L கணக்கீடு**

**A.P.பகீரதன்** *B.B.A(Fm.Spl)*

A/L-2019 தை 02 முதல்
Mon, Wed : 5 -6

A/L-Day Class
தை 02 முதல்
Mon -Fri : 6.00 - 7.30 Pm



Roobiga Jewellers
164, Kasthuriyar Road,
Jaffna.
22கரட் தங்க நகைகள் ஓடருக்கு
உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
ரூபிகா ஜுவல்லறி
தங்கப்பவுண் நகை வியாபாரம்
164 கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.




ESP நாகரத்தினம்
சகலவிதமான சேடர்கள், பைப்வகைகள்,
பூட்டுக்கள்,கண்ணாடிகள், பெயின்ற் வகைகள்,
மற்றும் அலுமினிய பிற்றிங் வேலைகளுக்கும்
நாடவேண்டிய ஒரே இடம்
யாழ்ப்பாணம்

Dialog

SMART BLASTER

# Package

## Deposit -1500/-

**500 Minutes (D2D )**
**2GB Data (1GB Day,1GB Night)**
+
**Free Smart Phone**



**Samsung J1 Nxt Prime**

## Rs.699/- Per Month Only (Excluding tax)

## Document Required


சம்பள அறிக்கை -**Latest Salary Slip**
ஊழியர் அடையாள அட்டை-**Work ID**
தேசிய அடையாள அட்டை-**Copy Of NIC**
வதிவிட உறுதிப்படுத்தல்-**Proof of Billing**


**{Customer has to use the connection minimum 24 months}**

## Contacts Number

A.Jeyachandran
Associate Business Development Manager
Enterprise Engagement - Next Generation Retail Sales
0777-336676

Dialog


Shree Kala Tex
சுபமுகூர்த்தப்பட்டு
சாரி வகைகள், பஞ்சாபி சோளகள்,
ஸ்கேட் & பிளவுஸ்,
சிறுவர்களுக்கேற்ற ரெடிமேட் ஆடைகள்
மகத்தான தெரிவிற்கு
Palaly Road, Thirunelvely.
Tel : 021 492 3473, 077 711 0525
பலாலி வீதி, திருநெல்வேலி


City Tex Tailors
Ladies, Tailoring
44, Campus Lane,
Thirunrlvely.


SINCE 1844
Cargills
30%
விலைக்கழிவு
CARGILLS FOOD CITY
No 54, Kannathiddy Road,
Jaffna.

# Shanthy Medial





**360/4 Main Road,**
**Chundukkuli.**



**State Bank of India** *With you - all the way* *Pure Banking. Nothing else.*

LOAN Interest
Rate Now
@ 13.99%
onwards



Our Branches in 39 Countries
with the remittance service

**No - 14, Point Pedro Road,**
**Jaffna.**
(Near Vembady Junction)
T.P : 021-2219982

Condition apply



# சிவசம்பு களஞ்சியம்

அபிஷேக பல்பொருள் வாணிபம்





03,மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

021 222 1783





# தேவி ஸ்ரோஸ்

# Thevi Stores

பலசரக்கு பொருட்களையும் விவசாய உள்ளீடுகளையும்
நியாய விலையில் நீங்கள் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

Sunlight


தேவி ஸ்ரோஸ்

102 பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.



# SURYA ENGNEERING WORKS

Lathe work, Welding,
Reboring, Crank cutting



No 19 Sirampiyadi Lane,
Jaffna.

Tel : 077 6029656

# தர்சினி அமுதம்


உரிமையாளர் : சி.சிவகுமார்

எங்களிடம் சகலவிதமான
அபிஷேகப் பொருட்கள்
அபரகிரியைக்கான பொருட்கள், வெற்றிலை,
(முழு)பாக்கு, பாக்குச் சீவல், புகையிலை,
சுருட்டு முதலியன மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

0212225733
0775020333
0776152945

89,90 மேற்கு மார்க்கட்,
யாழ்ப்பாணம்.


குறிப்பிட்ட காலப்பகுதியில் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்
மும்மொழிகளிலும் வாகனப்பயிற்சி
எழுத, சிக்கத் தெரியாதவர்களுக்கு விசேட வீடியோ வகுப்பு நடைமுறை
கனரக சாரதி அனுமதிப்பத்திரம் பெற அசோக் லேடன் பஸ் மூலம் இலகுவான பயிற்சி
தவணைமுறைக் கட்டணமும், விரும்பிய நேரத்திலான பயிற்சி
இரவு நேர வாகனப்பயிற்சி 6.00p.m - 9.00p.m
NO.1 சாரதி பயிற்சிப் பாடசாலை
KIRUBA LEARNERS
KIRUBA LEARNERS | Government Approved Driving Trainning School
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக (A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
தலைமைக் காரியாலயம் : 226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 4353 / 021 492 3200 / 077 722 5292
யாழ்ப்பாணம் :
முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201 071 454 6958
விக்னேஸ்வரா கல்லூரி வீதி, நெல்லியடி. 021 300 6550 071 454 6957
இல. 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். 021 224 2022 071 454 6956
கண்டி வீதி, சாவகச்சேரி. (பேருந்து நிலையம் அண்மையில்) 021 492 3202 021 227 0700
கிளிநொச்சி :
A9 வீதி, கிளிநொச்சி. (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
புளியடிச்சந்தி, முல்லை வீதி, விசுவமடு. 021 320 1515 071 454 6955
வாடியடி சந்தி, பூநகரி. 021 320 1818 071 454 6955
நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544 071 454 6955
மன்னார் :
இல. 94, பிரதான வீதி, மன்னார். 071 988 7699 077 847 2732
வவுனியா :
216, A9 வீதி, வவுனியா. (வசந்தி திரையரங்கு முன்) 021 222 7777 071 454 6953



# EARN A BRITISH MBA AND ADVANCE YOUR CAREER

## *SPECIAL EXEMPTION FOR HND STUDENTS

## PGD
Strategic Management & Leadership

Are you a professional with several years of experience and fretting about lost opportunities?

## MBA
Master in Business Administration

Registrations Open for
**FEBRUARY / SEPTEMBER INTAKE**

Delivered accoding to the highest academic and industry standards

Awarding Body
PEARSON

Awarded by
LONDON METROPOLITAN UNIVERSITY

DURATION
**18 MONTHS**

Special Offers Available*
*Conditions Apply

HOTLINE
**077 309 9 308**

**ESOFT METRO CAMPUS**
No.137,K/K.S Road, Jaffna Tel : 021 222 4142

Follow us on

Sri Lanka's Largest Private Sector Higher Education Network